37 No. M-3660 1st JANUARY 1938

# கிருஹலக்ஷ்மி

38.



**HALAKSHMI**

# KING OF TONICS




அமிருத நரம்புகளுக்கு வலு
வலிக்குள் மருந்து.


GRIHALAKSHMI

# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

OFFICE OF THE

பிரசுரிப்பவர்

டாக்டர் எஸ். சேஷகிா

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ., (ஆனர்ஸ்)


மலர் 2] ஜனவரி 1938 [இதழ் 1

PRINTED AT THE LODHRA PRESS, ROYAPETTAH, MADRAS.

159947

# கிரஹலக்ஷ்மி

## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 4-8-0. தனிப்பிரதி விலை அணா 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணா போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலுவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிரிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனாவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே. என். கேசரி, 15, வெஸ்ட்காட் ரோட், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.





## ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்த ஜுரம், கப ஜுரம் முதலிய எல்லாவித ஜுரங்களையும் ஆச்சர்யப்படும்படி நிவர்த்தி செய்வதில் முதன்மையானது

## அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த இருபத்தைந்து வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணவிசேஷத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளூயென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜுரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| இதன் விலை | 6 அவுன்ஸ் புட்டி | ரூ. | 2 8 0 |
| ,, | 3 ,, | ,, | 1 8 0 |
| ,, | 1 ,, | ,, | 0 8 0 |

**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதராஸ்**

# பொருளடக்கம்


1. இரண்டாம் ஆண்டு .... .... .... 1
2. நீதி இலாகாவில் முதல் இந்திய ஸ்திரீ .... .... 3
3. மொல்ல ஜயந்தி — "குகப்ரியை" .... .... 6
4. கிரஹலக்ஷ்மியை வேண்டுதல் — திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... 9
5. வாழ்த்து — ஸ்ரீமதி பார்வதி .... .... 10
6. கமலத்தின் புடவை — "இச்சு" .... .... 11
7. கன்னியாகுமரி — திரு. எம். என். கிருஷ்ணமாச்சாரி .... 15
8. தேவி ஸ்ரீ அகல்யாபாய் — ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள் .... 17
9. பஞ்சக்ரோச க்ஷேத்திரங்கள் — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... 19
10. அகங்களிலிருக்கும் சில சாமான்களை சுத்திசெய்யும் முறை—"நளினி" 22
11. விதவைகளுக்கு விமோசனம் உண்டா?
— திரு. செ. கு. இராமசாமி பிள்ளை .... 25
12. சொத்துரிமை வேண்டும் — ஸ்ரீமதி கோமளம் .... .... 27
13. விருத்த—கன்னி விவாஹத்தடை — ஸ்ரீமதி சுனீதிகோஷ் .... 30
14. கல்யாணி — "ஜயம்" .... .... .... 33
15. தாய்மாண்பு — ஸ்ரீ சுப்ரமண்யபாரதி .... .... 37
16. தாடகை தாரங்கொண்டவன் தலைவிதி
— ஸ்ரீமதி எஸ். பி. சூசையம்மாள் .... 38
17. லட்வியா — ஸ்ரீமதி. ஜீ. கிரிஜா .... .... 41
18. லீலா—கிருஷ்ணன் — திரு. ஆ. வெ. சுப்ரமண்யம் .... 45
19. ஸ்ரீமதி துர்காபாய் — "கண்ணன்" .... .... 49
20. தனுர்மாச வைபவம் அல்லது பீமசேனரின் பக்தி — "ஜனககுமாரி" 53
21. சில மஹாராஷ்டிர பக்ஷணங்கள் — ஸ்ரீமதி துவாரகாபாய் .... 57
22. ஆரோக்கிய குழந்தையும், வியாதிபட்ட சிசுவும் — ஸ்ரீமதி. எஸ். கமலா 60
23. செய்தித்திரட்டு .... .... .... 62
24. கதம்பம் .... .... .... 64
25. விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... 66
26. சினிமா செய்திகள் .... .... .... 68
27. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 69
28. பஞ்சாங்கம் .... ... .... 71
29. பிரசவ அட்டவணை .... ... .... 72

மூவர்ணப்படங்கள்

1. பொங்கல்மாடு
2. ஸ்ரீமதி ஜி. துர்காபாய்



## சௌந்தரியத்திற்கு • •

ந்தரியத்திற்கு


### குந்தலகாந்தி தைலம்

ஸ்திரீகளுக்கு மிகவும் விலையுள்ள ஆபரணங்களைக் காட்டிலும் மயிர் அதிசயமாக இருக்கிறது. இம்மயிர்கள் கறுத்த நிறமுடையதாகி, நீண்டும் இருப்பது அபூர்வமாக இருக்கிறது. இத்தைலத்தை தினத்திற் கொருமுறை மயிர்களுக்குத் தடவி வாரிக்கொண்டு வந்தால் மயிர்கள் கறுத்து நீண்டும் வளர்ந்து பார்வைக்கு அழகு தரும். புட்டி 1-க்கு விலை அணா 12.

### கேஸரி போமேட்

இதை தலை வாருவதற்கு முன் கொஞ்சம் கையிலெடுத்து தலையில் தடவி வாரிக்கொண்டால் மயிர் ரேகைகள் மினுமினுப்பாகவும், அழகாகவும், மிருதுவாகவும் இருக்கும். இது இந்துதேச பேர்போன அத்தர் சேர்த்து தயார் செய்யப்பட்டது. வாசனை யுள்ளதும், வாசனை யில்லாததுமாக இரண்டு விதங்களில் கிடைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 4.

கேஸரி குடீரம், ராயப்பேட்டை, மதராஸ்



## டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வெல்லரி மார்ட்

### பலவித வளையல்கள்

அசல் தங்கத்தைப்போல பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது. 2 வருஷம் உத்தரவாதம்.

பெரிய சைஸ் 2 இஞ்சும், அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 3 0 0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$ இஞ்சு முதல் 2 இஞ்சுக்குள் „ 2 8 0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$ இஞ்சுக்கு உட்பட்டது „ 2 0 0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணா 8.

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இஞ்சியில் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்.

இரண்டு அணா பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனாம்.

முக்கிய கவனிப்பு:—கிருஹலக்ஷ்மி பெயரை குறிப்பிட்டு ஆர்டர் செய்பவர்களுக்கு நாங்கள் பிரசுரித்திருக்கும் விலையின்பேரில் ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் கமிஷனும் ஒரு டயரியும் கொடுக்கப்படும்.

**T. C. நாகலிங்கப்பா அண்டு கம்பெனி,**

280, வால்டாக்ஸ் ரோட், பார்க்டவுன், மதராஸ்.

# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

**பெங்களூர்:** மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மெண்ட்.
**கோலார் கோல்ட் பீல்ட்ஸ்:** திரு. எம். ஏ. தாஸ், கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.
**திருப்பதி:** மெஸர்ஸ் ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்செண்ட்.
**சேலம்:** எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத்
**மதனபள்ளி:** என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜண்ட். [தெரு.
**திண்டிவனம்:** திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.
**சித்தூர்:** திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.
**வேலூர்:** திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.
**கோயமுத்தூர்:** திரு. கே. பழனிக்கவுண்டர், முனிஸிபல் மிடில்ஸ்கூலுக்கு எதிர்புறக்
**ஆரணி:** திரு. என். நாராயணசுவாமி நாயகர், கெமிகல் ஷாப். [கடை.
**மதுரை:** திரு. ஜி. வெங்கட நாராயண அய்யர், ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர், 248, மேலமாசி வீதி.
**காரைக்குடி:** மெஸர்ஸ் பாரதிபிக்சர் பாலஸ்.
**திருநெல்வேலி டவுன்:** திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.
**தூத்துக்குடி:** மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.
**பீமாவரம்:** திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார்
**நிடதவோல்:** திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி. [பார்மஸி.
**ஹனுமகொண்டா:** திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.
**சென்னை:** மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.
**கொழும்பு:** திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.
**யாழ்பாணம்:** திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.
**கண்டி:** திரு. வி. ஏ. நடராஜா, ஜாப்னஸ்டோர், 77 & 78, பிரௌன்ரிக் தெரு.
**ரங்கூன்:** திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.
**கோலாலம்பூர்:** திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.

ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## கிரஹலக்ஷ்மி காரியாலயம்,

**ராயப்பேட்டை, :: சென்னை.**



# “பொங்கலோ பொங்கல், பால் பொங்கல்!”

தைமாதம் முதல் தேதி இந்த ஆனந்த ஒலி நம் நாட்டில் ஒவ்வொரு இல்லத்திலும் ஒலிக்கும். அன்று பால் பொங்கல் செய்து சூரியபகவானுக்கும், இஷ்ட ஈஸ்வரனுக்கும் நெய்வேதனம்செய்து நாம் உண்டு களிக்கிறோம். இது ஒரு விவசாயிகள் விழா. நம் நாடு விவசாயநாடு. ஆகையால் இவ்விழா பொதுஜன விழாவாகிவிட்டது. விவசாயத்துக்கு மனிதனுக்கு இன்றியமையாத் தோழன் மாடு. அதையும் மாட்டுப் பொங்கலன்று அலங்கரித்து ஆராதிக்கிறோம். ஆதித்த னருளாலும், ஆதிபராசக்தி அருளாலும் பாரதமணித்திருநாடும், நம் தாய்மொழியும் வாழ்ந்து மிக்கோங்கட்டும்; இன்று நம்மை வருத்தும் இன்னல்கள் மாய்ந்து நன்மை வந்தெய்தட்டும்; மறங்கள் மடிவுற்று, அறங்கள் தழைத்தோங்கட்டும்; ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

‘பொன் மொழியாள்’

# கிரஹலக்ஷ்மி

OFFICE OF THE RE... OF BOOKS
5 JAN 1939
MADRAS

## இரண்டாம் ஆண்டு

"கிரஹலக்ஷ்மி" கிரஹலக்ஷ்மிகளான ஸ்திரீகளுக்கு பணியாற்றுவதற்காக சென்ற ஆண்டு ஜனவரி மாதம் தோன்றினாள். பராசக்தியின் இன்னருளாலும், சந்தாதார்களின் பூரண ஆதரவினாலும், விஷயதானம் செய்வோரின் ஒத்துழைப்பாலும், ஏஜண்டுகளின் இடையரா ஊக்கத்தினாலும் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சியுற்று மிளிர்கிறாள். திங்களொருமேனியும், இதழ் ஒரு வண்ணமுமாகப் பிரகாசித்து தமிழ்த் தாய்களின் இல்லங்களிலே விளையாடி வந்தாள். தமிழ்நாடு மட்டுமல்ல 'கிரஹலக்ஷ்மி'யை அன்புடன் வரவேற்று ஆதரித்து வந்தது! தமிழ் மணமும், தமிழ் மக்களும் எங்கெங்கு குடியிருக்கின்றனரோ அங்கெல்லாம் "கிரஹலக்ஷ்மி" சென்று உலாவி வருகிறாள். தென்னாப்பிரிக்கா வென்ன, பர்மா என்ன, பினாங்கு, சிங்கப்பூர், மலாய் தீவுகள் என்ன, சிங்களத்தீவு என்ன, இன்னும் வடநாட்டில் வங்கமுதல் சிந்துவரையும், ஹிமயம்முதல் குமரிமுனை வரையும் தமிழர் தங்கிநிற்கும் ஸ்தலங்கள் என்ன, எங்கும் நம் "கிரஹலக்ஷ்மி" உலவி விளையாடி வருகிறாள் என்று நாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அவள் தோன்றி ஓராண்டு பூர்த்தியாகி இன்று இரண்டாம் ஆண்டு ஆரம்பித்திருக்கிறது. இதுவரையில் ஸ்திரீ சமூகத்தின் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி முன்னேற்றத்துக்கான சகல விஷயங்களைப்பற்றியும் வெகு தைரியமாக தயை தாட்சண்யமின்றி நாம் போராடி வந்திருக்கிறோம். "கிரஹலக்ஷ்மி"யின் தலையங்கங்கள் அவர்களுக்கு அத்தியாவசியமான உரிமைகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டு வந்திருக்கின்றன. தமிழ் சகோதரிகளின் அறிவு வளர்ச்சிக்கான பல கட்டுரைகளைத் தாங்கிவந்திருக்கிறது. சிறப்பாக வைத்

தியம், சமையல், கிரஹ நிர்வாஹம் சம்பந்தமான சிறந்த வியாசங்கள் பலராலும் வியந்து கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஒருவருஷ காலத்தில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் "கிரஹலக்ஷ்மி" செய்திருக்கிறாள். ஆனால் ஸ்திரீகள் பிரச்சினை ஒரு அபாரமான விஷயமாக இருக்கிறது. "கற்றது கைம்மண்ணளவு, கல்லாத துலகளவு" என்பது போல் செய்தது செய்யவேண்டியிருப்பதை நினைக்கின் வெகு சொற்பமாகவே இருப்பதுபோல் தோன்றுகிறது. உலக வாழ்க்கையில் ஸ்திரீ—புருஷர்கள் இருவரும் சமம் என்பதை நம் புராதன நாகரீகம் ஒப்புக்கொண்டிருக்கிறது. வேத சாஸ்திரங்கள் அதை ஆதரித்தே நிற்கின்றன. ஆனால் இடையிலேற்பட்ட சில காரணங்களால் நம் இந்திய மாதர் தாழ்நிலையில் இருத்திவைக்கப் பட்டிருக்கின்றனர். ஸ்திரீகள் தாதரென்றும், அடிமையென்றும் கருதப்படும் நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிசமானமாகவாழ வேண்டும் என்பதே "கிரஹலக்ஷ்மி"யின் நோக்கம் என்பதை மறுமுறையும் தெளிவு படுத்திக்கொள்ளுகிறோம்.

இந்தத் தூயசேவையி லீடுபட அவள் தமிழ் நாட்டினரின் ஆசீர்வாதத்தையும் ஆதரவையும் மென்மேலும் வேண்டி நிற்கிறாள். அந்த ஆதரவு பெருகி வளர்ந்தால்தான் தானும் வளர்வாள், தாய்மார்களும் மேன்மையுறுவர் என்பது யாம் கூற வேண்டியதில்லை. நிதிமிகுந்தவர் ஏராளமாகச் சந்தாதாராகச் சேரவேண்டும். பத்திரிகைகளை வாசிப்பது உணவு அருந்துவதைவிட அவசியமாகத் தோன்ற வேண்டும் நம் சிமாட்டிகளுக்கு. நிதிகுறைந்தவர் மாதா மாதம் தங்கள் ஊர் ஏஜண்டுகளிடமிருந்து "கிரஹலக்ஷ்மி"யின் இதழ்களை வாங்கி படிக்கவேண்டும். அதுவுமற்றவர்கள் அதைப்பிறரிடமாவது வாங்கி வாசித்து அதன் பெருமையை செல்வந்தர்களுக்கு எடுத்துக் காட்டி அவர்கள் அதை ஆதரிக்கத் தூண்ட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இது வரையில் நம்மை ஆதரித்து வந்த சந்தாதார்களும் தங்கள் நண்பர்களையும் இச்சஞ்சிகையை ஆதரிக்கத் தூண்டக்கோருகிறோம். நமது ஏஜண்டுகளும் இன்னும் ஊக்கத்துடன் வேலை செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

தவிர விஷயதானம் செய்து வந்த சகோதர சகோதரிகளுக்கு எமது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மேலும் அவர்கள் சிறந்த வியாசங்களை எழுதித்தந்து உதவ வேண்டும். "கிரஹலக்ஷ்"மியில் வெளிவரும் கட்டுரைகள் யாவுமே ஸ்திரீகளாலேயே எழுதப்படவேண்டும் என்பது நம் ஆவல். இதைப் பூர்த்தி செய்ய கற்றறிந்த ஒவ்வொரு சகோதரியும் முன்வரப்பிரார்த்திக்கிறோம். சகல அம்சங்களிலும் பத்திரிகை மேன்மையுற்றே வெளிவருமென்று நாம் உறுதி கூறுகிறோம். தேவியின் கிருபாகடாட்சத்தாலும் பொது மக்களின் ஆதரவினாலும் "கிரஹலக்ஷ்மி" மென்மேலும் ஓங்கிவளர்ந்து பல்லாண்டு பெண்ணுலகுக்குச் சேவை செய்து வருவாளாக!



# நீதி இலாகாவில் முதல் இந்திய ஸ்திரீ

திருவாங்கூர் ராஜ்யத்துக்கே 'ஸ்திரீகள் ராஜ்யம்' என்று ஒரு பெயருண்டு. அந்நாட்டில் ஸ்திரீகள் அதிக சுதந்திரத்துடனும், கௌரவத்துடனும் இருப்பது மன்னியில் வாரீசுபாத்தியதைகூட ஸ்திரீகளின் வம்சாவழியை ஒட்டி அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. அதிலும் இன்று மஹாராஜாவாக இருப்பவர் ஒரு இளஞ்சிங்கம். தர்மத்தை ஸ்தாபிப்பதில் அதர்மமான பழங்குப்பைகளை அடியோடு களைந்தெறிய சற்றும் தயங்கா நெஞ்சுபடைத்த சுத்த சுதந்திரவீரர். அந்த வீரப்புதல்வனின் தாய் மஹாராணி சேது பார்வதிபாய். ஸ்திரீகள் சமத்துவத்தை தன் ராஜயத்தில்மட்டும் ஏற்படுத்தினால்போதாது, தேசம் பூராவுமே மாதர்களின் நிலை உயரவேண்டுமென்று கருதி அகிலஇந்திய மாதர்மகாநாடு முதலியவற்றின் வளர்ச்சியில் இடையறா ஊக்கம் காட்டிவரும் பெரும் தலைவி. திவானோ ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர். இப்படி மூன்று ரத்தினங்களை தலைவர்களாக பெற்றிருக்கும் திருவாங்கூர் சமஸ்தானம் பல சிறப்புக்களையும் அடையும் என்பதற்கு சந்தேகம் வேறு உண்டோ? தீண்டாதவர்கள் ஆலயப்பிரவேச அனுமதிப் பிரகடனத்தால் அந்த ராஜ்யத்தின் புகழை உலகறியச் செய்தார்கள் மும்மணிகளும் சமீபத்தில். முற்போக்கான காரியங்களைச் செய்வதில் தாங்களே முதன்மை ஸ்தானம் வகிக்கவேண்டும் என்று நிச்சயம் செய்திருக்கிறார்கள் என்பதற்கு மற்றொரு உதாரணம் கிடைத்திருக்கிறது.

இந்தியாவிலேயே முதல் ஸ்திரீ சட்டசபை அங்கத்தினராகும் பாக்கியம் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டிக்குக் கிடைத்தது. சட்டசபையின் உபஅக்கிராசனரான முதல் ஸ்திரீயும் அவரே. ஸ்திரீகள் எந்த ஸ்தானத்தையும் வெகு திறமையுடன் நிறைவேற்றி வைக்கமுடியும் என்பதை அவர் நிரூபித்தார். இன்று ஸ்திரீகளே பெரும்பாலான சட்டசபைகளுக்கு உபதலைவர்களாக இருக்கின்றார்கள். ஸ்திரீ அங்கத்தினர்களில்லாத சட்டசபையே கிடையாதென்று சொல்லலாம். அது மட்டுமா? ஸ்திரீயும் மந்திரியாக இருக்க முடியும் என்னும் உண்மையை முதல் இந்திய ஸ்திரீ மந்திரியாகிய ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் ஐக்கிய மாகாணத்தில் தெளிவுபடுத்திவிட்டார். எப்பேர்பட்ட உத்தியோகங்களையும் மாதர் வஹித்து நடத்தமுடியும் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர்களுக்கு ஆடவர்கள் சந்தர்ப்பம் கொடுக்காத குறையே தவிர லாயக்கற்றவர்கள் என்று கருதுவது ஆதாரமற்ற, அர்த்தமற்ற, சாரமற்ற விதண்டாவாதம் என்பது நடைமுறையில் தெரிந்துவிட்டது. எந்த ஸ்திரீயும் தனது உத்தியோகத்தை சிறப்புடன் நடத்தத் தெரியாமல் விழிக்கவில்லை.

ஆனால் தீவிர சமூகசீர்திருத்த வாதிகள் பலர்கூட நம்நாட்டில் ஸ்திரீகளை நீதிபரிபாலன இலாகாவில் நியமிப்பதுபற்றி சற்றுத் தயக்கமே கொண்டனர் என்று சொல்வது மிகையாகாது. அந்த இலாகா

வுக்கு தனிகுணங்கள் வேண்டும். அவைகள் ஸ்திரீகளிடம் இருக்கமுடியாதென்று ஒருவித தப்பெண்ணம் இருந்து வருகிறது. ரஷ்யா முதலிய மேற்றிசை நாடுகள் சிலவற்றில் ஸ்திரீகள் பொறுப்பான உத்தியோகங்களை பல இலாகாகளிலும் வகித்து வருகிறார்கள். நீதிபரிபாலன இலாகாவிலும் ஸ்திரீகள் உயர்ந்தஸ்தானங்களில் வீற்றிருக்கின்றனர். நம் நாட்டிலும் கிரிமினல் சம்பந்தமான வழக்குகளை ஆராயும் கௌரவ மாஜிஸ்ட்ரேட்களாக அநேகஸ்திரீகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நீதிஇலாகாவில் நிரந்தர பொறுப்புவாய்ந்த உத்தியோகம் இந்தியாவில் எந்த மாதுக்கும் இதுவரையில் எவ்விடத்திலும் கொடுக்கவில்லை.

இந்தியாவில் ஸ்திரீயை முதன்முதலாக நீதிபரிபாலன இலாகாவில் பொறுப்புவாய்ந்த ஒரு ஸ்தானத்துக்கும் நியமிக்கும் பெருமையும் திருவாங்கூர் சமஸ்தானத்துக்கே கிடைத்திருக்கிறது. அவ்விலாகாவில் ஸ்தானம் வகிக்கும் முதல் இந்திய மாது ஸ்ரீமதி அன்னாசாண்டி அவர்கள். இவரை திருவாங்கூர் சர்க்கார் நாகர்கோவிலில் சீனியர் ஜில்லா முன்சீப்பாக நியமித்து அன்னாரும் தனது உத்தியோகத்தை டிசம்பர் மாதம் 13வ திங்கட்கிழமை ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீமதி அன்னாசாண்டி திருவாங்கூர் ஹைக்கோர்ட்டு வக்கீல். சுமார் ஏழு எட்டு வருஷங்கள் வக்கீலாக இருந்திருக்கிறார். வயது அதிகமாக ஆகாவிட்டாலும் தன்தொழிலில் மிகுந்த சாமர்த்தியம் காட்டி அவரது புகழ் பெருகிக்கொண்டே வந்தது. குறிப்பாக 'பொட்டல் கொலை'க் கேஸிலும் 'கல்லூர் கொலை'க்கேஸிலும் ஸ்ரீமதி அன்னா ஆஜராகி வழக்கைத் திறம்பட நடத்தியதைக்கண்டு திருவாங்கூர் நீதி இலாகா உத்தியோகஸ்தர்களும், வக்கீல்களும் ஆச்சர்யப்பட்டனர். இவ்விரு வழக்குகளிலும் அவர்குறுக்கு விசாரணையிலும், வாதம் செய்வதிலும் காட்டிய நுட்ப அறிவைக்கண்டு அவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் இவரைப் புகழ்ந்து பாராட்டிப் பேசி இருக்கின்றனர். இவ்விருவழக்குகளிலும் எதிரிகளுக்காக ஆஜராகி அவர்களை விடுதலை செய்வித்தார்.

ஸ்ரீமதி அன்னாசாண்டி தன்தொழில் முறையில் மட்டும் கவனம்செலுத்தி தன் சொந்த ஊதியத்தைமட்டும் பெருக்கிக் கொள்ள முயற்சிசெய்தவரல்ல. இதர பல பொதுச்சேவைகளிலும் ஈடுபட்டு வேலை செய்துவந்தார். திருவாங்கூர் சட்டசபையில் மூன்றுவருஷங்கள் ஸ்தானம் வகித்திருந்தார். ஸ்திரீகளாலேயே நடத்தப்பட்டு ஸ்திரீகளின் முன்னேற்றத்துக்காக பிரசுரிக்கப்படடுவந்த 'ஸ்ரீமதி' என்ற பத்திரிகையின் ஆசிரியையாகவும் சிலகாலமிருந்துவந்தார். இப்படி பல வழிகளிலும் யோக்யதாம்சங்களுள்ள ஸ்ரீமதி சாண்டிக்கு முதலாவது கிரேட் முன்சீப்பதவியை சர்க்கார் அளித்தது மிகவும் போற்றத்தக்க விஷயமே.

அவர் தான் உத்தியோக மேற்பதற்கு முன் தன் நியமனத்துக்குக்காரணம் மஹாராணியின் பரந்தநோக்கமும், மஹாராஜாவின் தாராள மனப்பான்மையும் என்பதை அங்கீகரித்து அவர்களுக்குத் தன் நன்றியைச் செலுத்தியிருக்கிறார். இந்த நியமனத்துக்காக இந்திய மாதர் சமூகம் பூராவும் மஹாராணி சேது பார்வதிபாய்க்கும்,





மஹாராஜாவுக்கும் தங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டுமென்று ஸ்ரீமதி அன்னா கூறியிருப்பது யாவரும் கவனிக்கத் தக்கது. மற்ற இலாகாக்களில் வேலை செய்வது போல் நீதி இலாகாவிலும் வேலை செய்து தங்கள் சமூகத்தின் கீர்த்தியை நிலை நாட்டமுடியும் என்று அவர் தன்னம்பிக்கையுடன் கூறியிருப்பதைக் கண்டு நாம் மனமகிழ்கிறோம். நீதியிலாகா உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய பாரபட்சமின்மை போன்ற அரியகுணங்கள் ஸ்ரீமதி அன்னாவிடம் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. சட்டத்தின் முன்பாக அரசனும், ஆண்டியும் ஒன்றே என்ற மனப்பான்மையை தைர்யமாக அவர் கடைப்பிடித்து தன்முன் விசாரணைக்கு வரும் வழக்குகளை தூயமனதுடன் பரிசீலனை செய்து தன் பெருமையையும், தன் குலத்தின் கௌரவத்தையும் ஸ்ரீமதி அன்னா நிலை நாட்டுவார் என்று நம்புகிறோம். தனது திறமையினாலேயே இன்று வகிக்கும் முதல்தர ஜில்லா முன்சீப் உத்தியோகத்திலிருந்து திருவாங்கூர் சமஸ்தான உயர்தர நீதி மன்றத்தின் ஜட்ஜாகவும் கூடிய விரைவில் வரும்படி பராசக்தி அன்னாவை ஆசீர்வதிப்பாளாக. இது போன்ற முற்போக்கான நற்காரியங்களைச் செய்யும் மஹாராணிக்கும், மஹாராஜாவுக்கும், திவான் சர். ஸி. பி. அவர்கட்கும் மாதர்களின் சார்பாக நமது மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆண்டவன் அவர்கட்கும் மென்மேலும் ஊக்கமளிப்பாராக.

இதை யொட்டி நம் மாகாணசர்க்காருக்கும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். நம்மாகாணத்திலும் சுமார் பத்து ஸ்திரீ வக்கீல்கள் இருக்கிறார்கள். சர்க்காரை நடத்துபவர்கள் காங்கிரஸ் கட்சியார். காங்கிரசுக்குப் பூரண ஆதரவு அளித்தவர்கள் மாதர்கள். நம்மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியார் மந்திரிபதவி ஸ்திரீகளுக்கு அளிக்கத் தவறி விட்டார்கள். போனது போகட்டும். இனியாவது திருவாங்கூர் சமஸ்தானத்தைப் பின்பற்றி நடப்பார்களா? எதற்கும் மனம் வேண்டும். மலைப்பதில் பயனில்லை. 'ஜயமுண்டு' என்று செய்தார்களானால் மாதர் சமூகத்தின் வாழ்த்துதலுக்கு பாத்திரமாவார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# மொல்ல ஜயந்தி

"குகப்ரியை"

இன்று கவிதா உலகிலும், கல்வி உலகிலும் உன்னத ஸ்தானம் வகித்திருக்கும் பல ஸ்திரீ ரத்னங்களிருக்கிறார்கள். ஸ்ரீமதி சரோஜினி தேவியின் கவித்திறமையை இந்தியாமட்டுமல்ல மேற்றிசை நாடுகளும் போற்றிப் புகழ்கின்றன. இதேபோல் கீர்த்திமிகு மங்கையர்கவி திலகங்கள் பலர் ஆதிகாலத்திலும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னரும் திகழ்ந்திருக்கிறார்களென்ற விஷயம் சிலருக்குத் தெரியாமலிருக்கலாம். அதன் காரணம் அப்பேர்பட்ட மாதர்மணிகளின் மேன்மையை நாம் அடிக்கடி ஞாபகபடுத்திக் கொண்டாடாததுதான். சாதாரணமாக "காளிதாஸர் தினம்," "சுப்ரமண்ய பாரதிதினம்" "கம்பர்விழா" என்றெல்லாம் நாம் கொண்டாடுகிறோம். ஆனால் தமிழ் நாட்டிலே பிறந்து, தமிழ் மொழிக்கு பல அரிய ஆபரணங்களைச் சூட்டிமறைந்த மாதர் மாணிக்கங்களின் திருவிழாக்களை நாம் கொண்டாடுகிறோமா? இல்லையே!

குழந்தைகளுக்கு முதல் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற முதுமொழியைச் சொல்லிக் கொடுக்கிறோம். மற்றும் சிறுவர், சிறுமியர் இளவயதில் கற்றுக்கொள்ளும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவைகள் ஔவையின் அருஞ்சொற்கள் என்பதை நாம் உணர்ந்து அப்பேர்பட்ட வனிதையர் திலகத்தின் ஞாபகார்த்த விழாக்கள் நடத்துகிறோமா? இல்லையே. தமிழ் மாதர்கள் விழித்தெழுவார்களா? வீரப்பெண்மணிகளின் தீரத்தைப்போற்றிப் புகழத்தகுந்த விழாக்களை இனியாவது வகுத்து நடத்துவார்களா?

இதற்கு ஆந்திரர்கள் நமக்குவழி காட்டியிருக்கிறார்களென்பது சென்ற வருஷமே எடுத்துக் காட்டப்பட்டது. ஆந்திர தேசத்திலே பதினாறும் நூற்றாண்டில் ஓர் ஜோதி தோன்றி ப்ரகாசித்தது. அந்த ஜோதி ஸ்ரீமதி மொல்லா அவர்களே. அவர் அக்காலத்தில் தன்னிகரில்லையென விளங்கிவந்த ஸ்திரீ சிரோன்மணியாவர். அவர் இயற்றிய காவியங்களும், கட்டுரைகளும், இதர நூல்களும், ஆந்திரமக்களால் இன்றும் பொன்னே போல் போற்றப்பட்டு வருகின்றன. ஆந்திரமேதாவிகளுள் ஸ்ரீமதி மொல்லா ஒரு சிறந்த ஸ்தானத்துக்குரியவர் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

அப்பேர்பட்ட மங்கையர் மாணிக்கத்தின் பிறந்ததினவிழா சிறப்புடன் வருடா வருடம் நெல்லூரில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவை நடத்திவைப்பவர் தமிழ், தெலுங்கு "கிரஹலக்ஷ்மி"யின் அதிபராகிய டாக்டர் கே. என். கேஸரி அவர்களே. ஸ்திரீகளின் முன்னேற்றத்தையே தனது ஜீவிய லட்சியமாகக்கொண்டுள்ள திரு. கேஸரி அவர்கள் ஒரு ஸ்திரீ ரத்தினத்தின் ஜன்மதினத்தைக் கொண்டாட முன்வந்தது யாவராலும் புகழத்தக்கது. அவ்விழா சென்ற நான்கு வருஷங்களாக டிசம்பர் மாதங்களில் நடைபெற்று வருகிறது. விழாவின் வைபவங்களில் ஸ்திரீகளுக்கே பிரதான ஸ்தானம் கொடுக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விழாவின் போது "கிரஹலக்ஷ்மி" கங்கணமும் சிறந்த ஸ்திரீ மேதாவிக்கு அளிக்கப்படுகிறது. "கிரஹலக்ஷ்மி"க்கு கட்டுரைகள் எழுதியும், இன்னும் இதர வழிகளிலும் தன் கல்வித் திறமையை ஸ்தாபித்துள்ளமாது சிரோன்மணிக்கு ஒவ்வொரு வருடமும் டாக்டர். கேஸரி அவர்கள் 116 ரூபாய் மதிப்புள்ள "கிரஹலக்ஷ்மி" கங்கணம் அளித்து வருகிறார் என்பதை நாம் சென்ற வருஷமே வாசகர்களுக்கு தெரிவித்திருக்கிறோம்.

இதன் நோக்கம் ஸ்திரீகளிடையில் கல்வி பரவுதல் வேண்டுமென்பது மட்டுமன்று. மங்கையர் தாங்கள் கற்றிருந்த ஞானத்தை பிரதியச் செய்யவேண்டும்; கவி, காவியம், கதைகள், நாடகம் முதலியன எழுத வேண்டும் என்றும், அவர்கள் தங்கள் திறமையை எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென்பதே. இந்த வகையில் ஸ்திரீகளுக்கு உற்சாகமளிக்க வேண்டுமென்பது வாஸ்தவமே. தங்களின் தேர்ச்சியையும், உயர்வையும் மற்றவர்கள் உணர்ந்து உற்சாகமும் ஊக்கமும் அளித்தால்தான் சிறந்த புத்திமான்களும் தங்கள் வேலையை சிரத்தையுடனும், ஆர்வத்துடனும் செய்ய இயலும். அவ்வித உற்சாகத்தை தகுந்த ஸ்திரீ எழுத்தாளர்களுக்கு தந்து உதவ வேண்டுமென்பதே "கிரஹலக்ஷ்மி" கங்கணம் அளித்துவரும் திரு. கேஸரியவர்களின் நோக்கம். மாதர்கள் தங்கள் அறிவையும் ஆற்றலையும் பெருக்கி அதன் உபயோகத்தால் சிறந்த நூல்கள் எழுத வேண்டும். அவர்களது புகழும், பேரும் குடத்துக்குள் ஏற்றிய விளக்குப்போல் மங்கிப்போகாமல், கலங்கரை விளக்கமேபோலும், குன்றின் மேலிட்ட தீபம் போலவும் ஜ்வலித்து ஜகம் முழுவதும் பரவ வேண்டுமென்பதே கங்கனா கர்த்தாவின் அத்தியந்த ஆசை. அந்த சந்தர்ப்பத்தை சில ஆந்திர ஸ்திரீ ரத்தினங்கள் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் திரு. கேஸரி அவர்களின் பரந்த நோக்கம் அதே பரிசை தமிழ் சகோதரிகளுக்கும் கொடுக்கும்படி தூண்டியது. "கிரஹலக்ஷ்மி" கங்கணம் பெற தமிழ் சகோதரிகள் போட்டியிட்டுக் கொண்டு முன் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1934, 1935, 1936-ம் வருஷங்களில் இப்பரிசு பெறும் பாக்கியம் ஆந்திர திலகங்களான ஸ்ரீமதிகள் கே. வரலக்ஷ்மி அம்மாள், சீதாம்பாள், கா. கனகம்மாள் இவர்களுக்குமுறையே கிடைத்தது. ஸ்ரீமதி கனகம்மாள் 500 ரூபா ரொக்கம் கொடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1937-ம் வருஷம் டிசம்பர் மாதம் 18௳ நான்காம் விழாநடை பெற்றது. இவ்வருஷம் "கிரஹலக்ஷ்மி" கங்கணம் பெற்றுக் கொண்டவர் ஸ்ரீமதி புலவார்தி மகலாவதிதேவி. இவர் வயது குறைந்தவராயிருந்தபோதிலும் தெலுங்கில் பல நூல்களை இயற்றி வெளியிட்டிருக்கிறார். தவிர நல்ல பாக்களும் இயற்றிப் பிரசுரித்திருக்கிறார். சிறந்தகாவிய நூல் வல்லார்களுள் ஒருவரெனக் கருதப்பட்டு வருகிறார்.

இந்த விழாவுக்கு ராஜமஹேந்திரபுரம் ஆந்திர யுவதி சமஸ்கிருத கலாசாலையின் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி பதுல காமாக்ஷி அம்மாள் தலைமை வகித்தார். அவர்கள் வாசகசாலைகளின் அத்தியாவசியத்தைப் பற்றியும், ஆங்காங்கே அவைகளை எதேஷ்டமாக நிர்மாணிக்கவேண்டுமென்றும், அப்பொழுது தான் ஆண் பெண் இருபாலாரும் தாங்கள் கற்ற கல்வியை

மென்மேலும் விருத்திசெய்து கொள்ள வசதியாயிருக்கு மென்றும் பேசினர்கள்.

பின்னர் நீபல பிச்சைய சாஸ்திரி அவர்கள் ஸ்ரீமதி மொல்லாவின் கவித்திற மையையும், அவர் இயற்றிய ராமாயணத் தின் பெருமையையும் வெகு அழகாக, அந்நூலினின்றும் மேற்கோள்கள் எடுத் துக்காட்டி, விளக்கிப்பேசினர். அவர் சில ஸ்லோகங்களையும் எடுத்து வாசித்துக் காட்டினர். திருவாளர்கள் டி. சுப்ர மண்யசர்மா, ஜி. வி. சுப்பாராமய்யா (வி. ஆர். காலேஜ் ஆசிரியர்கள்) வும் ஆந்திர கவி திலகத்தின் பெருமையை மேலும் விளக்கிப் பேசினர்கள்.

அங்கு விஜயம் செய்திருந்த மாஜி சப் ஜட்ஜ் திரு. கோட்டா நரசிம்ஹம்பந்துலு நெல்லூர் பெண்கள் செகண்டரி பள்ளிக் கூடமாணவிகள் நால்வருக்கு அன்று அக் கிராசனம் வகித்த ஸ்ரீமதி காமாக்ஷி அம் மாளின் பேராலும், ஆந்திரகவி ஸ்ரீமதி கமலாவதி தேவியின் பேராலும் பரிசுகள் வழங்குவதற்காக இருபது ரூபாய் நன் கொடை அளித்தார்.

நெல்லூர் பிரபல வக்கீலும், கவியும், பண்டிதருமான திரு. எம். ராமகிருஷ் ணய்யா ஸ்ரீமதி கமலாவதி தேவியின் கவித்திறமையையும், கற்பனுசக்தியையும், நுண்ணிய அறிவையும், அவர் இயற்றிய நூல்களின் பெருமையையும் வியந்து தான் எழுதிய சில்பாக்களைப்பாடி சபையோரை மகிழச்செய்தார்.

திரு. ராமகிருஷ்ணய்யா பேசி முடித்த பின் "கிரஹலக்ஷ்மி" ஆசிரியர் திரு. ஸி. ராமச்சந்திரய்யா, பி.ஏ., டாக்டர். கேஸரி கங்கணம் அளிப்பதன் நோக்கத்தைப் பற்றியும், அதைப்பெற அருகதையுள்ள வர்கள் எப்பேர்பட்ட வர்களாயிருத்தல் வேண்டுமென்பது பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினர்.

சுவர்ணகங்கணம் ஸ்ரீமதி கமலாவதி தேவியவர்கட்கு வழங்கப்பட்டது. அதை அவர் ஏற்றுக்கொண்டு டாக்டர். கேஸரி அவர்களும், இதர பிரமுகர்களும் தன்னை கௌரவித்ததற்காக தன் நன்றியறிதலை மிக்க வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டு மேலும் சில வார்த்தைகள் பேசி னர். ஸ்திரீகளுக்கு கல்வி தகுந்தமுறை யில் அளிக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் நல்ல ஞானம்பெற்று அறியாமை என்ற அந்தகாரத்துள் விழாமல் தடுக்கப் படவேண்டுமென்றும், ஆனல் கல்வி தருகி ரேம், ஞானம் அளிக்கிரேம் என்று வெறும் நவநாகரிகத்திலுள்ள தீய அம்சங் களை மட்டும் அவர்கள் கிரஹித்து அனுஷ் டிக்கும்படி செய்வதால் யாதொருபிரயோ ஜனமும் விளையாதென்றும், ஆகையால் நம் ஹிந்துமத ஸ்திரீகள் தங்களது கௌரவமானதும், உன்னதமானதுமான ஸ்தானத்தை நிரந்தரமாக வகித்து நடத்தி தங்களுக்கும், குடும்பத்துக்கும், நாட்டுக் கும் பெருமையளிக்கும்படி செய்யக்கூடிய கல்வி அறிவையே அவர்களுக்கு போதிக்க வேண்டுமென்றும் வெகு உருக்கத்துடன் பேசினர். கவிரத்னமாகிய ஸ்ரீமதி மொல்லாபிறந்த ஜில்லாவிலே அன்னரது ஜனனதினக் கொண்டாட்டத்தன்று தான் இந்த கங்கணம் பெறும்பாக்கியம் கிடைத் ததுபற்றி மிகவும் பெருமை அடைவதாக வும் ஸ்ரீமதி கமலாவதிதேவி கூறினர்கள்.

அக்கிராசனர் முடிவுரைக்குப்பின் புரொக்ரெஸ்ஸிவ் யூனியன் காரியதரிசி யால் வந்தனேபசாரம் கூறப்பட்டு சந்தன புஷ்பதாம்பூலங்கள் வழங்கப்பட்டவுடன் கூட்டம் இனிது நிறைவேறியது. யாவ ரும் குதூஹலத்துடன் கலைந்தனர்.



நான்காவது மொல்ல ஜயந்திக் கொண்டாட்டம்—கிரஹலக்ஷ்மி கங்கணம் அளிப்பு விழா.



பூ கோர்த்தல்.

# கிரஹலக்ஷ்மியை வேண்டுதல்

## திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை

"கிரஹலக்ஷ்மி" யெனும் நாமம் பூண்ட
பாரத நாட்டின் அரும்பெரு மன்னாய்!
சொன்னயத்தாலே நின் அருஞ்சேய் கட்கு
நன்னயம் புரிந்து நல்லறி வூட்டி
ஊக்கமெனும் பாலூட்டி வளர்த்து
ஆக்கமளித்து ஆதரி தாயே!

அமிழ்தே அனைய அருமை மொழியாம்
தமிழ்மொழி தன்னைத் தனிமணி தன்னைச்
செந்தமிழ் தன்னைச் செய்ய தீந்தேனை
நந்தமிழ் மொழியை நந்தாய் மொழியை
பாராட்டிப் பாலூட்டிப் போற்றிச்
சீராட்டிப்பெறு சிறப்புறுவாயே!

சான்றோர் புகழும் சன்மார்க்க மெனும்
நன்மார்க் கந்தனை நாட்டோர்க் கோதி
அடிமை வாழ்வை யாண்டும் நீக்கி
மிடிமை கொடுமை நேராவண்ணம்
ஒற்றுமைக்குணம் ஓங்கிவளர
உறுதுணை புரிவாய் உண்மைத்தாயே!

பெண்மணி யார்க்குப் பெருமை யளித்துக்
கண்மணியனைய கல்வி யளித்துக்
கட்டுப் பாடெனும் கட்டை யவிழ்த்து
அடிமை வாழ்வை அடியோட கற்றி
ஆண்பாலோரின் அடிமைகொள்ளும் ஆளும் குணத்தைப்
பெண்பா லர்பால் பெய்ய விடாது
பேணுவாய் தாயே! பேணுவாய் தாயே!

# வாழ்த்து

ஸ்ரீமதி பார்வதி

கிரஹலக்ஷ்மி! யான் உன்றன் பெருமையை என்னவென்று ஈண்டு எடுத்துச் சொல்வேன். தமிழ்மணம் கமழும் உன்றன் திருமேனியும், சோதி விட்டெரியும் உள்ளமும், பொலிவுடனுள்ள உன்றன் திருமுகமும் எங்கள் ஹிருதய பதுமக் கோயிலில் அரசு வீற்றிருப்பதாக!

நம்மனோர் தர்மம் அழிந்து, சுதந்தரத்தைப் பறிகொடுத்துத் தரித்திரத்திற்குட்பட்டுத் தவிக்கும் பாரதத்திற்கு, உண்மை கொடுத்து, எழுச்சி எழுப்ப முன் வந்திருக்கும் உன்றன் சிலம்பொலிக்கு என் நாவால் இச்சிற்றறிவைக் கொண்டு என்ன பெருமையை அர்ப்பணம் செய்வேன். ஆயினும் என் தாயே! என் மனக் கமலத்தை உனக்கு மகிழ்ச்சியுடன் அர்ப்பணம் செய்கிறேன்.

கிரஹலக்ஷ்மி! என் மன மகிழ்வை எழுத்தளவால் எழுத முடியாது. ஆனந்தக் கூத்தாடுகின்றேன். எங்களுக்கு அறிவூட்டி, உற்சாக மூட்டி, எங்கள் யுவதிகளுக்கு யுவசக்தி யீந்து எழுப்பி விடு!! இதையே வேண்டுகிறேன்.

ஒவ்வொருவரும் பாஷாபிமானியாயும் தேசாபிமானியாயும் இருக்க வேண்டும், வீர வேலைகள் புரியவேண்டும் என்ற நற்செய்தியைத் தமிழ்நாடு யாங்கணும் பரப்புவாய். உன்னைத் தற்போது பெரிதும் ஆதரியாமற் போயினும், பிற்போது உன்னைச் சிரசின்மேல் வைத்துக் கூத்தாடுங்காலம் வரும். தேசீயம், வீரம், சுதந்திரம், சமத்துவம், முதலியவைகளைப் பற்றியும், முக்கியமாய்ப் பெண்கள் சுகத்திற்கும், விருத்திக்கும், தாய் மொழிக்கும் தொண்டாற்றுவதில் தகதக வென்று எரியும் உன்னைப் பாரதச் சேய்கள்—மக்கள் சரணமடையுங் காலம் நெருங்கி விட்டது. பெண்மணிகள் உன்னைப் போற்றித் துதிக்குங் காலமிதுவே.

தமிழ்நாடு, பெண் பத்திரிகை உதய மெய்தலிழந்து தவிக்கும் இக்காலத்தில், உதய திசையில் இளங்கதிர்களைப் பரப்பி மங்களகானத்துடன் எழுந்து பிரகாசஞ் செய்யும் இளஞாயிறு போன்று, தமிழ் நாட்டில் இப்பொழுது "கிரஹலக்ஷ்மி" என்ற பெயருடன் ஓர் சஞ்சிகை வீரமுடன் உதயமாகிப் பிரகாசிக்கிறது. குதித்து எழும் எம்மனோரின் உள்ளக் கிளர்ச்சியை எழுத்தால் எழுத ஒண்ணாது; ஒண்ணாது. இஃது எங்கள் வீரச் செந்தமிழ் நாட்டின் தெய்வீக தவப்பயனே யாகும். நள்ளிரவில் உறங்கிக் கிடக்கும் நம் தமிழ் நாட்டை அன்னை பராசக்தியின் இன்னருளால் சக்தி பெற்று சுத்த சுதந்திர சமத்துவ சூர்யப் பிரகாசத்திற்கு அழைத்துக் கொண்டு செல்வாய். மென்மேலும் சிறப்புற்று ஓங்கி வளரத் தேவி அருள் பொழியட்டும். "கிரஹலக்ஷ்மி" தமிழ் நாட்டு பெண்கட்குச் சுதந்திர சமத்துவத் திறவு கோலாகத்திகழட்டும். அன்னையே! அவ்வாறே அருள்புரிக!

# கமலத்தின் புடவை

"கிச்சு"

கமலம் நான் சற்றுமுன் அவளிடம் கொடுத்த புடவையைப் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். முகத்தை சுளுக்கிக்கொண்டு "புடவை என்ன விலை?" என்று கேட்டாள்.

"ஐம்பது ரூபாய்" என்றேன்.

"என்ன சொன்னேள்? ஐம்பது ரூபாயா! பொட்டையன்கூட இந்த புடவைக்கு முப்பது ரூபாய்க்கு மேலே கொடுக்கமாட்டானே. புடவை மடிசல் போலிருக்கே. இரண்டு தரம் நனைத்தால் சாயம்கூட போய்விடும். எந்த கடையில் எனக்காக இந்த புடவையை வாங்கினேள்?" என்றாள்.

"நானே நேரில் போய் வாங்கிக் கொண்டு வரவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் ஆபீஸில் மத்தியானம்வேலை ஜாஸ்தியாயிருந்தது. அந்தண்டை இந்தண்டை நகர முடியவில்லை. மத்தியானம் எனக்கு தெரிந்தவர் ஒருவர் ஏதோ காரியமாய் ஆபீஸிற்கு வந்திருந்தார். அவரிடம் நீ சொன்ன அடையாளத்தை சொல்லி நல்ல புடவையாக ஒன்று வாங்கிக் கொண்டு வரும்படிசொல்லி நூறு ரூபாய் நோட்டை கொடுத்து அனுப்பினேன். அவர் சாயங்காலம் இந்த புடவையைக் கொண்டுவந்து கொடுத்து இதின் விலை ஐம்பது ரூபாய் என்று சொன்னார்" என்றேன்.

"சரிதான். அவர் பெரிய கைகார பேர்வழியாய் இருப்பார் போலிருக்கே. அகலம் கம்மி; நீளம் கம்மி; மடிசல் புடவை; சாயம் போய்விடும். இந்த புடவைக்கு அவர் 50 ரூபாய் கொடுத்தேன் என்று சொன்னால் அவர் எப்பேர்பட்ட பேர்வழியாய் இருக்கவேண்டும். 30 ரூபாய்க்கு வாங்கிவிட்டு உங்களிடம் 50 ரூபாய்க்கு வாங்கினேன் என்று சொல்லி 20 ரூபாய் டிஸ்கவுண்டு (Discount) அடித்திருக்கிறார். எந்த கடையில் வாங்கினார் என்று கேட்டீர்களா?" என்று கமலம் கேட்டாள்.

நான் "அதெல்லாம் ஒன்றும் கேட்கவில்லை. அவரிடத்தில் எனக்கு பூரண நம்பிக்கை உண்டு. அவர் ஒன்றும் அப்படி பொய் சொல்லமாட்டார்" என்றேன்.

"ஆமாம்! உங்களுக்கு தெரிந்தவர்களெல்லாரும் அரிச்சந்திரர்கள்தான். நீங்கள் ஒருவர் ஏமாந்த பேர்வழி; யார் எது சொன்னாலும் நம்புவேள் என்று நன்றாக தெரிந்துகொண்டுதான் 30 ரூபாய்க்கு வாங்கின புடவையை 50 ரூபாய்க்கு வாங்கினேன் என்று சொல்லியிருக்கிறார். இந்த புடவையை பார்த்தாலே வயாலெடுக்க வருகிறதே. இதை நம் வீட்டு சூத்திரச்சி சொரணி கட்டிக்க மாட்டாளே. இதை கட்டிக்கொண்டு வெளியில்போனால் கூட யாராவது பரிகாசம் பண்ணுவார்கள். மணி இப்பொழுது எட்டுதானே ஆகிறது. இப்பவே உங்கள் சிநேகிதரிடம் இதைக்

கொண்டுபோய் கொடுத்து 'அவள் சொன்ன புடவை இதில்லையாம். அது வேறு தினுசு புடவையாம். அவளுக்கு இந்த தினுசு பிடிக்கவில்லையாம்' என்று சொல்லுங்கள். நாளைக்கு கொண்டுபோய் திருப்பி கொடுத்தால் கடைக்காரன் திருப்பி வாங்கி கொள்ளமாட்டேன் என்று சொன்னாலும் சொல்லிவிடுவான். கொஞ்சம் சிரமம் பார்க்காமல் இப்பவே கிளம்பி போங்கள்" என்றாள்.

"கமலம்! அவர் ஒரு தகுந்த பேர்வழி. அவரிடம் இந்த அர்த்த ராத்திரியில்போய் 'நீங்கள் வாங்கிகொடுத்த புடவை நன்றாயில்லை, கடையில் திருப்பி கொடுத்துவிட்டு பணத்தை வாங்கிகொண்டு வாரும்,' என்று சொன்னால் அவர் ஏதாவது வித்தியாசமாக நினைத்துக்கொள்ளுவார். ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டாலும் ஏற்படும்" என நான் கூறினேன்.

"அவர் எது வேண்டுமானாலும் நினைத்து கொள்ளட்டும். அவராலேதான் நமக்கு சாப்பாடா என்ன? பணவிஷயத்தில் இதெல்லாம் பார்த்து முடியுமா? நம் வீட்டு காசு கொல்லையிலா காய்க்கிறது? நாலணா வீணாக செலவழிக்க எனக்கு மனசு வரவில்லை. ஒருவர் உங்களை ஏமாற்றி 20 ரூபாய் டிஸ்கவுண்டு அடித்துகொண்டு போகிறதா? அவர் எது வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளட்டும். அவர் வித்தியாசமாய் நினைத்துக்கொள்ள போகிறாரே என்று பேசாமல் இருக்கிறதா என்ன! ரொம்ப நன்றாயிருக்கே. இப்பவே புடவையைக் கொண்டுபோய் கொடுத்து பணத்தை வாங்கிக்கொண்டு வரச்சொல்லுங்கள். நானே, உங்களுக்கு ஒழியாவிட்டால், நேரில்போய் எனக்கு பிடித்த புடவை ஒன்று வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றாள்.

நான் "சரி கமலம். நீ ஒரே பிடிவாதமாய் இருக்கிறாய். உன் இஷ்டப்படியே புடவையை அவரிடம் கொண்டுபோய் கொடுத்து பணம் வாங்கிக்கொண்டு வரச் சொல்லுகிறேன். அப்புறம் ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டால் நீ தான் ஜவாப்தாரி" என்று சொல்லிவிட்டு புடவையை எடுத்துக்கொண்டு கிளம்பினேன். கிளம்பும்பொழுது பாக்கெட்டுக்குள் கையை விட்டு பார்த்துவிட்டு "கமலம்! நாலணா சில்லரை கொண்டுவா" என்றேன். உடனே அவள் விர்ரென்று உள்ளே சென்று பெட்டியை திறந்து சில்லரை எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்து "ஆமாம்! உங்களுக்கு எதற்காக நாலணா! உங்களுக்கு தான் டிராம் பாசாச்சே (Tram pass)" என்றாள்.

"கமலம்! நீ சொல்லுகிறது சரிதான். பாஸை வைத்துக்கொண்டு பாரிஸ் கார்னர் (Parry's corner) வரையில் போகலாம். அப்புறம் ஆண்டாள் தெருவிற்கு போகிறதற்கு ரிக்ஷாக்காரன் குறைந்த பக்ஷம் நாலணா கேட்பான்" என்றேன்.

"ஆண்டாள் தெருவா? ஆண்டாள் தெருவிலே இருக்கிற எல்லோரையும் எனக்கு தெரியுமே. ஆண்டாள் தெருவிலே உங்கள் சிநேகிதர் யார்?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"ஓகோ! மறந்துபோய் விட்டேனே. அவர் நமக்கு சிநேகிதர் மட்டுமல்ல; நெருங்கிய பந்துவும் தான். வேறு ஒருவருமில்லை; உங்க அப்பாதான். உங்க அப்பா தான் ஆபீஸிற்கு மத்தியானம் வந்





திருந்தார். அவர் தான் புடவையை வாங்கிக்கொண்டு வந்தார்" என்று சொல்லிவிட்டு அவளைப் பார்த்தேன். அவள் முகம் அசடுதட்டியது. நான் ஒன்றும் கவனியாதவன் போல் "சரி. கமலம்! நாழிகையாச்சு; நான் போய்விட்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன். வாசல் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கோ" என்று சொல்லிவிட்டு புறப்பட்டேன்.

கமலம் "இந்தாருங்கோ. உங்களிடம் நீங்கள் வந்த உடனேயே சொல்லவேண்டும் என்றிருந்தேன். ஏதோ பேச்சில் மறந்து போய்விட்டேன். ஊரெல்லாம் திருட்டு பயமாயிருக்கிறதாம். அடுத்தாத்திலே கூட மத்தியானம் கொல்லையிலிருந்த சொம்பைக் காணோமாம்; அடுத்த தெருவில் நேற்றைய ராத்திரி எங்கேயோ திருட்டு போய்விட்டதாம். நீங்கள் போனால் திரும்பி வரும்பொழுது மணி, 11, 12 ஆகிவிடும். அதுவரையில் நான் எப்படி இந்த வீட்டில் ஒண்டியாயிருக்கிறது?" என்று கேட்டாள்.

"கமலம்! நீ ரொம்ப தைரியசாலி என்று பெயர். ஏன் நீ இப்படி பயப்படுகிறாய்? நான் போய்விட்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன். வாசல் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கோ" என்று சொல்லிவிட்டு கிளம்பினேன்.

கமலம் "ரொம்ப நன்றாயிருக்கே. விடிய விடிய கதை கேட்டுவிட்டு சீதைக்கு ராமன் சித்தப்பன் என்கிறீர்களே. ஊரெல்லாம் திருட்டு பயமாயிருக்கிறது; எனக்கு இந்த வீட்டில் ஒண்டியாய் இருக்க பயமாயிருக்கிறது என்று சொன்னால் நான் சீக்கிரம் திரும்பி வந்துவிடுகிறேன் என்று பாடம் ஒப்பிக்கிறீர்களே. இந்த நடுராத்திரியில் இந்த புடவைக்காகத்தானே போகிறீர்கள். ஒரு ராத்திரியில் குடி ஒன்றும் முழுகிப்போய்விடாது. நாளைக் காலையில் கொண்டுபோய் கொடுக்கலாம்". என்று சொல்லிக்கொண்டு நான் எதிர்பாராதபடி என் கையிலிருந்து புடவையை பிடுங்கிக் கொண்டுபோய் அலமாரியில் வைத்து பூட்டிவிட்டாள்.

"சரி, கமலம்! அப்புறம் உன் இஷ்டம். நாளைக் காலையில் கொண்டுபோய் கொடுத்தால் கடைக்காரன் வாங்கிக்கொள்ள மாட்டேன் என்று சொன்னால் நான் ஜவாப்தாரியல்ல" என்று சொன்னேன்.

அடுத்தநாள் காலையில் நான் பல்லை தேய்த்துவிட்டு உள்ளே போனபொழுது கமலம் சிரித்துக்கொண்டு டம்ளரில் காப்பி கொண்டுவந்தாள். அவள் முதல்நாள் நான் வாங்கிகொடுத்த புடவையை கட்டிக் கொண்டிருந்தாள். நான் எழுந்திருக்கு முன் அவசரம் அவசரமாக அந்த புடவையை பிரித்து கட்டிக்கொண்டாள் என்று அறிந்தேன்.

"கமலம்! இதென்ன இது! இந்த மடிசல் புடவையை, நீளம் கம்மி புடவையை, சூத்திரச்சி. சொரணிகூட கட்டிக் கொள்ள மாட்டேன் என்று சொல்லக் கூடும் புடவையை—ஏன் பிரித்து கட்டிக் கொண்டாய்? யாராவது பார்த்தால் சிரிக்கப் போகிறார்களே. இனிமேல் இதை திருப்பிகொடுத்தால் கடைக்காரன் வாங்கிக்கொள்ளமாட்டேன் என்று சொல்லுவானே" என்றேன்.

"அதெல்லாம் நீங்கள் ஒன்றும் கொண்டு போய் திருப்பி கொடுக்கவேண்டாம்.

என் கைநீளம், (!) (வாய் அதற்குமேல்!) அதினால்தான் முழும் போட்டபொழுது நீளம் அகலம் கம்பிபோல் தோன்றியது. காலையில் அடுத்தாத்து பங்கஜம் வந்திருந்தாள். அவளிடம் இந்த புடவையைக் காட்டினேன். அவள் 'புடவை மடிசல் கிடிசல் ஒன்றுமில்லை; ரொம்ப நன்னாயிருக்கு. எங்காத்துக்காரர்கூட நேற்றைக்கு இதேமாதிரி ஒரு புடவை 55 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டு வந்தார். உனக்கு மலிவாக யார் இந்த புடவை வாங்கிக்கொடுத்தா? இந்த புடவை உனக்கு பிடிக்காவிட்டால் எனக்கு கொடுத்துவிடு. நான் 54 ரூபாய் தருகிறேன்' என்றாள். இன்றைக்காலையில் ஆறுமணிக்கு ஒரு முகூர்த்த மாகையால் புடவையை பிரித்துக் கட்டிக்கொண்டேன்" என்றாள்.

அன்றையதினம் சாயங்காலம் அடுத்த வீட்டு பங்கஜத்தின் கணவருடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர் தன் சம்சாரத்திற்கு முதல்நாள் புடவை வாங்கிக் கொடுக்கவில்லையென்றும் பங்கஜம் பிறந்தகத்துக்குப்போய் மூன்று மாசத்திற்குமேல் ஆகிவிட்டது என்றும் அறிந்தேன்.

## விடுகதை வினா

1. பிடிப்பிடி சுப்பல் பொறுக்கி அரண்மனை வாசல்கட்டி பார்க்க வந்த ராஜாக்களெல்லாம் பல்லையிளித்தார்கள்.

2. பிட்டுக்கூடைபோல பூ பூக்கும் பறிக்கப் போனால் எட்டாது.

3. சின்னப் பையனும் சின்னச் சிறுக்கியும் சிரித்துக் கட்டின தாலி, இதை சிக்கில்லாமல் அவிழ்த்தவர்க்கு சென்னைப் பட்டணம் இனாம்.

4. சிமிளியும் சிமிளியும் சேர்ந்தாற்போல், சிறுக்கிக் கொண்டை முடித்தாற்போல், அடியில் முத்துப்புதைத்தாற்போல் மேலே மஞ்சள் குளித்தாற்போல்.

5. ஒரு மரம், மரத்துக்குப் பன்னிரண்டு கிளை, கிளைக்கு முப்பது இலை.

6. இராஜாத்தி இராஜவடி பிள்ளை, அவள் பூசுகிறது சுகந்த பொடியில்லை, அவள் வயிற்றிலே ஆறுமாதம் பிள்ளை.

7. கொங்கை யென்றும் பால்வடிய பூமுடிப்பாள், கூறிவரு மாதமாகக் காவலிருப்பாள், அங்கமெலா மினுமினுக்க எட்டிப் பார்ப்பாள், அவள்பேரி லெல்லாரு மாசை கொள்வார், செங்கையினால் கொங்கைதனைப் பிசையச் சொல்வாள், தெருவினின்று னின்றுவிலை கூறுவாளே.

8. அப்படா என்ற காய் காய்க்கும்.

---

1. மீன். 2. சந்திரன். 3. தூக்கணாங்குருவி. 4. மாதுளம்பழம். 5. வருஷம், மாதம், நாட்கள். 6. தாழம்பு. 7. கம்பங்கதிர். 8. நெருஞ்சிமுள்.



# கன்னியாகுமரி

திரு. எம். என். கிருஷ்ணமாச்சாரி

நமது தாய் நாடாகிய இந்தியாவிற்கு தென்கோடியிலும் தமிழகத்திற்கு தெற்கெல்லையாக அமைந்திருப்பதும் கன்னியா குமரிமுனை. இங்கு இயற்கை வளன்களைக் கண்டு களிப்பெய்தலாம். இங்கு மூன்று கடல்களும் ஒன்று சேருகின்றன. கடலுக்கருகில் கன்னியாகுமரி கோயில் அமைந்துள்ளது. இவைகளனைத்தும் நமது மனத்திற்கும், மதிக்கும் ஒருவித மகிழ்ச்சியை அளிக்கின்றன. இக்காரணங்களினால் இம்முனையை இந்துக்கள் புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதுகின்றனர். இங்கு தங்குவதற்கு வசதியான சத்திரங்கள் பல உள.

இந்தியாவின் எல்லாபாகங்களிலிருந்தும் மக்கள் பலர் நாடோறும் இங்கு வந்து கடல் நீராடி கன்னியம்மனைத் தரிசித்து தமது பாவங்கள் நீங்கியது எனச் சாந்தியுற்று தத்தம் நாடு திரும்புகின்றனர். இவ்வூர் கோவிலிலுள்ள கன்னியாகுமரி அம்மனின் திரு உருவம் உள்ளத்திற்கு உவப்பை ஊட்டும் வண்ணம் மிக்கபேரழகுடன் திகழ்கின்றது. பூசை நிவேதனங்கள் மிக்க பக்தி சிரத்தையுடனும் ஆசாரத்துடனும் காலாகாலங்களில் நடைபெறுகின்றன. கடற்கரையில் அழகான பல நிறமணல்கள் காணக்கிடக்கின்றன. அவைகளிற் சில குங்குமத்தைப் போன்ற சென்நிறமாயும், சில கருப்பாகவும், சில அரிசி போலவும், மற்றுஞ் சில குருணைகள் போலவும் உருவங்களில் அமைந்துள்ளன. இவைகளுக்குக் காரணமாக ஒரு கதை சொல்லுகின்றனர். அஃதாவது முன்னொரு காலத்தில் குமரியம்மனுக்கு திருமணம் நடைபெற விருந்ததாயும், பின்னர் ஏதோ காரணம்பற்றி அம்மணம் நடைபெறாமல் நின்றுவிடவே அதற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த குங்குமம் செம்மணலாயும், கண்ணுக்கான அஞ்சனம் கருமணலாயும், அரிசி கல்லரிசியாகவும்மாறி இப்பொழுது காணக்கிடக்கின்றனவாம்.

மேற்கூறிய திருமணத்தைப்பற்றி இங்குள்ளோர் கூறும் வரலாறாவது:— கன்னியா குமரிக்கு மேற்கே ஆறுமைல் தூரத்தில் இப்பொழுது இருக்கும் சுசீந்திரம் என்னும் ஊரில் இருக்கும் சிவன் கோவிலில் எழுந்தருளி இருக்கும் தாணுமாலயன் என்னும் பெயர் பூண்ட சிவபிரான் கன்னியா குமரிக்கு வந்து, குமரியம்மையைக் கண்டு, தன்னை மணந்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு அவ்வம்மையார் மறுநாள் விடிவதற்குள் கணுவில்லாக் கரும்பும், கண்ணில்லாத் தேங்காயும், அன்றே விதைத்து அன்றே விளைத்து அன்றே அறுத்த நெல்லினரிசியும் கொண்டுவந்து கொடுப்பதாயிருந்தால், தான் அவரை மணம் செய்து கொள்வதாகக் கூறினார்.

சிவபெருமானும் அவ்வாறே தமது தெய்வத்தன்மையால் தயார் செய்து கொண்டு மறுநாள் விடிவதற்குள் கன்னியா குமரியை நோக்கிச் சென்றார். இவர்களுடைய திருமணம் நிறைவேறின் உலகிற்கு பலதீமைகள் விளையும் என்

றெண்ணி திருமால் வழியிலுள்ள பாறை ஒன்றின்மேல் சேவலைப்போல் நின்று கூவினார். அதனைச் செவியுற்ற சிவபிரான் பொழுது விடிந்து விட்டதாக எண்ணி, இனிதான் கன்னியா குமரிக்குப் போனால் திருமணம் நடைபெறாது என்றெண்ணி வந்தவழியே திரும்பிப் போய்விட்டார். இதற்கு அத்தாட்சியாக சுசீந்திரத்திலிருந்து கன்னியா குமரிக்குப் போகும் வழியில் ஒரு பாறையில் சேவலின் காலடி போலவும், பரமசிவனின் திருவடிகளைப் போலவும் அடையாளங்கள் இப்பொழுதுமிருக்கின்றன. இந்த அடிச்சுவடுகளுக்கு முன் அந்தபாறையில் தட்டினால் வெண்கலச் சத்தம் கேட்கின்றது. இவ்விடத்திலேயே குமரியம்மனுக்கென கொண்டு போன திரவியங்களை, சிவபிரான் புதைத்து வைத்திருப்பதாகச் சொல்லுகின்றனர்.

முற்காலத்தில் கன்னியா குமரியம்மன் மூக்கில் அணியாக ஒருநாக இரத்தினம் இருந்தது. அதன் ஒளியும் விலையும் அளவிட முடியாதன. அவ்வொளி கடலில் வெகு தூரங்களுக்கப்பாலும் வீசியது. அது கண்டு மாலுமிகள் பலர் அது கடற்கரை விளக்கமோ எனமயங்குவாராயினர். அதனால் இக்கோவிலின் கிழக்கு வாயில் எப்பொழுதும் அடைக்கப் பெற்றிருக்கிறது என்பர். ஆனால் இப்போது அந்நாகரத்தினம் காணப்படவில்லை.

இங்கு காலையில் தினகரன் கடலினின்று உதிப்பதையும், மாலையில் கடலில் மறைவதும் காணக்களிப்பாயிருக்கும். அன்றியும் இங்கொரு விசேடமென்னவென்றால் பௌர்ணமி யன்றுமாலை கிழக்கே பூர்ண சந்திரன் கடலினின்று மேலெழுவதும் அதே சமயத்தில் ஆதவன் மேற்கே கடலில் சாய்வதையும் காண கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்.

குமரியம்மன் மணம் செய்து கொள்ளாமல் என்றும் குன்றாக் கன்னியாக இங்கு எழுந்தருளி இருப்பதன் காரணமாக இவ்வூர் கன்னியா குமரி என்னும் பெயர் பெற்றது.





# தேவி ஸ்ரீ அஹல்யாபாய்

ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள்

நமது பாரத தேசத்தின் மேன்மையை சீர்தூக்கி சிறப்புறும்படி செய்விக்க தோன்றிய மாது சிரோன்மணிகளுக்குள் தேவி ஸ்ரீ அஹல்யாபாயும் ஒரு முக்கியமான ஸ்தானத்துக் குறியவள். சிவாஜி மஹாராஜா நிலைநாட்டிய மஹாராஷ்டிர ராஜ்யத்தை மேன்மேலும் பலப்படுத்தி மொகலாய படையெடுப்புக்கு இடங் கொடுக்காமலிருக்க முயற்சி செய்துவந்த பீஷ்வாக்கள் அரசாட்சி செய்துவந்த காலத்தில் அஹல்யாபாய் ஒரு எளிய மஹாராஷ்டிர குடும்பத்தில் 1735ம் வருஷத்தில் பிறந்தார். இவருடைய தகப்பனார் ஆனந்தராவ் அந்தக் காலத்திய வழக்கத்தின்படி அஹல்யாபாய்க்கு எட்டாவது வயதில் மல்ஹரிராவ் புதல்வரான காந்தராவ் ஹோல்காருக்கு மணம் செய்து வைத்தார். மல்ஹரிராவ் மஹாராஷ்டிர தேசத்தை அரசாண்டு வந்த பாஜி ராவ் பீஷ்வாவிடத்தில் சுபேதாராக வேலை பார்த்து வந்தார். மாளவம் என்ற சிறிய ராஜ்யம் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மல்ஹரிராவ் அதிக பராக்கிரமசாலி. போர்க்களத்தில் விரோதியை புறங்காட்டி ஓடச்செய்யும் சாமர்த்தியம் வாய்ந்தவர். ஒரு சிறந்த போர்வீரர். பீஷ்வா விடத்தில் உண்மையான ராஜவிசுவாச முள்ளவர். தேசமெங்கும் நன்குமதிக்கப்பட்டு புகழுடன் வாழ்ந்து வந்தார். மல்ஹரிராவ் தன் வாழ்நாளில் அதிக காலத்தை போர்களத்திலேயே செலவழிக்க வேண்டி ஏற்பட்டதால் தன் சமஸ்தானத்தின் வேலைகளைச் சரிவர செய்ய சாத்தியமில்லாமல் போய்விட்டது. ஆனால் அஹல்யாபாய் இவருடைய உதவிக்கு வந்தார். ராஜாங்க வேலைகளை கவனிக்கும்படியான திறமை இவளிடமிருந்தது. இவள் மிகவும் சாமர்த்தியமாகவும் தீர்க்காலோசனையுடனும் சமஸ்தான காரியங்களை நடத்தி வந்தாள்.

அஹல்யாபாய்க்கு இருபத்து ஒன்பதாவது வயது நடக்கும்போது இவருடைய கணவன் கம்பர் கோட்டை முற்றுகையில் உயிரிழந்தார். அந்த காலத்தில் உயர்ந்த வாழ்க்கையிலிருந்துவந்த அஹல்யாபாயைப் போன்ற ஒரு ஹிந்து விதவைக்கு கணவனை இழந்தது எவ்வளவு ஆராத்துயரத்தை உண்டாக்கியிருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இதோடு நிற்காமல் அஹல்யாபாய்க்கு தொடர்ந்தாப்போல் வந்த கஷ்டங்களுக்கு அளவேயில்லை. "பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்று சொல்வதுபோல் அஹல்யாபாய்க்கு ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்ட கஷ்டங்கள் இவரைத் துன்பசாகரத்தில் வீழ்த்தின. இவருக்கிருந்த ஒரே பெண்ணின் புருஷனும் இறந்தார். அவருடன் பெண்ணும் அந்த காலத்திய கொடிய வழக்கத்தின்படி உடன்கட்டை ஏறினாள். பெண்ணையும் மருமகனையும் இழந்த அஹல்யாபாய் தன்னுடைய ஒரே புத்திரனையும் பறிகொடுத்தாள். கடைசியாக மல்ஹரிராவும் விண்ணுலகு ஏஹினர்.

அஹல்யாபாய் மனமுடைந்தவளானாள். சிறிது காலம் இவர் உயிர் உடலை விட்டு நீங்குவதுபோல் உருகினார். புகழ் வாய்ந்த இவருடைய குடும்பத்துக்கு சகிக்கமுடியாத பேராபத்துகள் ஏற்பட்டு

விட்டன. இவ்வித கஷ்டங்களை இவருடன் அனுபவிக்க இவருடைய மாமி கௌதமி பாய் மாத்திரம் உயிருடனிருந்து வந்தாள். வயது முதிர்ந்த மாமிக்கு மனச்சாந்தி செய்ய அஹல்யாபாயைத் தவிர வேறு யாரும் இல்லை. முற்காலத்திய ஹிந்து விதவைகளைப்போல் அஹல்யாபாய் மூலையில் அடைபட்டு இருக்கவில்லை. மனோ தைரியத்துடனும் சாமர்த்தியத்துடனும் ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொண்டார். மல்ஹரிராவ் காலத்திலேயே ராஜாங்க வேலைகளை கவனித்துவந்த அனுபவம் இவருக்கு இப்போது மிகவும் உதவியாக இருந்தது. மாளவ தேசத்தை முன்னணியில் கொண்டுவந்து வைக்க ஊக்க மெடுத்துக்கொண்டார்.

அரசாங்க வேலைகளோடு அஹல்யாபாய்க்கு ராணுவப்படையை நிர்வகிக்கும் வேலையும் ஏற்பட்டது. இளம் வயதில் அஹல்யாவுக்கு உண்டான பொறுப்புக்கு என்னவென்று சொல்வது? மல்ஹரிராவ் இறந்ததும் அரண்மனையைச் சேர்ந்த சில பிரபுக்கள் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். நாதனில்லாத அபலை அரசாட்சி செய்வது அவர்களுடைய துர் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள சந்தர்ப்பம் கொடுத்துவிட்டதாக அவர்கள் நினைத்தார்கள். அஹல்யாவை சுலபமாக ஏமாற்றி தங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளலாமென்று அவர்கள் செய்த சூழ்ச்சிகளெல்லாம் வீண் பகல் கனவாக போயின. தங்கள் பையன் ஒருவனை அஹல்யாவை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படி செய்து அதன்மூலம் ராஜ்யத்தைத் தங்கள் கைவசப்படுத்திக் கொள்ளப் பார்த்தார்கள். அஹல்யாவை எவ்வளவோ வற்புறுத்தியும் இதற்கு அவள் உடன்படவில்லை. அவர்களுடைய தந்திரவலையில் அவர் சிக்கிக்கொள்ளவில்லை. பீஷ்வா மல்ஹரிராவ் செய்த பேருபகாரத்தை மறந்தாரில்லை. அவருக்குப் பின் அஹல்யாபாயின் வீரத்தையும் அவர் தன்னிடத்தில் காட்டிவந்த மதிப்பையும் கண்டு வியந்து இவர் குடும்பத்திற்கு நன்றி செலுத்திவந்தார். மாளவ தேசத்து அரசியாக அஹல்யாவை பீஷ்வா அங்கீகாரம் செய்து கொண்டதோடு தக்க உதவி செய்வதாகவும் வாக்களித்தார்.

அஹல்யாபாய் இருபத்திஐந்து வருஷங்கள் மாளவ தேசத்தை அரசு புரிந்து வந்தார். ஜனங்களுக்கு இவர் செய்த நன்மைகள் அநேகம். ஆங்காங்கு யாத்ரீகர்கள் தங்குவதற்கு சத்திரங்களையும், குளங்களையும் ஏற்படுத்தினர். கிராமங்களிலுங் கூட பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன: ஏழைப் பெண்களுக்கு விவாகம் செய்துவைக்க பொருளுதவி சர்க்கார் பொக்கிஷத்திலிருந்து கொடுக்கப்பட்டு வந்தது. புருஷனை இழந்த அனாதைப் பெண்களுக்கு தக்க உதவி அளிக்கப்பட்டது. வியாபார வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்பட்டன. தேசமுழுதும் குடிகள் திருப்தியாகவும் க்ஷேமமாகவும் வாழ்ந்து வந்தார்கள். அஹல்யாவை பிரஜைகள் எல்லாரும் சக்திவாய்ந்த "தேவி" அஹல்யாபாய் என்று அழைத்தார்கள். இவருடைய மாமி இறந்து போவதற்கு முன் அஹல்யாபாய் அவர் வேண்டிக்கொண்டபடி ஒரு சத் புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார். அவர் தான் பின்னால் துகோஜிராவ் ஹோல்கார் என்ற பெயருடன் மாளவ தேசத்து அரசானார்.



# பஞ்சக்ரோச க்ஷேத்திரங்கள்

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

சென்ற இதழில் கும்பகோணத்தைப் பற்றிச் சொன்னேன். இப்பொழுது அதைச் சுற்றியுள்ள பஞ்சக்ரோச க்ஷேத்ரங்களான ஐந்து புண்ய ஸ்தலங்களைப் பற்றி சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.

1. மத்யார்ஜுனம் (திருவிடைமருதூர்.) இது கும்பகோணத்திலிருந்து கிழக்கே மாயவரம் போகும் மோட்டார் ரஸ்தாவிலிருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷனுமாகும். இங்கு பிருஹத் குசாம்பாள் ஸமேத மாகலிங்கேசுவரர் விளங்குகிறார். விபண்டக மகாமுனி அர்த்தநாரீசுவரான பரமசிவனை தரிசிக்க 24 சதுர் யுகம் தவம் செய்ததால் அங்கு சிவபெருமான் காட்சியளிக்கத் தோன்றினார். காவேரியில் கல்யாண தீர்த்தத்தில் புஷ்ய பௌர்ணமி புஷ்ய நக்ஷத்திரத்தில் ஸ்நானம் செய்வது மிக விசேஷம். மகாலிங்கேசுவரரின் எதிரிலுள்ள காருண்யாமிருத தீர்த்தத்தில் மேஷஸங்கரமணத்திலும், வாயவ்யத்தில் ரோமசருக்கு ஞானத்தைத்தந்த காகஹேமாங்கத தீர்த்தத்தில் வைசாக பௌர்ணமியிலும் ஸ்நானம் விசேஷ பலனைத் தரும். இந்த க்ஷேத்திரத்தில் கச்யபர் பாலகிருஷ்ணனை தெரிசிக்க 12 யுகம் தவம் செய்ய பகவான் ஸ்ரீ பாலகிருஷ்ணன் தவழ்ந்து கொண்டு நிர்வாபரண பூஷிதராய் இடுப்பில் கட்டிய உரலுடன் அர்ஜுன விருக்ஷத்தின் மூலத்தில் ஆவிர்ப்பித்தார். அந்த விருக்ஷம் மற்ற எல்லா விருக்ஷங்களின் நடுவில் உயர்ந்து வளர்ந்திருந்ததால் இது மத்யார்ஜுனமென்று பிரசித்தமாயிற்று. பஞ்சக்ரோச யாத்திரை செய்பவர்கள் முதலில் இந்த க்ஷேத்ரத்தை தரிசிக்க வேண்டும். இங்கு தைப்பூசத்தில் ஏராளமாக கூட்டம் கூடுகிறது.

2. சம்பகாரண்யம் (திருநாகேசுவரம்.) இங்கு ஆதிசேஷன், பரமசிவனுக்கு ஆபரணமாகவும், ஞான பக்தியாதிகள் விருத்தியாகவும் இருந்து பரமசிவனைக் குறித்து நூறு வருஷம் தவம் செய்து அவருடைய அபீஷ்டத்தைப் பெற்றார் சம்பக விருக்ஷத்தை ஸ்தாபித்து, அழகான தீர்த்தத்தையும் பல மண்டபங்களையும் கட்டினார். கிரிகுசாம்பா ஸமேதரான இந்த நாகேசுவரரை தக்ஷகனும் சூரியனும் பூஜித்து அவர்களின் அபீஷ்டத்தை அடைந்திருக்கின்றனர். அந்த தீர்த்தம் நாக தீர்த்தமென்றும், சூர்ய தீர்த்தமென்றும் சொல்லப்படும். விருச்சிக மாஸத்தில் பானு வாரத்தில் இங்கு ஸ்நானம் செய்வது விசேஷம். மூன்று தடவை நாகரென்ற ரிஷி இவரை ஆராதித்ததால் இந்த க்ஷேத்ரத்திற்கு த்ரி நாகேசுவரமென்று பெயர். இதன் வெகு சமீபத்தில் ஆகாச நகரமென்றும் துளஸீவனமென்றும் சொல்லப்படும் ஸ்ரீவெங்கடேசரின் மகா க்ஷேத்ரமிருக்கிறது. இங்கு மார்க்கண்டேய மகாமுனி பகவானை மாப்பிள்ளையாகச் செய்துகொள்ள உப்பில்லாமல் கந்தமூலசாகங்களை புசித்துக்கொண்டு ஆயிரம் வருஷம் தவம் செய்தார். ஸ்ரீஹரி

யின் ஆக்ஞையின் பேரில் பூதேவி ஓர் குழந்தையாய் துளஸீ மூலத்தில் மார்க்கண்டேயருக்கு கிடைத்து அவரிடம் அருமையாய் வளர்ந்துவர, அவளை விவாகம் செய்து கொள்ள பகவான் வெங்கடேசன் விருத்த பிராமண ரூபியாய் கபம் நிறைந்த வதனத்துடன் வந்து சேர; பூதேவி அவரை விவாகம் செய்து கொள்ள இச்சைப்படாமற்போக, வந்த அதிதியின் அபீஷ்டத்தை பூர்த்தி செய்ய முடியாமற் போகிறதே என்று மார்க்கண்டேயர் ஸ்ரீ ஹரியை மகா ஸ்த்தோத்திரம் செய்ய, பகவான் தன் நிஜரூபத்தைக் காட்டி அவளை விவாகம் செய்து கொண்டு மார்க்கண்டேயரின் இஷ்டப்படி சமையலுக்கு உப்பு போடத் தெரியாத அந்த தேவியரால் உப்பில்லாமலேயே நிவேதனத்தை ஏற்றுக் கொள்வதாய் ஒப்புக் கொண்டு, உப்பிலியப்பன், அலவண வெங்கடேசன் எனப் பெயர் கொண்டவராய் விளங்கி வருகிறார். ஓர் நாளிலேயே அபீஷ்ட ஸித்தியைத் தருவதால் அஹோராத்ரமென்ற தீர்த்தம் அங்கு இருந்து வருகிறது.

3. ருத்ராக்ஷாரண்யம் (தாராசுரம்.) இது கும்பகோணம் நகரத்திற்குள்ளேயே தஞ்சாவூர் போகும் மோட்டார் ரஸ்தாவிலிருக்கிறது. ரயில்வே ஸ்டேஷனு முண்டு. இங்கு பரமசிவன் சுயம் ருத்ராக்ஷமரத்தை வைத்து பயிர் செய்தார். முனியை சூலத்திலேற்றி சங்கடப் படுத்தியதால் யமனுக்கு பகவான் அளித்த சங்கடத்தை, இந்த க்ஷேத்ரத்தில் உருத்ராக்ஷ விருக்ஷத்தினடியில் பத்தாயிரம் வருஷம் யமன் கோரமான தவம் செய்து அதை நிவிருத்தி செய்து கொண்டார். யமதீர்த்தமென்று புண்யகரமான ஓர் தீர்த்தத்தை நிர்மாணம் செய்து பரமசிவனுக்கு மகோற்சவம் நடத்தினார். இந்த தீர்த்தத்தில் ஆவணி மாதத்தில் அமாவாசையில் ஸ்நானம் செய்தால் கங்காஸ்நானப் பலனென்று சொல்லப்படுகிறது. சூரசேனன் இங்கு அன்னதானம் செய்ய பதினாயிரம் பிரம்மஹத்திகள் நீங்கின. யக்ஞரென்ற பிராமணருக்கு அபஸ்மார ரோகம் இதில் ஸ்நானம் செய்ததால் விலகியது. மஹேந்திரனின் ஐராவதத்திற்கு ரிஷிசாபத்தால் நீலவர்ணமுண்டாகி, ஸிம்ஹமாஸம் அமாவாசையில் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பரமசிவனை பூஜித்ததின் பேரில் முன்போல், அவேத வர்ணம் வந்தது. அதனால் ஐராவதேசுவரர் என்று அங்குள்ள சிவமூர்த்திக்கு பெயர் வந்தது. அம்மாள் பெயர் தேவ நாயகி. தாரனென்ற ஓர் அசுரோத்தமன் அவர்களின் கூட்டத்தார்களுடன் சுக்ராசாரியிடமிருந்து உபதேசம் பெற்று இந்த ஐராவதேசுவரனை பூஜித்து ஸத்கதி பெற்றானதலால் இவ்வூருக்கு தாராசுர மென்று பெயர் வந்தது.

4. குஹாசலம் (ஸ்வாமிமலை). இது கும்பகோணத்திலிருந்து திருவையார் போகும் மோட்டார் மார்க்கத்திலிருக்கிறது. இதற்கு ரயில்வே ஸ்டேஷனுமுண்டு. இது சுப்பிரமண்யருடைய மகா க்ஷேத்திரங்களி லொன்றாகும். பிரம்மஹத்தியாதி பாபங்களை நிவிருத்தி செய்யக் கூடியது. ஒருதரம் தரிசித்தாலே ஜனங்கள் பரிசுத்தமாவார்கள். பரமசிவன் எல்லோருக்கும் ஞானப்ரதனாய் குரு ராஜனாய் இருந்த போதிலும் இந்த க்ஷேத்ரத்திற்கு மகாமகிமையை அளித்திட, எல்லா





வேத மந்தரங்களுக்கும் சிரேஷ்டமான பிரணவத்தை இங்கு உபதேசம் பெற்றார். சுப்ரமணியரின் உபதேச ஸ்தலமான இந்த க்ஷேத்ரத்தில் கிருத்திகா நக்ஷத்திரத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடுகின்றனர். சுப்ரமணியர் இருக்கும் இந்த சுவாமிமலைக்கு அறுபது வருஷங்கள் படிக்கட்டுகளாயும், ஆறுருதுக்கள் கோபுரங்களாகவும், தேவஸ்திரீகள் பிரகாரங்களாகவும், வாசல்களாகவு மிருக்கின்றனர். இங்கு அங்கப் பிரதக்ஷிணம் வெகு விசேஷம். குகாசலத்திற்கு பூர்வத்தில் குமாரதீர்த்தமும், சன்னதியில் குகதீர்த்தமும் இருக்கின்றன. கார்த்திகை பௌர்ணமியில் ஸ்நானம் விசேஷம். இங்கு பிரார்த்தனைகள் வெகு விசேஷமாய் நடந்துவருகின்றன. கேகய ராஜன் சிவத்ரோகம் செய்து வாதரோகமடைந்து, இங்கு ஸ்நானம் செய்து ஷண்முகனை தரிசித்ததால் அது நிவிருத்தியாகி கார்த்த வீரியார்ஜுனனைப் பெற்றான். அசலானந்த மென்று அவருடைய விமானத்துக்குப் பெயர்.

5. பாடலாரண்யம் (கருப்பூர்). இது கும்பகோணத்திற்கு வடகிழக்கில் அணைக்கரை போகும் மோட்டார் ரஸ்தாவிலிருக்கிறது. அபிராமியம்பாள் சமேத ஸ்ரீசுந்தரேஸ்வரர் இங்கு விளங்குகிறார். பௌண்டரீகம் செய்த பலன் அவரை தரிசிப்பதாலுண்டாகும். அகஸ்தியர், வாலகில்யாதி மகரிஷிகள், குபேரன், ஸோம கேது ராஜன், பகீரதன் முதலிய மகாராஜாக்கள் இவரை ஆராதித்திருக்கின்றனர். சைத்ர பௌர்ணமியில் அங்கு பிரம்ம தீர்த்த ஸ்நானம் மிக விசேஷம். அங்கு ஸ்ரீதேவி சமேதராய் காலவருக்கு அபீஷ்டத்தைத் தந்த ஸ்ரீ வெங்கடேச மூர்த்தி இருந்து வருகிறார்.

ஆக இந்துக்கள் யாவரும் இந்த ஐந்து புண்யக்ஷேத்ரங்களையும் ஒரே நாளில் யாத்ரை செய்து மாலை ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமியை தரிசனம் செய்தால் ஸகல அபீஷ்ட சித்தியும் உண்டாகும்.

ஸ்ரீமன் மங்கள நாயகீ ஸஹசரம்
கல்யாண ஸந்தோஹதம்

முக்தாமுக்த ஸுரௌக வந்தித
பகத்வந்தார விந்தம் முதா!

த்யாயே ஸந்ததமாதி நாயகமஹம்
சிருஷ்ட்யாதி ஸத்காரணம்

ஸ்ரீமத்திவ்ய வீதாகடேச்வர மஜம்
க்ஷிப்ர ப்ரஸாதப்ரதம்!!

த்ரிம்சத் த்ரிகோடி வஸுருத்ர திவாகராதி
தேவாதி தேவகண ஸந்ததஸேவ்யமானம்!
அம்போஜ ஸம்பவ சதுர்முக கீயமானம்
வந்தேசயானமிஹ யோகினி சாரங்க
[பாணிம்!!



# அகங்களிலிருக்கும் சில சாமான்களை சுத்தி செய்யும் முறை

"நளினி"

நாம் சுகமாக விருப்பதற்கு நம் வீடும், வாயிலும் சுத்தமாக இருப்பது அவசியம். நம் வீடு சுத்தமாக விருக்க வேண்டுமானால் வீட்டிலிருக்கும் ஒவ்வொரு பதார்த்தங்களும் சுத்தமாகவும், அதது இருக்கவேண்டிய இடத்தில் ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நாம் அவசியமாக வேண்டிய சாமான்களைவிட அதிகமான சாமான்களைக் கொண்டு வீட்டை நிரப்பி வந்தால் நாம் நாமாகவே அசுத்தியையும், கஷ்டத்தையும் உண்டாக்கிக்கொண்ட மாதிரியாகிறது. அல்லாமல் வீட்டை சிறியதாக்கிக் கொண்டு காரியத்தையும் அதிகப்படுத்திக் கொண்டு விடுகிறோம்.

ஆனால் இந்த நவ நாகரிக காலத்தில் ஓர் ஐம்பது ரூபாய் சம்பளக்காரன் வீட்டில் கூட சில நாற்காலிகள், மேஜைகள், பீரோ கடைசி பக்ஷம் ஒன்று, துணிகள் தொங்கவிடும் கோட்ஸ் ஸ்டான்டு, புஸ்தக அரை (Book Shelf), கண்ணாடி, இரண்டொரு கட்டில்கள் முதலானவைகளாவது அவசியமாக இருக்கவேண்டியிருக்கின்றது. இதில் கூறிய இத்தனை சாமான்கள்கூட இல்லாத வீடுகள் கிடையவே கிடையாது என்றே சொல்லலாம்.

இவ்வித சாமான்களை வைத்துக் கொள்பவர்கள், அவைகளை உபயோகிக்கும் விதத்தையும், அவைகளை அப்பப்பொழுது சுத்தி செய்து ஒழுங்கான நிலைமையில் வைத்துக் கொள்ள வேண்டிய விதத்தையும் அந்த அந்த குடும்பப் பெண்கள் அறிந்துகொள்ள வேண்டியதோர் கடமையாகும். அநேகர் தங்கள் அகத்தின் நிரம்ப இவ்வித சாமான்களை வைத்துக் கொண்டு அவைகளை சரியாக வைத்துக் கொள்ளத் தெரியாமல் இருக்கிறார்கள். ஆகையால் நாற்காலி, மேஜை முதலிய சாமான்களை (Furniture) சுத்தி செய்யும் சில சுலபமான முறைகளை எழுதத் தலைப்பட்டிருக்கிறேன். இதனால் என் அருமை சகோதரிகளுக்கு கிஞ்சிற்றேனும் பிரயோஜனம் ஆகுமென்று நம்புகிறேன்.

மரச்சாமான்களை சுத்தமாக வைக்கும் முறை:—நாற்காலி மேஜை முதலிய மரச்சாமான்களை முதல் முதல் சீமை எண்ணெயில் ஒரு சிறிய துணியை நனைத்துக்கொண்டு நன்றாக தேய்ப்பதே நல்ல முறை. இதனால் சாமான்களிலிருக்கும் அழுக்கு போய்விடுவதல்லாமல், விஷகிருமிகளும் (விஷப்பூச்சி பூண்டுகளும்) நாசமாய் விடும். அவைகளில் விஷப்பூச்சி பூண்டுகள் மறுபடியும் வந்து சேர அவகாச மேற்படாது. அதற்கப்புறம் ஓர் தட்டில் அல்லது கிண்ணத்தில் இலுப்பெண்ணையை வைத்துக்கொண்டு, ஓர் சுத்தமான துணியால் நன்றாகத் துடைக்க வேண்டும். சுமார் நான்கு அணா விலை பெறுமான இலுப்பெண்ணையைக் கொண்டு



வீட்டிலிருக்கும் மரசாமான்கள் முழுவதையும் சுத்தி செய்து அழகு படுத்திவிடலாம். வருடத்தில் மூன்று முறை இவ்விதம் சுத்தி செய்வதால் வீட்டு மரசாமான்கள் அனைத்தும் அழகாக மின்னும். அல்லாமல் எந்தவித பூச்சிகளும் இவைகளை அணுக அவகாசமில்லாமல் போய்விடும். சாமான்களின் வாழ்வும் அதிகரிக்கும்.

பாலீஷ் செய்யப்பட்ட மேஜைகளின் மேல் சுடுகிற டம்பளர் முதலியவைகள் வைத்ததினால் கறைகள் ஏற்பட்டிருந்தால், இலுப்பெண்ணையில் கொஞ்சம் உப்புப் பொடி போட்டு குழைத்து, அதை கறைகளின்மேல் பூசவேண்டும். மூன்று மணி நேரம் ஊறின பிறகு, ஓர் கிழிந்த பட்டுத் துணியால் நன்றாகத்தேய்த்து, துடைத்து விட்டால் கறை போய்விடும்.

எந்த விஷயத்திலாகட்டும் உபயோகிக்கும் பதார்த்தம் முக்கிய மல்ல. அந்த பதார்த்தத்தை சரியான முறையில் உபயோகிப்பதே முக்கியம்.

மூங்கில் அல்லது பிரம்பு சாமான்களை சுத்தி செய்யும் விதம்:—முதலில் இவைகளை வெய்யலில் வைத்து, அவைகளின் மேல் படிந்திருக்கும் தூசிகளை ஓர் சுத்தமான வஸ்திரத்தால் நன்றாகத் தட்டிவிட வேண்டும். அப்புரம் ஓர் தொட்டியில் சுடும் தண்ணீரைக் கொட்டி அதில் சோப்புத் தூள் கொஞ்சமும் அல்லது லக்ஸ் (Lux) ம், உப்பு பொடியையும் போட்டு நன்றாகக் கலக்கி, அந்த தண்ணீரை "ஸ்பான்ஜினா"லோ (Sponge) அல்லது ஓர் சுத்தமான துண்டினாலோ நனைத்து நனைத்து சாமான்களின் எல்லா பாகங்களையும் நன்றாக அலம்பித் துடைப்பதால் அழுக்கெல்லாம் மாயமாய் விடும்.

பிரம்பு நாற்காலிகளின் அடிபாகம், அல்லது சில மர நாற்காலிகளுக்கு பிரம்பினால் பின்னப்பட்டிருக்கும் அடிபாகம் தளர்ந்திருந்தால், அதின்மேல் கொஞ்சம் ஈரம் செய்யப்பட்ட துணியை விரித்து சூடான 'இஸ்திரி' பெட்டியால் தேய்த்தால் சரியான மட்டத்திற்கு வரும்.

கம்பளி, ரத்தின கம்பளி, ஜமக்காளம் முதலியவைகளை சுத்தி செய்யும் முறை:—ஜமக்காளம் முதலியவைகளை சாதாரணமாக வண்ணான்களே தோய்த்துக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஆனால் விலை யுயர்ந்த ரத்தின கம்பளங்கள், கித்தார் பாய்கள் முதலியவைகளை வாரத்திற்கொரு முறையாகிலும் நன்றாக வெய்யிலில் படுமாறு கம்பிகளின் மேலோ, அல்லது மாடியின் மேலோ உலர்த்தி, தூசி போகுமளவும் நன்றாக உதர வேண்டும். கொஞ்சம் சாதாரணமான கெட்டியான ரத்தின கம்பளமானால் மடி கோலால் நன்றாக தூசிகளைத் தட்டி நன்றாக காற்றிலும், வெய்யலிலும் உலர்ந்த பிறகு வீட்டினுள் கொண்டுவர வேண்டும்.

பாய்களை சுத்தி செய்யும் முறை:—முதலில் ஈரத்துணியால் பாயின் இரண்டு புரமும் நன்றாகத் துடைத்து அழுக்கை எடுத்துவிட வேண்டும். அப்புறம் உப்புப் பொடி கலந்த ஜலத்தினால் பாயை நன்றாகக் கழுவி உலர்த்திவிட்டால் சுத்தமாய் விடும்.

கதவுத் திரைகளை சுத்தி செய்யும் முறை:—இந்தக் காரியம் நம் சகோதரி

களுக்குத் தெரிந்திருந்தாலும்கூட நான் இவ்விடம் சில குறிப்புகளை மட்டும் தெரிவிக்கிறேன். கதவு துணித்திரைகளில் தான் அதிகமாக தூசியும், அழுக்கும், விஷக்கிருமிகளும் சேருகின்றன. ஆகலால் இவைகளை அப்பப்பொழுது எடுத்து துவைத்து சுத்தி செய்ய வேண்டும். ஆகையால் திரைகளை அப்பப்பொழுது துவைப்பதற் கனுகூலமான, அவற்றைத் துவைத்தால் சாயம் போகாத, துணியினாலேயே தைய்க்க வேண்டும். கதவுத் திரைக்கு முதல்தரமான துணி 'கதர்' தான். பூப்போட்ட கதர் துணியையாவது வாங்கி திரை தைய்க்கலாம். அல்லது வெறும் துணியை வாங்கி நாமே எம்ப்ராய்டரியோ அல்லது "மைத்துளி வேலை"யோ (Spray Work) முதலிய நாசுக்கான வேலை செய்து அலங்காரமாக தொங்க விடலாம். துணி வர்ணம் போகாமலிருப்பதற்கு ஜலத்தில் கொஞ்சம் உப்பையும், 'வினிகரை' (Vinegar) யும் கலந்து, அந்த ஜலத்தால் துணியைத் துவைத்தால் நலம்.

வெளுப்பு வார்னீஷ் போட்ட மர சாமான்களை சுத்தி செய்யும் முறை:— முதலில் சுத்தமான துணியால் சாமானை தட்டி துடைத்துவிட்டு, அப்புறம் கொஞ்சம் அமோனியா சேர்ந்த த்ராவகம் கலந்த வெதவெத வென்றிருக்கும் வென்னீரால் அலம்ப வேண்டும். பின் உலர்ந்த துணியால் துடைத்து விட்டால் வர்ணம் வெள்ளை வெளேரென்று பளபள வென்று மின்னும். அல்லது ஈரத்துணியை சிமை சுண்ணாம்புப் பொடியில் தோய்த்துக் கொண்டு சாமான் முழுவதும் நன்றாக தேய்த்துவிட்டு, பச்சை ஜலத்தால் சாமானை அலம்பி உலர்த்தி, துணியால் துடைத்து விட்டால் அழுக்கு கொஞ்சமும் இல்லாமல் போய் சாமான் புத்தம் புதிதாகிவிடும்.

## விஜய லக்ஷ்மியின் பெருமை

ஐக்கிய மாகாண ஸ்தல ஸ்தாபன மந்திரியும், பண்டித ஜவஹரின் சகோதரியுமாகிய ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார். அம் மங்கையர்க்கரசியாரை மக்கள் யானை மீது உட்காரச் செய்து ஊர்வலம் நடத்தினார்கள். ஸ்ரீமதி பண்டிட் ஓர் ஏழைக் குடியானவன் குடிசைக்கு முன் இறங்கி அவன் கொடுத்த கூழை மனமுவந்து சமமாக உட்கார்ந்து உண்டார். சில மந்திரிகளைப்போல் விருந்துக்கச்சேரி எதிர்பார்க்கவில்லை. எந்த நிலையிலிருந்தபோதிலும் ஏழைகளின் சேவையே தன் லட்சியம் என்பதை லக்ஷ்மி காட்டியது மற்றப் பெண்களுக்கும் உதாரணமாகும்! வாழ்க விஜயலக்ஷ்மி!!





கோவிந்தராஜர் சன்னதி, திருப்பதி.



தேவஸ்தான சத்திரம், திருப்பதி.

Photo by Messrs G. K. Vale & Co., Madras.

# விதவைகளுக்கு விமோசனம் உண்டா?

திரு. செ. கு. இராமசாமி பிள்ளை

●


இந்தியப் பெண் திலகங்களாகிய நம் சகோதரிகளுக்கு கொடுக்க வேண்டிய முக்கியமான சுதந்திரங்களுள் தலை சிறந்தது "விதவா விவாகம்."

பால் மணம் மாறா இளமை பருவமுடைய குழந்தைகளை மணை மீதமர்த்தி திரு நாணேற்குமாறு செய்கின்றனர். அச் சமயத்து அப்பெண் குழந்தைகளுக்கு அஃதோர் விளையாட்டே போல் தோன்றுகின்றது. விதிவசத்தால் தன் இளமையிலேயே கணவனிறக்க அச்சடங்கு வினையாகவே முடிந்துவிடுகிறது.


அப்பால்ய (விதவை) சகோதரிகள் என் செய்வார்கள்! எதிர்காலத்தை நினையா நம்மிடத்தே அப்பாவமும் பழியும் சேருமே யொழிய அவர்கள் பாலாகா.

ஏழு (7) வயதடைந்த ஓர் சிறுமிக்கு திருமணம் நடத்தியாக (10) பத்தாவது வயதில் அச்சிறுமிதன் கணவனை இழப்பின் மறு மணத்தின் யோசனை எப்படி? அவளது மரணமே இரண்டாம் மணத்தின் முடிபாகும். என்னே நமது கொடுந் தன்மை! அவளது பருவதிசையில் அவள் எண்ணிய எண்ணங்களும் சினத்துடன் மனத்துள் நம்மை சபித்த சாபங்களும் வீண்போகுமா? கணவனைத் துறந்த அப்பால்ய விதவை பூச்சூடலையும், மஞ்சள் பூசுதலையும், திலகம் தீட்டலையும் இன்னோரன்ன பிறசுபக்கிருத்தியங்களையும் இழக்கிருள். ஆனால் தன் யௌவன பருவத்தில் திரும்பவும் தன்னைப் போன்ற (யௌவன) பெண்கள் பூவணிந்து, சாந்திட்டு, புன் நகை முகத்திற்றவழ தத்தம் கொழுனருடன் போதலைக்கண்டும், இளந் தம்பதியர் அனுபவிக்கும் காதல் லீலைகளையும் சிற்றின்ப உணர்ச்சியையும் கண்டும், கேட்டும் பல புத்தகங்களின் மூலமாயும் அறிந்த அவள் மனத்தினின்றும் எழுந்த அன்பின் பெருக்கால் மறுமணம் வேண்டுமென (தன் பிதாவிடம்) விண்ணப்பம் செய்யினும், அவர்கள் (மகளை நோக்கி) மஹா கற்புடையவர்கள் போல் "ஐயோ! என்ன மதியீனம்! பெண்மணிகள் கற்புடன் இருக்கவேண்டு மென்பது நீ அறியாததா? வேண்டாம், பெண்கள் மறுமணம் செய்து கொள்ளல் மஹாபாதகம். சிவ! சிவ!! இது என்ன கலிகாலக் கொடுமை" எனக் கூறிக்காதில் விரல்களை அடைத்துக் கொள்ளுகிருர்கள் பலர் நடை முறையில். ஆனால் 60 வயதுக் கிழவன் தன்னைப் 'பராமரித்துக்' கொள்ள மணக்கலாம் கன்னிகையை!

"அடபிரகஸ்பதியே! இந்த வயதிலா உனக்கு கலியாணம், எருமுட்டைகளல்லவா (உனக்கு) மனைவிகளாகி உன்னை மருவக்கிடக்கின்றன," என்று பலபேர் கேலி செய்யினும் காதிற்கொள்ளாது, "என்னுங்கோ, எங்க குடும்பத்திலே உள்ள குழந்தைகளை வளர்க்கவும், என்பசி வேளை அறிந்து ஆகாரம் கொடுக்கவும் எனக்கு யார்கதி! ஆகையினுல்தான் ஒரு பெண்ணை கலியாணம் செய்து கொள்ளுவதே நன்றெனக் கொண்டேன். இதி



ஸ்ரீமதி பார்க்கதூரசாய்.
ஔரங்கபாத் கலெக்டர் மனைவி. அகில பாரத மகிள சமாஜத்தின் ஜெ ஒன்றையும், இலவச ராப்பள்ளிக் கூடம் ஒன்றையும் ஆரம்பித்து வைத்தார்.



ஸ்ரீமதி சுப்பம்மகாரு, பி.ஏ., எல்.டி., முதல் வைசிய பட்டதாரி.

லென்ன பிழை?" என்று பிரசங்கம் செய்கிறார். இதைக் கேட்ட ஓர் அறிஞர் "உன்னுடைய ஒரு பெண் இளமையிலேயே மாங்கல்ய மிழந்து மங்கிக்கிடக்கின்றனளே, அவளுக்கு ஒருகதி இல்லையா? அவள் மனம் குன்றின் உன் குடி விளங்குமோ?" எனக் கூறின், (அவர்) "ஏன் மடத்தனமாகப் பேசுகிறீர். பெண்கள் மறுவிவாகம் செய்து கொள்ளுவதற்கு நம் (இந்து) சாஸ்திரம் எங்கே ஒத்துக் கொண்டிருக்கிறது," எனக் கத்துகிறார்.

ஆடவர் மறுவிவாகம் செய்து கொள்ளலாமென்றும் ஆண்களுக்கு கற்பு நிலை அவசிய மில்லை என்றும் இவரது சாஸ்திரத்தில் எழுதிவைத்துள்ளது போலும்! கற்பென்னும் பரிசுத்தத் தன்மை இருவர் மாட்டும், உண்டென்பதை அறியா மூடத்தனத்தால் இவ்வாறு பிதற்றுகின்றனர். அன்றியும், தற்போது நாம் சம உரிமை கொண்டு மதபேத மின்றி பழகிக் கொள்வதை அச்சட்டம் ஒத்துக் கொள்ளுகிறதா? பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் எனும் பிரிவின்படி அதன் அதன் கொள்கையையும், இயல்பையும் அனுசரித்து அவரவர் நடக்கின்றனரா? "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பதையும் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்றபடியும் எழுதிய அடிகளை நோக்கின் நன்கு புலனாம். முன் நிலையையும் இந்நிலையையும் சம நிலையுடன் பார்க்கும்போது கடுகிற்கும் மலைக்கும் உள்ள வித்தியாசமே தோன்றும்.

தன் நினைவின்றி (ஓர் விதவை) குழந்தைப் பருவத்தில் நடந்த போலித் திருமணத்திற்காக வாழ்நாள் பூராவும் அவள் கஷ்டப்பட்டு, உடல் குன்றி, நாச மடைகிறாள்.

இனியாகிலும் அவர்களது பரிதாப நிலையையுணர்ந்து பெண்களுக்குச் சுதந்திரம் கொடுக்க விரும்பியுழைக்கும் இந்திய ஆடவர்களாகிய நாம் முதன்மையாக (கலியாணம் வேண்டாம் என்ற விதவைகள் ஒழிய) விதவைகள் மறுவிவாகம் நடத்திக்கொள்ளும் உரிமையை மனக் குறைவின்றித் தருவோமாக. அவ்வித விவாஹங்களும் வெகு சகஜமானவைகளாக வேண்டும். சகலரும் தற்சமயம் இருக்கும் சட்ட ரீதியான உரிமையை அனுஷ்டானத்தில் அனுபவிக்கும் சமூக நிலைமையை உண்டு பண்ணவேண்டும்.

இந்திய "விதவைகளுக்கு விமோசனம் உண்டா?" என்ற கேள்விக்கு இனி "விமோசனம்" உண்டு யெனும் பதில் கூறி முடிக்க முழுமுதற் கடவுளின் முழு அருள் நிரம்புவதாக.



# சொத்துரிமை வேண்டும்

## ஸ்ரீமதி கோமளம்

நம் தேசத்தில் அநேகருக்கு பெண் என்றால் சலிப்பாய் இருக்கிறது. பெண் என்றால் அநேகர் அடிமை என்றும், அடுப்பு ஊதத்தான் பெண்கள் பிறந்திருக்கிறார்கள் என்றும் நினைக்கிறார்கள். ஒரு வீட்டில் ஒரு ஸ்திரீ பிரசவிப்பாளேயானால் 'பெண்ணா, ஆணா' என்று கேட்கிறார்கள். பெண் என்றால் 'ஐயோ பெண்ணா' என்கிறார்கள். அதுவும் நாம் செய்த பாவம் போலும். ஆடவர்கள்தான் பூலோகத்தைத் தாங்கி நிற்கிறார்கள், ஸ்திரீகள் தாங்காமல் நிற்கிறார்களா? அது என்ன மூடக் கொள்கை. கடவுள் புற உருப்பை மாத்திரம் மாற்றியிருக்கிறாரே தவிர, மற்ற எல்லாவிதத்திலும் ஆடவர்களைக் காட்டிலும் ஸ்திரீகளே சிறந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. "குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா" என்பதுபோல ஸ்திரீகளே புத்தி கூர்மையும், விசாலமான நோக்கமுடையவர்களும், நினைத்தகாரியத்தை உடனே செய்து முடிக்கச் சக்தியுள்ளவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆடவர்களையும் முன்னூறு நாள்தான் சுமந்து பெற்றெடுக்கிறார்கள். ஆடவர்களைப்போலவே பெண்களையும் பெற்றெடுக்கிறார்கள். ஆகையால் ஆடவர்கள்தான் உயர்ந்தவர்கள், ஸ்திரீகள்தான் தாழ்ந்தவர்கள் என்று சொல்ல முடியுமா? முடியாது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த ஆண், பெண் இருவரையும் சமமாகவே நினைக்க வேண்டும். ஏனென்றால் பெண்களும் அந்தத் தாய்வயிற்றில் பிறந்தவர்கள் தானே. அவர்கள் மாத்திரம் ஏன் தாழ்மையாய் இருக்கவேண்டும். ஆடவர்களைப்போலவே பெண்களையும் பள்ளியில் சேர்த்து கல்வி பயில்விக்க வேணும். ஆடவர்கள்தான் படித்து பாஸ் செய்து உத்தியோகம் செய்யவேணும்; ஸ்திரீகள் செய்யக் கூடாதா? செய்தால் ஏற்காதா? எல்லாவற்றையும் நினைத்தால் பெண்கள் பாஸ் செய்தால் ஆடவர்களைக் காட்டிலும் ஜாஸ்தியாகவே சம்பாதிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்னொரு கொள்கை நம் தேசத்தில் இருந்து வருகிறது. அது என்னவென்றால் பிதுரார்ஜித சொத்து பணத்தொகை முதலியவைகளை எத்தனை ஆடவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு பாகம் பிரித்து, ஒரு பெண் இருந்தால்கூட பெண்களுக்கு பாகம் கொடுப்பது கிடையாது. புத்திசாலிப் பெண்களாயிருந்து தாய் தந்தையரை கேட்டுவிட்டால் பின்வருமாறு பதில் சொல்வார்கள். "உன் கலியாணத்திற்கு நாலாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்தேன். பாத்திரம் பண்டங்கள் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினேன். ஆறுமாதம், தீபாவளிக்கு ஆயிரம் சில வழித்தேன். ஆடையாபரணம் மூவாயிரத்துக்கு வாங்கினேன். உன் எல்லாவித சடங்குகளுக்கும் பதினாயிரம் ரூபாய் செலவழித்தேன்," என்று அடுக்குமாடி கட்டுவார்கள். அவர்கள் அடுக்கி என்ன

பிரயோஜனம். தாய் தந்தையர்கள் என்ன திரவிய அபிஷேகம் செய்தேனென்று சொன்னாலும் ஆடவர்களுக்கு பாகம் செய்துகொடுப்பதுபோல பெண்களுக்கும் ஒருபாகம் செய்துகொடுக்கத்தான் வேண்டும். பெண்களின் தாயைப்பெற்ற பாட்டி வீட்டிலிருந்து வந்த மஞ்சக்காணி சொத்தாயிருந்தால்தான் பெண்களுக்கு கொடுக்கிறார்கள். அந்த சட்டம் கூடாது. பிதுரார்ஜித சொத்தும் பெண்களுக்கு கொடுப்பதைப்பற்றி எல்லோரும் பிரயாசைப் படவேண்டும். வீடுவாசல், நிலபுலங்கள், பணத்தொகை முதலியவைகளை ஆடவர்களுக்கு பாகம் செய்து கொடுப்பதைப் போலவே பெண்களுக்கும் கொடுக்க வேண்டும்.

தாய் தந்தையர்கள் பெண்களுக்கு கனகாபிஷேகம் செய்தாலும் பதினாலு வயதிற்குள்ளாகவே செய்வார்கள். அதற்கு மேல் தங்களுக்கு ஒரு சுமை இறங்கிற்று என்று நினைத்து கணவன் வீட்டிற்கு தள்ளிவிடுகிறார்கள் ஆடு, மாடுகள் விற்பனை செய்வதுபோல. வாயில்லா பிராணிகளான ஆடு மாடுகள்கூட தன் எஜமான் தன்னை வேறொரு வீட்டிற்கு விற்றுவிட்டால்கூட தன் பழையவீட்டு எஜமானையும் நத்திக்கொண்டு வரும் என்று நம் எல்லோர்க்கும் தெரிந்த விஷயமே. தாய் தந்தையரின் சுமையை இரக்குவதற்காக பெண்கள் புருஷன் வீடு போகவில்லை. தங்கள் கணவன்மார்களோடு இல்லற இன்பவாழ்க்கை நடத்துவதற்காக அல்லவா போகிறார்கள். கணவன்மார்கள் வீட்டில் எல்லா ஸ்திரீகளுக்கும் எல்லாவித சௌக்கியமும் கிடைக்கும் என்று சொல்ல முடியாத காரியம். (1) படிப்பில்லாதவனையும் சம்பாதிக்கத் திறமையில்லாதவனையும் இருக்கலாம். (2) சம்பாதித்தும் மனைவிமார், குழந்தைகளையும் கவனியாமல் இருக்கலாம். (3) மூர்க்கனையும், கோபிஷ்டனையும், குடி, சூதாட்டம், கெட்டழிந்தவனையும் இருக்கலாம். (4) உத்தமனாயிருந்தாலும் குழந்தை, குட்டிகள், ஜாஸ்தியாய் சப்ஸாரியாய் இருக்கலாம். ஊமை, செவிடு, நொண்டி, குருடு முதலியவைகள் இருந்து கால்வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழிஇல்லாமல் இருக்கலாம். அல்லது பெண்களே விதவையாய் இருக்கலாம். கணவன்மார்கள் இருந்தாலும் எல்லா ஸ்திரீகளும் எல்லா சுகங்களையும் பெற்றுவிடவில்லை. ஆகையால் எல்லோரும் ஆடவர்களைப்போலவே பெண்களையும் படிக்கவைத்து பெண்களுக்கும் பாக பத்திரம் கொடுக்கும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லாவற்றையும் நினைத்தால் ஆடவர்களைக் காட்டிலும் பெண்களுக்கே ஜாஸ்தி கொடுக்கும்படியாய் நேரிடும். ஏனென்றால் ஆடவர்கள் ஆயுள் முழுவதும் தகப்பன் வீட்டில் இருந்துகொண்டே மனைவி குழந்தைகள் முதலியவர்களை வைத்துக்கொண்டு குடித்தனம் செய்து சொத்தை அழிக்கிறார்கள். பெண்கள் பதினாலு வயதிற்கே புருஷன்வீடு போய்விடுகிறார்கள். ஆகையால்தான். "பெண்கள் மாத்திரம் தாய்வீட்டில் இருப்பது கிடையாதா" என்று ஆடவர்கள் நினைக்கலாம். ஆனால் அவர்கள் தாய்வீட்டில் இருப்பது கொஞ்சகாலம்தான். தாய் தகப்பன்மார்கள் கொடுத்த வரதக்ஷிணையும், மற்றுமுள்ளவைகளும் இவர்களுக் கென்ன பிரயோஜனம்? மாப்பிள்ளை வீட்டார்





வாயில் போட்டுக்கொண்டிருப்பார்கள். 'எங்கள் பெண்களுக்கு பாகம் செய்து கொடுப்பதற்கு இவர்கள் என்ன சிபார்சா' என்று கேழ்க்கவேண்டாம். அப்படிக் கொடுக்காதவர்களுக்குத்தான் சொல்லுகிறோம். ஆகையால் ஆடவர்களைப் போலவே பெண்களையும் படிக்கவைத்து அவர்களுக்கு பாகமும் கொடுத்து ஸ்திரீகளை முன்னேற்றமடையச் செய்யவேண்டும். "சொல்லிக்கொடுத்த வாக்கியமும், கட்டிக்கொடுத்த சாப்பாடும் அதிகநாள் நீடித்து நிற்காது," என்று முதியோர்கள் சொல்வார்கள். ஆகையால் சொல்லிக் கொடாமல் மேற்கூறிய நற்காரியங்களை நீங்களாகவே செய்வீர்களென்று நினைக்கிறேன். கவர்ன்மெண்டார் அவர்களும் இந்த சட்டத்தை ஏற்படுத்தி ஸ்திரீகளை முன்னேற்ற மடையச் செய்யும்படியாய் மிகவும் வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்திரீகளின் முன்னேற்றத்தைக் கருதி ஸகோதர ஸகோதரிகள் எல்லோரும் ஒத்து உழைப்போமானால் நம் இந்தியாவும், மற்றுமுள்ள தேசங்களும் செழிக்குமென்பதில் சந்தேகம் இல்லை.

பெண்களின் மங்களம் எங்கும் தங்கிட..

# சூரியன் ஸ்துதி

கடலின் மீது கதிர்களை வீசிக்
கடுகி வான் மிசை ஏறுதியையா,
படரும் வானொளி யின்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள் உலகெல்லாம்
வாழநோக்கிடும் வள்ளிய தேவா.

காதல் கொண்டனை போலு மண் மீதே!
கண் பிறழ்வின்றி நோக்கு கின்றாயே
மாதர்ப் பூமியு நின் மிசைக் காதல்
மண்டினாளி திலைய மொன்றில்லை
சோதி கண்டு முகத்தி லிவட்கே
தோன்று கின்ற புதுநகை என்னே!
ஆதித் தாய் தந்தை நீவிருமக்கே
ஆயிரந்தரம் அஞ்சலி செய்வேன்.

# விருத்த—கன்னி விவாஹத்தடை

ஸ்ரீமதி சுனீதிகோஷ்

பர்த்வான் நகரத்தின் ஒரு டிவிஷனில் சமீபத்தில் ஒருநூதன சம்பவம் நடைபெற்றது. ஒருநாள் இரவு பூராவும் அந்த பகுதியிலுள்ள ஆண், பெண், குழந்தைகுட்டிகள் எல்லோரும் தூங்காமல் வெகு விழிப்பாக இருந்தனர். ஏன்? பூகம்பம் வரும் என்று பயந்தல்ல. ஆனால் அன்று நடைபெறவிருந்த ஒரு 'விருத்த—கன்னி' விவாஹத்தை தடைசெய்யவே!

பர்த்வானைச் சேர்ந்த ஒரு எழுபது வயது கிழட்டு பிராமண ஜமீந்தார் 14 வயது இள மங்கையை வதுவைசெய்ய ஏற்பாடு செய்திருந்தார். அவருக்கு ஏற்கனவே மூன்று மனைவியர்கள் இருந்து இறந்துபோயினர். எத்தனையோ புத்திரர்களும், பேரன் பேத்திகளும் இருக்கிறார்கள். இருந்தாலும் தாடி நரைத்துப் போச்சே தவிர ஆசை நரைக்கவில்லை. தன் பணத்திமிரால் 'வைதவ்ய பேய்'க்கு ஒரு இளங்கன்னியை பலியிட முயற்சித்தார். பர்த்வானிலேயே ரயில்வே உத்தியோகஸ்தனயிருந்த ஒரு ஏழை பிராமணனுக்கு 14 வயது பருவ மங்கை ஒருவளிருந்தாள். கிழட்டு ஜமீன்தார் அக் கன்னியின் தந்தைக்கும் பெண்ணுக்கும், மணமுடிந்தபின், ஒருமுதல்தர பங்களாவும், நஞ்சை புஞ்சை நிலபுலங்களும் எழுதித் தருவதாக வாக்களித்தார். அந்த ஆசையும், பெரிய ஜமீன்தாரின் மாமனாராகலாம் என்ற பதவி ஆசையும் பெண்ணின் தகப்பனை இந்த விவாஹத்துக்குச் சம்மதிக்கச் செய்தது. தன் பெண்ணாசையை கிழ ஜமீன்தார், ரயில்வே உத்தியோகஸ்தருக்கு மண்ணாசையும், பொன்னாசையையும் காட்டி பூர்த்தி செய்துகொள்வதென்று முடிவு செய்துவிட்டார். எனவே இந்த 'சந்தோஷ காரியம்' நவம்பர் மாதம் 24ந் தேதி ஒரு திவ்ய சுபமுகூர்த்தத்தில் இரவு நடைபெறவேண்டும் எனப் 'பெரியோர்களால்' நிச்சயிக்கப்பட்டு அதற்கு வேண்டிய காரியாதிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தச் சமாசாரம் ஊரில் பரவியது. ஜமீன்தாரின் மாப்பிள்ளை (இவர் ஒரு வக்கீல்) யும், இன்னும் அக்கம் பக்கத்திலுள்ள பந்து மித்திரர்களும், இதரர்களும் தனித்தனியாகவும் கூட்டாகவும் இந்த "அக்கிரமத்தைச்" செய்ய வேண்டாமென்று ஜமீந்தாரையும், பெண்ணை பணத்துக்காகவும், பங்களாவுக்காகவும் நிலபுலங்களுக்காகவும் 'பலி' கொடுக்க விற்கமுன் வந்த அந்த மங்கையின் தகப்பனையும் நயமாகவும், நாணயமாகவும் மன்றாடி வேண்டிக்கொண்டார்கள். ஆனால் "பணம் பத்தும் செய்யும்", "பணம் பாதாளமட்டும், குணம் குலத்துமட்டும்" என்று இருவயோதிகர்களும் பொதுஜன அபிப்பிராயத்தை, ஊராரின், வாக்கை உதாசீனமாக உதறித் தள்ளினர். ஆனால் ஊராரிடை ஒருவித உத்வேகம் உண்டாயிற்று. எந்த



வழியிலாவது எப்படியாவது இந்த "விருத்த—குமாரி" மணத்தை நடைபெறாமல் தடுத்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டார்கள் ஆண் பெண் இருபாலாரும்.

மணம் நடைபெற வேண்டிய இரவு வந்தது. அந்த ஊர் வாலிபர்கள் பலர் மாப்பிள்ளையின் வீட்டையும், மாமனார் வீட்டையும் சூழ்ந்து கொண்டனர். யாரும் வெளியே போகவும், உள்ளே வரவும் விடவில்லை. இந்த "மண வினை"யைத் தடுப்பதில் தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று யுவர்களும், யுவதிகளும் திட நம்பிக்கை கொண்டார்கள். இதனால் என்ன இடைஞ்சல்கள் நேரிட்டாலும் அதை சஹித்துக்கொள்ள தயாராயிருந்தனர். யுத்தமூஸ்திபுடனிருந்தனர்; கூவினார்கள்; கத்தினார்கள்; ஆடினார்கள்; பாடினார்கள்; தம்பட்டம் கொட்டிக்கொண்டு கூத்தாடினார்கள். ஜமீன்தாரின் 'கூலி' யாட்கள் அவர்களைக் கலைக்க எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் ஒரு பலனுமில்லை. சாணி உருண்டைகள் சரமாரியாக அவர்கள்மீது எறியப்பட்டன. ஆனால் அவர்கள் ஓரடிகூட அசையவில்லை.

இரவு சுமார் 11 மணியாயிற்று. தங்களுக்குள்ளேயே ஒரு தீவிர வாலிபனை அப்பெண்ணை மணந்துகொள்ளும்படி மற்றவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவனும் முன்வந்தான். இந்த விஷயம் பெண்ணின் தகப்பனுக்கு அறிவிக்கப்பட்டது. இன ஜனங்களின் எதிர்ப்பைக் கண்டு சிறிது திகிலடைந்து விட்டார். "ஆசையோ தாசில்பண்ண" என்றபடி ஜமீன்தாரின் மாமனாராகலாம் என்று கனவு கண்டுகொண்டிருந்த அவருக்கு இந்த விஷயம் எப்படி திருப்தியளிக்கும். இருந்தபோதிலும் ஜாதிப் பிரஷ்டத்துக்கு பயந்து வேண்டா வெறுப்பாக தன் புதல்வியை ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாப்பிள்ளைக்கு மணம் செய்துகொடுக்க இசைந்தார். உடனே மணவிருந்தினர் (ஜமீன்தார் கூட்டமல்ல) விவாஹத்தை ஒரு வக்கீல் வீட்டில் நடத்துவதென்று முடிவுசெய்தனர். எனவே பெண், அவளுடைய தகப்பனார், மற்றும் எல்லோரும் குறிப்பிட்ட வக்கீல் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

## 'கோத்ர' சாஸ்திரம் குறுக்கிட்டது

மணவறையில் எல்லோரும் உட்காரும்போது மணி பன்னிரண்டாயிற்று. விஷயம் விசாரிக்கப்பட்டபோது பெண்ணும், மாப்பிள்ளையும் ஒரே கோத்திரத்தார் என்று தெரியவந்தது. ஒரே கோத்திரத்தார் ஹிந்து சம்பிரதாயப்படி மணம் செய்துகொள்ளக் கூடாது. ஆனால் நம் சாஸ்திரங்களுக்குத்தான் சமய சந்தர்ப்பங்களுக்கேற்ப 'பரிகாரங்களும்' இருக்கின்றன வென்பதை பர்த்வான் ஜனங்கள் மறந்துபோய்விடவில்லை. கூடியிருந்த பண்டிதர்களின் யோசனையின்பேரில் கூட்டத்திலிருந்த மற்றொரு வக்கீல் 'சாஸ்திரரீதியாக' சகல சடங்குகளையும் முறையே செய்து அம் மங்கையை தன் புத்திரியாக ஸ்வீகரித்து 'தத்து' எடுத்துக்கொண்டார். அவர் வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர். பெண் இப்பொழுது அவருடையவளாய் விட்டாள். தானே அவளது தந்தையின் ஸ்தானத்திலிருந்து தாரை வார்த்துக்

கொடுக்க நடுவில் தோன்றிய வாலிபன் ஜமீன்தாரை தூங்கவைத்துவிட்டு இளநங்கையை சர்வஜன சாட்சியாக கை பிடித்து ஏற்றுக்கொண்டான். மணியும் ஒன்று அடித்தது. உடனே ஒரு விருந்தும் நடந்தது. ஜமீன்தார் சிறைவைக்கப் பட்டிருந்தார். காலையில் தலையில் கையை வைத்துக்கொண்டு போனார்.

இந்த சம்பவம் வங்காளத்தில் நடைபெற்றது. இதுபோல் வயோதிகர்கள் நல்ல பருவ மங்கையர்களை மணந்து கொள்ளுவது இன்னும் அநேக இடங்களில் நடைபெற்று வருகிறது. இதற்கு இசையும் பெற்றோர்க்கு பர்த்வான் வாலிபர்களும், யுவதிகளும், மற்றும் பண்டிதர்களும், பாமரர்களும் கூட்டாக நல்ல புத்தி கற்பித்துள்ளார்கள். இதனின்று அறியக் கிடப்பது யாது? சாஸ்திரங்கள் சமூகத்தின் சாதகத்துக்காகவே ஏற்பட்டனவை என்றும், பாதகத்துக்கு அல்ல வென்றும், பொது ஜனங்கள் மட்டும் தைரியமாகவும், தீவிரமாகவும் இருந்தால் எவ்வித சமூக சீர்திருத்தங்களையும் வெகு எளிதாக நிறைவேற்றிவைக்க முடியும் என்றும் வெகு நன்றாகத் தெரிகிறது. பெண்களை மண்ணுக்கும் பொன்னுக்கும் விற்கும் மாந்தர்கள் என்ற வகுப்பு நம் தேசத்திலில்லாதபடி செய்ய ஒவ்வொரு மங்கையும் கங்கணம் கட்டிக்கொள்வாளாக!

———:o:———

## விடுதலைக் கும்மி

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினிலெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி.

நல்லவிலைகொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மந்நிலை
கூட்டிவைத்தார் பழி கூட்டி விட்டார்.

கற்பு நிலை யென்று சொல்ல வந்தா ரிரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.






## பாத்திரங்கள்

கல்யாணி — ஓர் ஏழை மாணவி.

அம்ருதம்
அம்புஜம்
கனகம்
கமலம்
} கல்யாணியின் பள்ளிக்கூட ஸ்னேகிதிகள்.

லலிதபுரத்து ஜமீன்தார், அவர் தங்கை, அவர் பத்தினி, சாந்தி நகரத்து மிடில் ஸ்கூல் தலைமை உபாத்தியாயினி முதலியவர்கள்.

### காட்சி 1.

இடம்: பெரும்பாலும் சாந்தி நகரத்து மிடில் ஸ்கூலிலும், கல்யாணியின் வீட்டிலும்.

[சாந்தி நகரத்தின் மிடில் ஸ்கூலின் பின்புறமிருக்கும் தோட்டம். அங்கொரு மரத்தடியில் போட்டிருக்கும் கல் பெஞ்சின்மீது கனகம் கமலம் இருவரும் (3-வது பாரம் மாணவிகள்) உட்கார்ந்து கொண்டு தாழ்ந்த குரலில் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் தோழியான அம்புஜம்தான் தான் பணக்கார வீட்டுப் பெண் என்பதற்கு அறிகுறியாக ஓர் விலையுயர்ந்த ஜரிகைச் சேலையை உடுத்திக்கொண்டு, காது, மூக்குகளில் வைர நகைகள் ஜ்வலிக்க, தன் இடது கையிலிருக்கும் பட்டுக்கை குட்டையால் அடிக்கொருதாம் முகத்தைத் துடைத்துக் கொண்டு வலது கையில் பிரித்த புஸ்தக மொன்றை வாசித்தவாறே கனகமும், கமலமும் வீற்றிருக்கும் இடத்திற்கு வந்துகொண்டிருக்கிறாள்]

கனகம்; கமலம், அம்புஜம் வந்து கொண்டிருக்கும் ஷோக்கை பாரடி! அவளிருக்கும் அவலக்ஷணத்திற்கு அவளுக்கிருக்கும் ஜம்பத்தைப்பாரடி!

கமலம்: (தன் கண்களில் யாதொரு கோளாறும் இல்லாவிட்டாலும் கூட ஜம்பத்திற்காக அணிந்திருக்கும் மூக்குக் கண்ணாடியை எடுத்துத் தன் கைகுட்டையால் துடைத்துக் கொண்டே) என்ன அனிஷ்டம் பிடித்த கண்ணாடியோம்மா இது. வெறுமனே தூசி ரொம்பிக்கொண்டு பார்க்க ஒட்டாமல் மறைக்கிறது.

கனகம்: இதைப் போட்டுக் கொள்ளென்று யாரும் உன்னை பலவந்தப் படுத்த வில்லையேடீ. அதிருக்கட்டும் அம்புஜம் வகுப்பில் ஒரு பாடத்தையாகிலும் சரிவர ஒப்பிக்காவிட்டாலும் அவளுக்கு வாஸ்தவத்தில் ரொம்ப ஜம்படி.

கமலம்: (கண்ணாடியை அணிந்துகொண்டு) அவள் வாசித்தாலென்ன, வாசிக்கா விட்டாலென்ன? எப்படியும் அவள் நம்மைக் காட்டிலும் மிகப் பணக்காரி. அவ்விதமெல்லாம் பேசாதேடிமா. வாயை மூடிக்கொள். இதோ நமக்கருகில் வந்து விட்டாள்.

அம்புஜம்: (அவர்களை சமீபித்து) என்னடி ரகசியம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?

கனகம்: வாமா அம்புஜம், என்னருகில் உட்கார். ஏன் ஒருவாறு இருக்கிறாய்? (கனகமும், கமலமும் அம்புஜத்திற்கு உட்கார இடம் விட்டு தாங்கள் ஓர் புறமாக நகர்கிறார்கள். பின்பு அம்புஜம் உட்காருகிறாள்.)

அம்புஜம்: நம் வகுப்பில் அந்தப் பிச்சைக்கார முண்டங்கள் ஸ்கூல் பீஸ் கொடுக்கக் கையாலாகாமல் ஸ்கூலை விட்டுத் தொலைந்தார்களே என்று ஸந்தோஷமாக விருந்தோம்......

கமலம்: ஊஹும், அதற்குப்பதில் தான் ஓர் கழுதை வந்திருக்கிறதே!

அம்புஜம்: அதைத்தான் சொல்ல வந்தேனடி. அவளால் நமக்கு எவ்வளவு அவமானமேற்பட்டிருக்கிறது? நம் வகுப்பிற்கே பணக்கார வகுப்பென்று வந்திருந்த பெயரை இந்த எருமை வந்து கெடுத்து விட்டது.

கனகம்: பெயரைப் பார்த்தால் கல்யாணியாம் கல்யாணி. அவள் உடுத்தும் புடவையின் நிறமோ, அவளோ, கம்மண்டாட்டி யாட்டமா வெளுப்புப் புடவையை உடுத்திக் கொண்டு வந்து விடுகிறாள். இன்றைக்கெல்லாம் உடம்பை சோதித்து பார்த்தாலும், உடம்பில் மூன்று காசு பெறுமான நகையை காணோம். ஒருவருடனாவது பேச்சில்லை, மூச்சில்லை. அவள் ஓர் மூலையில் புஸ்தகமும் கையுமாக வாசிப்பதற்கு உட்கார்ந்து விட்டால், எவ்வளவு பெயர்கள் அவள் முன்பு அவளை பலமாகத் திட்டினாலும்கூட அவள் காதிற்கு எட்டாது.

கமலம்: (கனகத்தின் தொடையைத் தட்டி, அவள் கன்னத்தைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பி) டீ, கனகம்! என்னைபாரேன். கல்யாணியின் செட்டிற் கொன்று சேர்ந்திருக்கே, அந்த மக்கு காமாக்ஷி. முதல் தன் ஜதைக்கு யாரும் இல்லாததால் அப்பப்பொழுது நம்முடன் வந்து கலந்து கொண்டு கொஞ்சம் பேசிக்கொண்டிருப்பாள். தன் ஜதைக்காரி ஒருவள் சேர்ந்தபின் அவள் நம்முடன் சேர்கிறாளா பார்!

அம்புஜம்: இன்றைக்குக் கல்யாணியை மேடம் என்னருகில் உட்காரவைத்து விட்டார். எனக்கு அப்பொழுது உண்டான சங்கடத்தை சொல்லி முடியாது. ஏண்டி கனகம், நீயே சொல் பார்ப்போம். அவள் என்னருகில் உட்காருவதற்கு தகுந்தவளாடி?

கனகம்: எங்கையாவது உண்டா இவ்வித அனியாயம். நீ ஸாக்ஷாத் தனலக்ஷ்மிக்கு ஒப்பானவள். அவள் ஒரு ஏழைப் பிணம். உங்கள் வீட்டு வாசக்கூட்டிக்கு சமானமானவள்.

கமலம்: அவளது அர்தஸ்தையும், துணிமணியையும் வாத்தியாரம்மாள் கவனிப்பதே இல்லை. பாடத்தில் நிரம்ப மார்க்குகள் எடுத்து விடுகிறாளென்று அவர் அவளை உச்சியில் வைத்திருக்கிறார். அவர் உன்னையும் என்னையும் லக்ஷ்யம் செய்கிறாரா என்ன!

அம்புஜம்: அவள் எப்படியாவது போகட்டும். அவளது முகத்தை கண்டாலே எனக்கு பிடிப்பதில்லை. (ஸ்கூல் மணி அடிக்கிறது. மூவரும் திடுக்கிட்டு) மணி அடித்து விட்டார்கள். வாருங்கள் பாழும் க்ளாசிற்கு போகலாம். பள்ளிக்கூடம் விட்ட பின்பு சாவகாசமாக பேசலாம். எல்லோரும் செல்கிறார்கள்.

(திரை வீழ்கிறது)

## காட்சி 2.

காலம்: காலை 11 மணி.





[பள்ளிக்கூடத்தின் மூன்றாவது பாரத்தில் மாணவிகளில் சிலர் வாசித்துக் கொண்டும், சிலர் வம்பு அளந்து கொண்டும், சிலர் கீழே உட்கார்ந்து கொண்டு சாவகாசமாக சோழி ஆடிக்கொண்டும், ஒருத்தி போர்டின்மேல் சித்திரம் எழுதி அழித்துக் கொண்டும் பல விதத்தில் கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வாத்தியாரம்மாள் ப்ரவேசிக்கவே, எல்லோரும் தத்தம் இடங்களிற்கு ஓடிப்போய் உட்கார்ந்தார்கள். உபாத்தியாயினி தன் வேலையை கவனித்தவளாய், ரிஜிஸ்டர் புத்தகத்தை எடுத்து ஒவ்வொரு மாணவியின் பெயராக கூவி, குறிப்பு செய்து கொண்டே "கல்யாணி" என்றாள். பதிலில்லாததைக் கண்டு சுற்றிலும் பார்த்து, அவள் இல்லாமலிருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன்)

"கல்யாணி எங்கே? பள்ளிக்கூடத்திற்கே வரவில்லையா? அவள் ஒரு நாளும் 'டிமிக்கி' கொடுக்கிற பெண்ணல்லவே" என்றாள்.

காமாக்ஷி: (எழுந்து நின்று) மேடம், அவளுக்கு மிந்தாம் நாள் பிடித்து ரொம்ப ஜுரமாம். இன்றைக்கு எங்காத்துக்கு அவள் வீட்டு வாசக்கூட்டியின் கையில் ஓர் கடிதத்தை கொடுத்து அனுப்பி இருக்கிறாள். (ஒரு துண்டுக் கடுதாசியைக் கொண்டு வந்து வாத்தியாரம்மாள் கையில் கொடுத்து விட்டு, திரும்பிப்போய் தன் ஆசனத்தில் உட்கார்ந்து கொள்கிறாள்.)

(வாத்தியாரம்மாள் லீவு மனுவைப் பிரித்துப் படித்துப் பார்த்து) பாவம் கல்யாணி "ரொம்ப நல்ல பெண்! இந்த வகுப்பில் அவளைப் போன்ற சுறு சுறுப்பான புத்திசாலிப் பெண் வேறொருவரும் இல்லையென்று சொல்லலாம். இன்னொரு விஷயத்தை உங்களுக்குச் சொல்ல மறந்து விட்டேன். வருகிற சனிக்கிழமையன்று லலிதபுரத்து இளைய ஜமீந்தாரும், அவரது மனைவியும், தங்கையும் நம் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட சரியாக சாயந்திரம் நான்கு மணிக்கு வருகிறார்களாம். நீங்கள் அனைவரும் சுத்தமான துணிகளை உடுத்திக்கொண்டு வரவேண்டும் தெரியுமா? இந்த ஜமீந்தாரின் தகப்பனார் தான் நம் பள்ளிக்கூடத்தைக் கட்டுவதற்காக 5000 ரூபாய் தர்மார்த்தமாகக் கொடுத்து உதவி செய்தார். இவருக்கு அன்று ஓர் 'டீ பார்டி' செய்ய வேண்டுமென்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். நீங்கள் நம் பள்ளிக்கூடத்து பெரியவகுப்பு மாணவிகளாகையால் உங்களாலியன்ற சகாயத்தை எங்களுக்குச் செய்ய முன் வரவேண்டுமல்லவா? நீங்கள் ஜமீந்தார் குடும்பத்துப் பெண்மணிகளைத் தக்க மரியாதையுடன் வரவேற்று, உசிதரீதியில் உபசரிக்கத் தயாராக விருக்கவேண்டும். அன்றைக்கு சரியாக நமது கல்யாணிக்கும் உடம்பு வாசியாய், அவளும் வந்து விட்டால், அவளால் எவ்வளவோ உபகாரமாகும் அல்லவா?" என்று சொன்னாள். (கல்யாணியின் வைரிகளான கமலம் அம்புஜம் முதலியவர்கள் வாத்தியாரம்மாள் கல்யாணியைப்பற்றிப் பேசிய புகழ்ச்சியை கேட்கச் சகியாமல் வைற்றெரிச்சல் கொண்டாலும் கூட, வெளிக்கு) "ஆமாம், கல்யாணிக்கு ஸ்வாமிதயவால் சீக்கிரம் உடம்பு வாசியாகட்டும் பாவம். நாங்கள் தாங்கள் சொன்னவாறே தயாராகிறோம்." என்றார்கள். (பின்பு வாத்தியாரம்மாள் தனது நாற்காலியில் அமர்ந்து, பாடத்தை கவனிக்க வாரம்பிக்கிறாள்.)

(திரை வீழ்கிறது.)

## காட்சி 3.

[சாயங்காலம்—5 மணி. கல்யாணியின் வீட்டு முன்புறமுள்ள பூந்தோட்டத்தினுள் காமாக்ஷி ப்ரவேசிக்கிறாள்.)

காமாக்ஷி:— "இந்த வீட்டு காம்பௌண்டிற்குள் கொஞ்சம் நிலம்மட்டும் இருந்தாலும்கூட இச்சிறிய இடத்திலேயே கல்யாணி எவ்வளவு அழகான பூந்தோட்டம் செய்திருக்கிறாள்! அவளது புத்தி சாதுர்யத்தை என்ன

வென்று புகழ்கிறது!" என்று சொல்லிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தாள்.

(திரை வீழ்கிறது.)

## காட்சி 4.

[கல்யாணி ஓர் சிறிய அறையில் ஓர் கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறாள். அவ்வறை சிறியதாக விருந்தாலும் கூட, வெகு நிர்மலமாக விருக்கிற தல்லாமல், ஜன்னல், கதவுகளெல்லாம் ஒழுங்காக திறந்து வைக்கப்பட்டு நல்ல காற்றோட்டமாகவும், வெளிச்சமாகவும் இருக்கிறது. காமாக்ஷி ப்ரவேசிக்கிறாள்.]

*காமாக்ஷி* :— (ஆச்சரியங் கொண்டு) என்னடீ கல்யாணி! நீ இந்த சின்னஞ் சிறு வீட்டையும் எவ்வளவு சிறப்பாக வைத்துக் கொண்டிருக்கிறாய்! உன் வீட்டின் எந்தப்புறம் திரும்பினாலும், அவ்விடத்தில் ஆனந்தமும், ஒழுங்கும் நிரம்பி இருக்கின்றனவே!

*கல்யாணி* :— உனது புகழ்ச்சி போதுமடி. அந்த குரிச்சியை இப்படி இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்.

காமாக்ஷி குரிச்சியை இழுத்துக்கட்டிலருகில் போட்டுக்கொண்டு உட்காருகிறாள்.

கல்யாணி! உன் பெயருக் கேற்றவாறு நீ கல்யாண குணங்களனைத்தையும் பெற்றிருக்கிறாய்! உன் ஒழுங்கு, சாந்தம், தைரியம், சத்தியம், தயை முதலிய சத்குணங்கள் யாருக்கும் வாராதடீ. நான் உன்னை ஸ்நேகம் செய்து கொண்ட பிறகு எவ்வளவோ நல்ல நடத்தைகளை உன்னிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறேன். ஜுரம் விட்டிருக்கிறதாம்மா, கல்யாணி? (அவளுடைய நெற்றியையும், கை நாடியையும் சோதித்துப் பார்க்கிறாள்.)

*கல்யாணி* :— இன்று காலம்பரத்தான் "நார்மல்"லுக்கு வந்திருக்கிறது. பள்ளிக்கூடத்தில் ஏதாவது விசேஷ சமாசாரம் உண்டானால் சொல்பார்போம். இந்த நாலைந்து நாளில் ரொம்ப பாடங்கள் நடந்து விட்டிருக்கிறதா? அனியாயமாய் இந்த ஐந்து நாட்களாகப் பள்ளிக்கூடம் போவதிலிருந்து தடுக்கப்பட்டு விட்டேன்.

*காமாக்ஷி* :— பாடம் அவ்வளவாக நடக்கவில்லை. பெண்கள் சுறு சுறுப்பாக இருந்தால் தானே பாடம் சரசரவென்று நடக்க அவகாசமேற்படும். எப்பொழுது பார்த்தாலும் எல்லோரையும் பற்றி வம்பளப்பது, ஏழை எளியவர்களை ஏளனம் செய்வது, கேலி செய்வது முதலிய காரியங்களிலேயே காலத்தை கழித்துக்கொண்டிருந்தால், பாடத்தை கவனிப்பது எப்பொழுது?

*கல்யாணி* :— மற்றவர்களை பற்றி நாம் என் குறை கூறவேண்டும். நம்மிடத்திலேயே நமக்கு தெரியாமல் அநேக தப்பிதங்களிருக்கலாம்.

*காமாக்ஷி* :— உன் பேச்சு நிஜம்தான், கல்யாணி! உன்னிடம் இன்னொரு விஷயத்தைக் கூற மறந்து விட்டேனே! நம் பள்ளிக்கூடத்தில் நாளன்றைக்கு சாயங்காலம் லலிதபுரத்து சின்ன ஜமீந்தாருக்கு தேக்கச்சேரியாம். அவர் தன் மனைவியையும், தங்கையையும் அழைத்துக் கொண்டு நம் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட அன்று சாயங்காலம் வரப்போகிறாராம்.

*கல்யாணி* :— நம் பள்ளிக்கூடத்தைக் கட்டுவதற்காக யாரோ ஒரு ஜமீந்தார் ஏராளமாகப் பணம் கொடுத்தாராமே. அவரா, இவர்?

*காமாக்ஷி* :—ஆமாம், வரப்போகும் ஜமீந்தாரின் தந்தையவர்கள் தான் பண உதவி செய்தாராம். இளைய ஜமீந்தார் நம் பள்ளிக்கூடத்தை பார்த்ததில்லையாம். அவரும், அவர் தங்கையும், மனைவியும் இப்பொழுது முதல் முதல் நம் பள்ளிக்கூடத்தைப் பார்க்க வருகிறார்களாம். அவர்களுக்கு ஏராளமாக ஆஸ்தி இருக்கிறதாம்.

(ஓர் கிழவி ஓர் தட்டில் சில பழவகைகளையும், ஒரு லோட்டாவில் காபியையும் கொண்டு வந்து காமாக்ஷியினருகிலிருந்த மேஜை மீது வைத்துவிட்டுச் சென்றாள்.) (தொடரும்.)



# தாய் மாண்பு

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவ ளென்றறியீரோ, உணர்ச்சி கெட்டீர்?
பண்டாய்ச்சி, ஔவை:— "அன்னையும் பிதாவும்"
பாரிடை "முன்னறி தெய்வ" மென்று ளன்றோ?
தாய்க்குமே லிங்கேயோர் தெய்வ முண்டோ?
தாய் பெண்ணே யல்லளோ? தமக்கை, தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?
மனைவி யொருத்தியை யடிமைப் படுத்தவேண்டித்
தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?
தாயைப் போல பிள்ளை யென்று முன்னோர்
வாக்குள தன்றோ? பெண்மை யடிமை யுற்றால்
மக்களெலா மடிமை யுறல் வியப்பொன்றாமோ?

வீட்டிலுள்ள பழக்கமே நாட்டிலுண்டாம்
வீட்டினிலே தனக்கடிமை பிறரா மென்பான்;
நாட்டினிலே
நாடோறு முயன்றிடுவா னலிந்து சாவான்;
காட்டிலுள்ள பறவைகள்போல் வாழ்வோமப்பா;
காதலிங்கே யுண்டாயிற் கவலை யில்லை;
பாட்டினிலே காதலை நான் பாடவேண்டிப்
பரம சிவன் பாதமலர் பணிகின்றேனே.

—பாரதி.

# தாடகைத்தாரங் கொண்டவன் தலைவிதி

ஸ்ரீமதி. எஸ். பி. சூசையம்மாள்

நெல்லை ஜில்லாவின் தென்கிழக்கே கடற்கரை யோரமாக அமையப் பெற்றிருந்த கூடுவான்கரை என்னும் ஓர் சிற்றூரில் குணசேகரன் என்பான் இருந்து வந்தான். அவ்வாலிபனோ மாசற்ற அவனது முகத்தால் யாவரையும் தன்பால் இழுக்கக்கூடிய சக்தி அமைந்தவன். சாந்தமே உருக்கொண்டவன். எதையும் நிதானித்து நடத்துபவன். ஆழ்ந்த யோசனையும் கூறிய புத்தியுங் கொண்டவன். "பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்னும் சுலோகத்தின்படி யொழுகியவன். அன்பு, தெய்வபக்தி, ஜீவகாருண்யம் முதலிய சீரிய குணங்களால் விசேஷித்து விளங்கியவன். அல்லும் பகலும் அவ்வூர் மக்களுள் அல்லல் தொல்லைப் படுவோருக்கு ஆறுதலையும் தேறுதலையும் சொல்லி அகமகிழச் செய்பவன். சுருங்கக் கூறில் பேருக்கொப்ப குணமுடையான். ஆகவே அவனின் அன்பு பொங்கி அளவுகடந்த விதமாய் அவ்வூர் வாசிகளின் மீது பொழிந்து நின்றது. அவர்களும் தாய் சேயை நேசிப்பதுபோல் அவனை நேசித்தனர்.

இவ்வண்ணம் நற்பேரும் புகழும் பெற்ற சற்குணவந்தனுக்கு சூடிய நாச்சியாரென்னும் வாழ்க்கைத் துணைவி ஒருவள் உண்டென்பதை அவ்வூர் மக்கள் ஒருகாலும் மறக்க முடியாதென்பது நிச்சயத்திலும் நிச்சயம். விடந்தீண்டிய அக்கணமே இறந்துபட்டாலும் நாகப்பாம்பை நல்ல பாம்பென்றழைப்பது போல், இவள்தன் தாய் தந்தையர் இவளை இவ்விதம் பெயரிட்டு அழைத்தனர் போலும். சற்றே நாவு தடுமாறி அறியாமல் தெரியாமல் எவரேனும் நவில்வாராயின் அவர்கட்கிடும் தொடை எமலோகம்வரை எட்டப்படும். அம்மட்டோடும் நில்லாது, சித்திர புத்திரர் செவிக்குங்கிட்டின் அவர் தம்புத்தகத்திற் பதியத் தெரியாதெனத் தியங்குவார் என்னலாம். பதியின் பொற் சொற்களனைத்தையும் புறக்கணித்துப் பொதியாகக் கட்டி அவன் முகந்தனிலே எறிந்துவிட்டு மதியாது நடக்கும் மதியீனள் இம்மங்கை.

இவளின் ஏச்சையும் பேச்சையும் கூத்தையும் கோரச் சொற்களையுங்கண்டு ஊர்மக்களனைவரும் முன் சூடிய நாச்சியார் என்ற நாமம் போதாதென்றெண்ணி தாடகை என்னும் பட்டமுஞ் சூட்டி, தூற்றுதல் இகழ்தல் என்ற சிம்மாசனத்திலேற்றி வைத்திருந்தனர். மனித ஜீவியத்தின் உயிர் நேசமே. அந்நேசமின்மையே அச்சீவியத்தின் நாசம் என்பதை நன்கறிந்தவனாகையால் குணசேகரன் அனைத்தையும் சகித்தான். ஆகவே அலைகடல் மச்சம் மேலுங் கீழும் எப்புறமும் நீரால் மூடப்பட்டு ஜீவிப்பதுபோல் நமது கதா நாயகனான குணசேகரனும் சதாதொல்லை கொண்டு துணைவி செய்யும் துன்பத்தால் மூடப்பட்டு ஜீவித்து வந்தான்.

இங்ஙனமிருக்கையில் ஒரு நாள் மிக்க பசியால் வாடியும் வழிநடந்த களைப்பாலும் சற்றே சிரமபரிகாரம் செய்து கொள்ள ஒரு கிழவி குணசேகரன் வீட்டுத் தெருத் திண்ணையில் இளைப்போடு உட்கார்ந்திருந்தாள். அவள் அங்கிருக்கும் சமயத்து அவன் வெளியே போக எத்தனித்துத் தெருப்பக்கம் வந்தான். அக்கிழவி அவனைப்பார்த்து, "அப்பா, என் பசி நோய் தீர்க்கச் சிறிது கூழாயினும் வார்க்க மாட்டாயோ," என்று பரிதாபமாகக் கேட்டாள். அவனும் மனமிக இரங்கி தன் மனையாள் குணத்தை யறிந்தவனாகையால் அக்கிழவியை அவள் இருந்த இடத்திலேயே இருக்கச் செய்து, தான் மட்டும் உள்ளே நுழைந்து தன் மனையாளனுமதிபெற்று, அவள் அருகிலிருந்து அவளுக்குச் சந்தோஷமுண்டாகும் இச்சக வார்த்தைகள் அநேகம் பேசி மெல்ல முகந்துடைத்து, தான் ஒரு பெண்போல் அவளுக்குத் தலைமயிர் கோதிச் சிக்கெடுத்துப் பேன் பார்த்து ஈருருவி அதிக பயபக்தியுடனே அவள் சிறிதும் கோபமில்லாதிருக்கும் நற்சமயந் தேர்ந்து மெய்ந் நடுங்கி நாக்குழற உதடு அசைய, "ஒரு பழுத்த கிழவி கொஞ்சம் கூழுக்கு வந்து காத்திருக்கிறாள்," என்ற சங்கதியை அவள் காதிற் போட்டான். உடனே, அவள் தீயில் விழுந்த நாகம்போற் சீறிப் பூதம் போல் ஆர்ப்பரித்து, கழுதையும் வெட்கியோடச் செய்யுங் குரலால், "உன் பவிசுக்கு விருந்து ஒரு கேடா! உனக்குத் தொலைக்கிறதல்லாமல் ஊருக்குந் தொலைக்கவா?" என்று பேய்ப் பாட்டுகளைப்பாடி, ஆசையெல்லாந்தீர அடித்து கழுநீர்ப் பானையை யேந்திவந்து அவன் தலையில் அபிஷேகஞ் செய்து திருவலகு கொண்டு வெண்சாமரை வீசி, சுவிவெடுத்து ஆலவட்டம் பரிமாறி, பரிவேட்டை விடுவதுபோல் அவனை வீட்டிற்குந் தெருவிற்குமாகத் துரத்தித் துரத்தி யடித்தாள். அடி பொறுக்கமாட்டாது இடி விழுந்த அடியற்ற மரம்போல் சாய்ந்தான்.

அக்கம்பக்கத்தாரனைவரும் அவளடிக்குமடியும் இடியுங்கேட்க ஐயோவென்று அலறிவந்தனர். அவளின் செய்கை கண்டு அவள் கையையுங் காலையுங் கண்டங் கண்டமாய் வெட்டிப்பருந்திற்கு விருந்தளிக்கலாமென நெருங்கினர். சொல்லொணாச் சொற்களைச் செப்பிய அவள்தன் நாவைச் சோதிக்கலாமெனத் துணிந்தனர். ஆயினும் அவனது கோதற்ற அகத்தையும் குதூகல முகத்தையுங் கண்ணுற்ற அவர்கள் அவன் பால் சகித்து ஒருவாறு திகைத்துத் தயங்கி நின்றனர்.

இதுகாறும் பொறைப்பரவையிலாழ்ந்து, இவை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அக்கிழவி, பெண்டாட்டி கொண்டு திண்டாட்டப் படும் சாதுவிற்கிரங்கி,

இருந்து முகந்திருத்தி ஈரொடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப்பழ முறத்தால்
சாடினாள் ஓடோடத்தான்

என்றொரு செய்யுள் சாற்றினாள். அதைக் கேட்ட குணசேகரன், அக்கிழவி ஓர் கவியென்றறிந்து தன் மனைவிகாலில் வீழ்ந்து வேண்டினான். அவளும் அக்கிழவியை உள்ளே வருவித்து அன்னமிட்டாள். ஆனால் அதைக் காணவும் கண் கூசி, கையெடுக்கவும் நாணி குணசேகரன் இல்வாழ்க்கையைப் பழித்து அவன் துறவு பூண்பதே நலமென்று,

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக இருப்பளே யாமாயிற்
கூறாமல் சந்யாசங் கொள்.

என்னுங் கவியால் அறிவுறுத்தினாள். அங்கு கூடிய அனைவரும், அருங்கவி கேட்டு 'வையக மடந்தையோ! வனமடந்தையோ! பங்கய மலர்த்திருமடந்தையோ அல்லது அவ்வையோ' எனச் செவ்வையாய்த் தெரியாது ஐயமுற்றனர். அவ்வுபதேசத்தினைக் கேட்ட குணசேகரனும் காவி யாடையணிந்த மேனியனாய் ஓடு ஏந்தியகையோனாய் வீடும் வாசலுந் தோட்டமும் துரவும் விட்டுத் துறவு பூண்டான். சண்டாளி என இகழப் பெற்றதால் அப்பெண் பெரு நோய் கொண்டலைந்தாள். கும்பலிலிருந்த குழந்தைகளனைவரும் நமது கோதை கொண்ட கோலத்தைக் கண்டு குணசேகரனுக்கு, "ஜே, ஜே, ஜே," எனக்கும்மாளித்தனர். கூட்டத்தோடு கூட்டமாய் மிஸிஸ் சுந்தரேஸ பாண்டியன் வக்கீலும் ஒரு பக்கமாக நின்று பார்க்கும்போதே எனக்குச் சந்தேகம் தோன்றியது. ஏனென்றால் எப்போதும், ஸ்திரீகள் கௌரவம், ஸ்திரீகள் முன்னேற்றம் பெண்கள் கல்வி, நங்கையர் நிலைமை, என்றெல்

லாம் வியாசங்கள் எழுதியும், ஊரில் ஆங்காங்கே நடக்கும் ஊடல்களை வைத்துச் சீர்திருத்தம் வேண்டி கட்டுரைகள் எழுதியுந் தெரிவிப்பது அவர்கள் அனுஷ்டானமாயிருந்து வந்தது. அன்று அந்த அமர்க்களத்தைக்கண்டு அஞ்சியவனாய் ஆதித்தனும் மறைந்தான்.

மறுநாள் பொழுதும் புலர்ந்தது. நான் வீட்டை விட்டு வெளி வந்து நின்றுகொண்டு, அடுத்த வீட்டு ரத்னாபாய் பத்திரிகையொன்றை ஏந்தியவண்ணம் சோபாவில் படுத்துக்கொண்டு கவனத்தோடு பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். அவளும் என்னை ஆச்சரியத்தோடழைத்தாள். "இதை வாசியுங்கள்" என்று என் கையில் தந்தாள். நானும் பார்த்து விட்டேன். ஏனென்றால், "தாடகைத் தாரங்கொண்டவன் தலைவிதி" என்ற தலையங்கத்தின் கீழ் நமது குணசேகரன் பட்டபாட்டையும், கொண்ட கோலத்தையும் அப்படியே வரைந்திருந்தது. "ஐயோ பாவம், என்ன வெட்கக்கேடு. குணசேகரன் பட்டபாட்டை, ஊர் அறிந்தது போதாது உலகமுமறிய பத்திரிகையிலும் பிரசுரித்து விட்டார்கள். எப்பொழுதும் மிஸஸ் வக்கீல் அவர்களின் வேலை இப்படித்தான்" என்றேன். இதினின்றும் கல்வி அறிவுஞான மில்லாத மனைவி நற்புருஷர்களுக்கும் கேடாகவே இருந்து தாம்பத்ய வாழ்க்கையை போர்க்களமாகச் செய்கிறாள் என்பது புலப்படுகிறது. ஆகையால் கல்வி அறிவு ஞானத்தை ஸ்திரீகளுக்கும் அளிக்கவேண்டியது அவசியம் என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்து பெண் கல்வியைப் பரப்ப முற்படவேண்டும்.







"கேணிக்குப் போகிறேன்."



சுக்காலக்ஷேபம்.

# லட்வியா

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

ஐரோப்பாவில் 1914—18-ல் நடந்த மஹாயுத்தத்தின் விளைவாக பலசிறு தேசிய சமூகங்கள் அடிமைத்தளைகளை அருத்தெரிந்து சுதந்திரக் கொடியை நாட்டின. அந்த மஹாயுத்த சந்தர்ப்பத்தை தங்கள் நாடு விடுதலை பெறுவதற்கு உபயோகப்படுத்திக் கொண்டனர் அறிவாளிகளாகிய அந்த நாட்டுத்தலைவர்கள். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்றபடி பெரியவல்லரசுகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருந்த சமயம் அவற்றின் ஆதிக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ள பல சிறிய சமூகங்களும், நாடுகளும் அந்த நெருக்கடியை தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டு தங்கள் தேசங்களின் சுதந்திரத்தை நிலை நாட்டின. அவற்றுள் பால்டிக் நாடுகள் (Baltic States) என்றவை ஒரு சில. அவைகள் எஸ்துவேனியா, லிதுவேனியா, லட்வியா, போலந்து முதலியன. இந்த தேசங்கள் தனிதேசங்களாய் தலைதூக்க ஆரம்பித்தது ஐரோப்பிய யுத்த முடிவுக்குப் பின்னரே. அதில் லட்வியாவும் ஒரு சுதந்திரக் குடியரசு.



தேசிய உடையணிந்திருக்கும் லட்விய மங்கை.

லட்வியா ஒரு பழமையான தேசம் என்று தெரிகிறது. இதற்கு வடக்கில் எஸ்துவேனியாவும், கிழக்கில் ரஷ்யாவும், தெற்கில் லிதுவேனியாவும், மேற்கில் பால்டிக் சமுத்திரமும் ரீகா வளை குடாவும் இருக்கின்றன. இது ஒரு பழமையான நாகரிக தேசம். இதற்கு "அம்பர் தேசம்" (Amber Land) என்றும் ஒரு பெயர் வழங்கி வந்திருக்கிறது. ஏனென்றால் அம்பர் என்ற வஸ்துக்கு இந்த தேசம் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே லட்வியர் ரோமர்களுடனும், கிரேக்கர்களுடனும் வியாபார சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த சிறிய நாடு ரஷ்யா, ஜெர்மனி இரு தேசங்களுக்கும் மத்தியில் அகப்பட்

டுக் கொண்டு தத்தளித்தது. சில நூற்று ஆண்டுகள் இவ்விரு தேசங்களின் ஆளுகைக் குட்பட்டுத் தவித்தது. கடைசியில் மஹாயுத்தத்தில் இந்த நாட்டினர் நேச தேசங்களுடன் (Allies) சேர்ந்து ஜெர்மனிக்கு விரோதமாகப் போராடினர். சுமார் 80 ஆயிரம் லட்வியர் போர்க்களங்களில் மடிந்தனர். சுமார் 40% ஜனங்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேற நேரிட்டது. இன்னும் அவர்கள் யுத்த சமயத்தில் பட்டபாடு அளவற்றது. அவர்களின் தொழில் முறைகள் நாசமாக்கப் பட்டன. வீடு வாசல்கள் இடித்தெறியப்பட்டன. விவசாயம் பாழடைந்தது. இருந்த போதிலும் தங்கள் சுதந்திரத்தை நிலை நாட்ட எப்பேர்பட்ட தியாகமும் செய்யத் தயாராயிருந்தனர் லட்வியர்கள். இன்னும் சந்தர்ப்பம் நேரிட்டால் அதிகமான தியாகங்களையும் சுதந்திர தேவியின் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கத் தயாராய் இருக்கின்றனர்.

## அரசியல்

அரசாங்கம் ஒரு குடியரசு முறையில் நடந்து வருகிறது. நிர்வாஹ சௌகர்யங்களை யுத்தேசித்து லட்வியா நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவைகளாவன :— லிவோனியா (Livonia), ஸூர்லந்து (Courland), ஸெம்கால் (Semgale), லட்கால் (Letgale). இதன் பரப்பளவு சுமார் 25 ஆயிரம் சதுர மைல்கள். ஜனத்தொகை சுமார் 20 லட்சம் பேர்கள். 1917 வரை லட்வியன் தேசிய கவுன்ஸிலே (Latvian National Council) அரசியல் அதிகாரத்தை வைத்திருந்தது. 1917 வருஷம் நவம்பர் மாதம்



உருளைக்கிழங்கு உறிக்கிறாள்.

ஜனப் பிரதிநிதிசபை (Constituent Assembly) கூடியது. 1918-ம் வருஷத்தில் லட்விய குடியரசு பிரகடனம் செய்யப்பட்டு பல வல்லரசுகளாலும் அங்கீகாரம் செய்யப்பட்டது. 1920-ல் கூடிய 152 பேர்கொண்ட ஜனப்பிரதிநிதி சபை பார்லிமெண்டு முறையை வகுத்தது. பார்லிமெண்டு 100 அங்கத்தினர்கள் கொண்டது. வயது வந்தவர்கள் யாவரும் வாக்காளர்கள். பார்லிமெண்டே தேசத்தின் தலைவரை (President) தேர்ந்து எடுக்கிறது. அவரே குடியரசின் அக்கிராசனர்.

இந்நாடு மரக்கட்டை, பால் சம்பந்தமான பொருள்கள், தேன் முதலிய வற்றுக்குப் பேர் போனது. விவசாயமே பிரதான ஜீவனமார்க்கம். பாதி ஜனத்தொகை





யினர் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு இருக்கின்றனர். முக்கியமான விளைபொருள் சிறுசணல் (Flax). நல்ல போக்கு வரத்து சாதனங்களிருக்கின்றன. இந்த தேசத்தின் தலை நகரம் ரீகா என்ற துறை முகம். இதர முக்கிய பட்டணங்கள் லிபா (Libau), விந்தா (Windau), ருசுவா (Rucuva), முதலியன. நிலப்பரப்பில் கால்பாகம் காடாக இருப்பதால் மரவியாபாரம் நடக்கிறது.

## லட்வியர்கள்

இவர்கள் திடசரீரமும், நடுத்தர உயரமும் உள்ளவர்கள்; சாந்தமானவர்கள்.



லட்விய நடனமாது.

தங்கள் தொழிலை பொறுமையுடன் கண்ணுங் கருத்துமாய் செய்து முடிப்பார்கள். யுத்தத்துக்குப்பின் நிலம் ஒரு சில ஜெர்மனியப் பிரபுக்களிடமிருந்து பிடுங்கப்பட்டு விவசாயிகளுக் கெல்லாம் சரிசமமாக பங்கிட்டுக் கொடுக்கப் பட்டுள்ளது. தங்கள் நிலங்களைப் பயிரிட்டு அதன் பலனை திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் லட்வியர்கள் அனுபவிக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் ஏழைமக்களே. நகரங்கள் தவிர நாட்டுப் புறங்களில் வீடுகள் எல்லாம் மரச்சாமான்களாலேயே கட்டப்படுகின்றன. கூறை மேய்ந்த வீடுகள்தான் அதிகம். ஓட்டு வீடுகளும் காணப்படுகின்றன. அவர்கள் ஆடம்பர மற்றவர்கள். தங்கள் குடும்பவளர்ச்சியில் அதிககவனம் செலுத்துகிறார்கள். தங்கள் ஓய்வு நேரங்களை மனைவிமக்களுடன் இன்பமாகவும், உல்லாசமாகவும் கழிக்கிறார்கள்.

## ஸ்திரீகள்

லட்விய மங்கையர்கள் நல்ல வனப்பும், தேகக்கட்டும் உடையவர்கள். தங்கள் கணவர்களின் சகல வேலைகளிலும் தாங்களும் கலந்துகொண்டு அவர்களுக்கு உதவி புரிகின்றனர். விவசாயத்தில் அவர்கள் உழுதால் இவர்கள் விதை விதைப்பார்கள். நாற்று நடல், அறுப்பு அறுத்தல் முதலியன இருபாலாரும் கலந்தே செய்கின்றனர். ஆண், பெண் இருபாலரிலும் படிக்காதவர்களே கிடையாது. எல்லோரும் வெகு சுறு சுறுப்பாக நாட்டின் தொழில்களை அபிவிருத்தி செய்வதில் மிகுந்த அக்கரை காட்டிவருகின்றனர். தங்களை பலவிதவர்ண ஆடைகளால் அலங்கரித்துக் கொள்வதில் ஸ்திரீகளுக்கு அதிக ஆசை. ஆகையால் நகை

களில் இவர்களுக்கு அவ்வளவு ஆசை கிடையாது. தங்கள் கணவர்களைப் போலவே எளியவாழ்க்கை நடத்துகிறார்கள். துணி துவைத்தல் முதலியன ஸ்திரீகளே செய்கிறார்கள்.

### விழா

இவர்கள் ப்ராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களாக இருந்தபோதிலும் பழைய ஆதி மதங்களின் வாசனை இவர்களை விடவில்லை. இயற்கையை வணங்கும் குணம் இன்னும் ஓரளவு இருந்து வருகிறது. இவர்கள் முக்கிய விழாவின் பெயர் ஸெயின்ட் ஜான் தினம். அதற்கு முந்தின தினம் "ஜான் தின பால் கட்டிகள்" என்ற பக்ஷணத்தை லட்சிய ஸ்திரீகள் எதேஷ்டமாகச் செய்து விற்கிறார்கள். பலரும் அதை வாங்கி வைத்துக்கொண்டு இரவு ஆரம்பமானதும் அவற்றை உடைக்கிறார்கள். அன்றிரவு பூராவும் (ஜூன் 23உ) நடனங்களும், பாட்டுக் கச்சேரிகளும் இதர விளையாட்டுக்களும் நடக்கின்றன. ஆண், பெண் இருபாலாரும் சந்தோஷமாகப் பொழுதைப் போக்குகின்றனர். மறு தினமும் ஒரு விசேஷமாகவே கொண்டாடப்படுகின்றது.

இந்தச் சிறிய சுதந்திரக் குடியரசு மக்கள் தங்கள் சுதந்திரத்தின் மகிமையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எவ்வளவு சிறு நாடாக இருந்த போதிலும் பரிபூரண சுதந்திரம் அடைந்திருப்பதால் அது உலக தேசங்களிடையே தலை நிமிர்ந்து நிற்பது இந்தியாவுக்கு ஓர் உதாரணமாகும்!





# லீலா—கிருஷ்ணன்

திரு ஆ. வெ. சுப்ரமணியம்

ஆவணி மீ 14உ காலை 9 மணிக்கு விருதுநகர் முத்துக்கருப்பன் செட்டியார் பேத்தி லீலாவதியம்மாளை காணவில்லை யென்ற செய்தி அவ்வூர் முழுவதும் பரவிவிட்டது. முத்துக்கருப்பன் செட்டியார் நல்ல பணக்காரரும் சிறந்த வியாபாரியுமாயிருந்தபடியால் அவ்வூரில் யெல்லோராலும் நன்கு கொண்டாடப்பட்டு வந்தார். விருதுநகரில் யெங்கேயாகிலும் நல்ல காரியங்கள் கெட்ட காரியங்கள் நடந்தால் செட்டியாரைத்தான் முதலில் காணலாம். அவருக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்ணு முண்டு. புதல்வர்களிருவரும் வியாபார நிமித்தமாய் அயல்நாடு சென்றிருந்தார்கள். புதல்வியை தகுந்த ஊரில் கல்யாணம் செய்து கொடுத்திருந்தார். அவர் பெண்தான் காணமற்போன நம் லீலாவதி.

சிறுவயதிலே தாயையிழந்த லீலாவதியை முத்துக்கருப்பன் செட்டியார் ஏழாவது வயதில் தகுந்தவனைப்பார்த்து கல்யாணம் முடித்து வைத்தார். விவாஹம் நடந்தது. ஒரு வருடம் ஆவதற்கு முன் லீலாவின் கணவன் விண்ணுலகமடைந்தான். அப்பொழுது பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த லீலாவுக்கு தன் பிற்கால வாழ்க்கை அன்றுடன் அழிந்ததை யெவ்விதம் அறிந்துகொள்ள முடியும்? புருஷன் இறந்ததற்காக சில சடங்குகள் அவளை வைத்துச் செய்தார்கள். அவைகளெல்லாம் லீலாவிற்கு விளையாட்டாய் தோன்றியது. ஆயினும் புருஷனை இழந்த பெண்களுக்குச் செய்ய வேண்டிய முழுச்சடங்கும் சிறியாளாகிய லீலாவிற்கு அப்பொழுது செய்யப்படவில்லை.

லீலா மூன்றாவது வகுப்புவரை படித்து நல்ல பெண்ணென பெயரெடுத்தாள். பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்தியபின் வீட்டு வேலைகளை கவனித்துச் செய்து வந்தாள். ஒழிந்தநேரங்களில் வீட்டிலேயே கல்வி கற்றுவந்தாள். அழகின் அவதாரமாய் விளங்கியதுடன் அதற்கேற்ற சகல நற்குணங்களும் பொருந்திய குணக்குன்றாகவும் பிரகாசித்தாள். அவள் பெரியவளான பின்புதான் தனது விதவை நிலைமையை உணர்ந்தாள். தான் சிறு வயதாயிருக்கும்பொழுது தன்னை வைத்து கல்யாணம் செய்ததும், பிறகு கணவனிறந்ததற்குச் செய்த சில சடங்குகளும் அவள் மனக் கண்முன் தோன்றி மறைந்தன. இனிமேல் யெவ்வித இன்பங்களும் இவ்வுலகில் தனக்கு இல்லை யென்று யெண்ணுந்தோறும் அவளையுமறியாது கண்ணீர்வடியும். தன்னைப் போன்ற இளம் பெண்கள் உடுத்தும் ஆடைகளையும் அவர்கள் அணியும் ஆபரணங்களையும் அவர்கள் தங்கள் காதலர்களுடன் உல்லாசமாக வெளியில் உலாவச்செல்லுவதையும் பார்க்கும் பொழுதெல்லாம் அவளுக்கு

யேதோ ஒரு உணர்ச்சி தோன்றும். தானும் அவர்களைப்போல் சுகங்களை அனுபவிக்க முடியாததை நினைத்து பதினாலாவது வயது நிரம்பப்பெற்ற லீலா அடங்கா துக்கங்கொள்வாள். இக்காரணங்களால் அவளது முகம் வாடிய ரோஜாமலரைப் போல் சோபையற்றுப் போய் விட்டது.

விருது நகருக்கு அடுத்த கிராமம் சுப்ரமண்ய அய்யருக்கும் முத்துக் கருப்பன் செட்டியாருக்கும் பங்காக இருந்தது. அய்யரும் நல்ல பணக்காரர். செட்டியார் யெந்தக் காரியங்களுக்கும் (குடும்ப வியாபார காரியங்களுள்பட) அய்யரை கலந்து கொண்டே செய்வார். அய்யருக்கு கோபால கிருஷ்ணன் யென்னும் இருபது வயது நிரம்பிய புதல்வனொருவனுண்டு. அய்யருக்கு கிருஷ்ணனும் ஒரே புதல்வனாகையால் செல்வமாக வளர்த்து பி. ஏ. வரையிலும் படிக்கவைத்தார். பையன் வயதிற்கேற்ப அழகிலும் குணத்திலும் சிறந்து விளங்கினான். முக்கியமான விஷயங்களில் கிருஷ்ணனும் செட்டியாருடன் கலந்து கொள்வான். கிராம விஷயமாய் அடிக்கடி செட்டியார் வீட்டுக்குச் சென்று வருவான். ஒருநாள் லீலாவை அங்கே கண்டான். லீலாவும் கிருஷ்ணனை நோக்கினாள். இருவர் கண்களும் சந்தித்தன. அப்பார்வை கிருஷ்ணனின் இருதயத்தை பிளந்துவிடுவது போலிருந்தது. அப்பார்வையிலேயே தனது பிற்காலவாழ்வு அடங்கியிருப்பதாய் உணர்ந்தான். கிருஷ்ணனைக் கண்ட லீலாவின் மனதிலும் ஓர் வித உணர்ச்சி உண்டாகியது. அவனுடைய உருவம் அவளுடைய மனதில் அப்படியே பதிந்து விட்டது. இவனுடன் சேர்ந்து வாழாத ஜென்மம் பயனற்றது யென்று யெண்ணினாள். அவன் ஒரு முறை அவளைப்பார்த்தால் அவள் பல முறை கதவுயிடுக்கின் வழியாக அவனைப் பார்த்து விடுவாள். லீலாவைப்பார்க்கும் பொருட்டு அற்பக்காரியங்களையும் சாக்காக வைத்துக்கொண்டு கிருஷ்ணன் அடிக்கடி செட்டியார் வீட்டுக்கு வருவான். அவன் வராத ஒவ்வொரு நாளையும் நரக வேதனையை விடக் கஷ்டமாகவே கழிப்பாள் லீலா.

இப்படியே இவர்கள் காதல் நாளுக்கு நாள் வளர்ந்து வந்து பிறகு கடிதப்போக்கும் நடந்தது. சமூகக் கொடுமையை யறிந்த காதலர்களிருவரும் அயலூர் சென்று பகிரங்கமாக மணமுடித்துக் கொண்டு வாழவிரும்பினர். அதன்படியே நாம் ஆரம்பத்தில் கூறிய தேதியன்று இருவரும் இரவில் நேரே குற்றாலம் சென்று விட்டனர்.

லீலாவதியை காணாது வருந்திய முத்துக் கருப்பன் செட்டியார் அன்று காலை 11 மணிக்கு போலீசில் போய் விஷயத்தை தெரிவித்தார். போலீஸ் உத்தியோகஸ்தர் செட்டியாரிடம் ஒரு கடிதத்தை வாசிக்கும்படி செய்தார். அதில் கீழ் கண்டவாறு யெழுதப்பட்டிருந்தது:—

கனம் போலீஸ் இன்ஸ்பெக்டரவர்களுக்கு,

ஐயா!

என்னை ஏழு வயதில் ஒருவருக்கு விவாஹம் செய்து வைத்து எட்டாவது வயதில் நான் விதவையாகி விட்டபடியால் இவ்வுலக வாழ்வுக்கு இனி தகுதியற்ற நிலைமையில் இருப்பதாய் பிராயமெய்திய





பின் பிறர் சொல்ல நான் தெரிந்தேன். இப்பொழுது நான் இல்லறத் துறவியாயிருக்கவேண்டு மென்னும் கட்டுப்பாடும், அதற்குட்பட்ட இந்த வாழ்க்கையும் எனக்கு பிடிக்கவில்லை. ஆகையால் அடுத்த கிராமம் சுப்ரமண்ய அய்யரவர்களின் குமாரர் கோபால கிருஷ்ணன் என்பவர் மீது எனக்கேற்பட்ட அழவற்ற பிரீதியால் அவரை மனப்பூர்வமாய் காதலித்து இன்று இரவு அவருடன் என் இல்லத்தை விட்டு வெளியேறுகிறேன். எனது இச்செய்கை யெங்கள் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் அதிருப்தியை அழிக்கு மென்று யெனக்குத் தெரியும். நாங்களிருவரும் மனமொத்த காதலர்களாய் வெளியேறுவதில் வேறெவரும் எங்கள் விஷயத்தில் தலையிட எவ்வித ஞாயமுமில்லை. அப்படி யெங்களுக்கு ஏதாவது இடையூறுகள் ஏற்படுவதாயிருந்தால் அவ்விதம் நேராதபடி தடுப்பது போலீஸாராகிய தங்கள் கடமையாகையால் அப்படி ஒரு போதும் நேராமல் காப்பாற்றும்படி பிரார்த்திப்பதுடன் யெனது செய்கை பால்ய விவாகத்தின் கொடுமையை தடுப்பதற்கு ஒரு தூண்டுகோலாக விருக்கும் என்றும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கனம்,

லீலா.

கடிதத்தை படித்த முத்துக்கருப்பன் செட்டியாருக்கு தலை சுழல ஆரம்பித்தது. அவரால் பேச முடியவில்லை. நேரே கிராமத்துக்கு ஓடினார். "அய்யரே உமது பிள்ளை யெனது பேத்தியை கெடுத்து தீராத அபகீர்த்தியை உண்டாக்கி விட்டதுடன் உம் புத்திரனால் யெனது சமூகத்துக்கு நீங்காத அவமானம் வந்துவிட்டதென்று" வாயில் வந்தபடி பேச ஆரம்பித்துவிட்டார். இதைக்கேட்ட அய்யருக்கு தூக்கி வாரிப்போட்டது. இதுவரை எவ்வளவோ ஒழுங்காய் நடந்து வந்த தன் பிள்ளை இப்படிச் செய்தான் யென்றால் அவரால் நம்பமுடியவில்லை. அவமானமும் கோபமும் அவரால் தாங்க முடியவில்லை. "என் பிள்ளை ஒரு முண்டச்சியுடன் போவதா? உமது பேத்தியே யெனது பிள்ளையை கெடுத்துவிட்டாள்" என்று கோபமாகப் பேசினார். இருவருக்கும் சண்டை மூண்டுவிட்டது. இடையிலுள்ளோர் இருவரையும் சமாதானப்படுத்தி சென்றபிருவரையும் தேட ஆரம்பித்தனர்.

இரவே குற்றாலம் சென்ற லீலாவதியும் கோபாலகிருஷ்ணனும் ஓர் அழகிய பங்களாவில் தங்கினர். காதலர்களிருவரும் தனித்திருந்தால் சொல்லவா வேண்டும்! காலையில் அருவியில் குளிப்பதும் பகவான் சன்னதிக்குச் சென்று சுவாமி தெரிசனம் செய்வதும் உல்லாசமாய் விளையாடுவதுமாய் நம் இளங்காதலர்கள் யென்று—மில்லா இன்பக் கடலிலாடிக் கொண்டிருந்தனர். குற்றாலத்தின் எழில் மிகுந்த இயற்கைகாட்சி அவர்கள் காதலுக்கு ஓர் புதிய உயிர் கொடுத்தது. அவர்கள் சென்ற இரண்டாம் நாள் கிராமக்கணக்கு முத்தையா பிள்ளையும் மற்றும் சிலரும் குற்றாலம் வந்து நம் காதலர் இருவரும் இருக்கும் பங்களாவை யடைந்தனர். இவர்களைக் கண்ட கிருஷ்ணன் "எங்குவந்தீர் முத்தையாபிள்ளை" யென்று அதிகாரத் தோரணையில் கேட்டான். "யெஜமான்! நீங்கள் செய்தது யெவ்வளவு கேவலமான

செய்கை. தங்கள் அந்தஸ்து யென்ன, தங்களின் குடும்ப கௌரவமென்ன, இதையெல்லாம் தாங்கள் நினையாமல் இவ்விதம் நடந்துகொள்ளலாமா? ஊரெல்லாம் ஏக கலாட்டாவாகி விட்டதும் தவிர பெரிய எஜமானும் அம்மாளும் அன்ன ஆகாரமின்றி தங்களைக் காணாமல் தவிக்கின்றனர். ஆகையால் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு யென்னுடன் வந்து விடுங்கள்," யென்றார். "கணக்கப்பிள்ளை! நீங்கள் யென்ன சொன்னாலும் சரி; வேறு யார் யென்ன செய்தாலும் சரி; நான் ஒருபோதும் தனியாக வரப்போவதில்லை. எங்களை இனி மரணந் தவிர வேறொன்றாலும் பிரிக்க முடியாதென்று திட்டமாய் நினைத்துக்கொள்ளும்" யென்று ஆக்ரோஷத்துடன் கூறினான் கிருஷ்ணன். கணக்கப்பிள்ளை யெவ்வளவோ சொல்லிப்பார்த்தார். ஒன்றும் பிரயோஜனமில்லை. சற்று யோசித்தார்.

பிறகு தைரியமாக, எப்படியும் தான் பிரயாசை யெடுத்து இருவருக்கும் பகிரங்கமாக விவாஹம் செய்துகொடுப்பதாய் சத்தியம் செய்து கொடுத்தார். (இவ்விதம் ஒரு கல்யாணம் நடக்கவேணுமென்று அவர் வெகு நாளாக யெதிர்பார்த்திருந்தார். இப்பொழுது தானே அதற்கு முன்னின்று செய்யும்படி நேர்ந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப்பட்டார்.) பிறகு எல்லோரும் விருதுநகர் வந்து சேர்ந்தனர். லீலாவும் கிருஷ்ணனும் ஒரு தனி வீட்டில் தங்கினர். இச் செய்தியை அறிந்த செட்டியார் தன் மானம் போய் விட்டது யென்றும் லீலாவை உயிருடன் வைத்திருக்கலாகாதென்றும், அரிவாள் தடியுடன் கிளம்பிவிட்டார். அய்யர் தான் இனி அவ்வூரிலிருப்பதில்லை யென்று சன்யாசி கோலம் பூண்டு இரவிலேயே ஒருவருக்கும் தெரியாமல் கிளம்பிவிட்டார். எங்கு சென்றார் என்று தெரியவில்லை. செட்டியாரை போலீசார் வந்து சமாதானப் படுத்த வேண்டியதாயிற்று. முத்தையா பிள்ளையின் பெருமுயற்சியால் சமூக சீர்திருத்தவாதிகள் யெல்லோரும் சேர்ந்து இக்கல்யாணத்தை மிகுந்த சிறப்புடன் முடித்து வைத்தனர். தம்பதிகள் கதாராடையுடன் காட்சியளித்தனர். இம்மணமக்களைப் பற்றி சபையிலுள்ளோர் புகழ்ந்து பேசியதுடன் இவ்வித கலப்பு மணங்கள் நாட்டில் பெருகவேண்டுமென்றும் குறிப்பிட்டனர்.

வருஷம் ஒன்று சென்றது. ஒரு சுபதினத்தில் லீலாவதியம்மாள் சொர்ண விக்கிரகம்போல் ஓர் ஆண் குழந்தையும் பெற்றெடுத்தாள். காதலின் கனியாகிய அக்குழந்தைக்கு தங்கள் இருவரின் பெயரில் லீலாவதியின் முற்பகுதியாகிய 'லீல' யென்பதையும், கோபால கிருஷ்ணன் யென்பதின் பிற்பகுதியான 'கிருஷ்ணன்' யென்பதையும் சேர்த்து "லீலா—கிருஷ்ணன்" யெனப் பெயரிட்டு அழைத்து வருகின்றார்கள். குழந்தைச் செல்வத்தைக் காட்டிலும் மற்றும் செல்வம் வேண்டுமோ பெற்றோர்க்கு! காணாமல் போன அய்யரும் திரும்பி வந்து விட்டார். குழந்தையின் மழலைச் சொல் கேட்பதினாலேயும் லீலாவின் அன்பு கனிந்துருகும் தேற்றுதலினாலேயும் மனம் மாறி விட்டார். செட்டியாரும் "கிரஹலக்ஷ்மி"க்கு ஆயுள் சந்தாதாராக ஆகி தனது புத்துணர்ச்சியை நிரூபித்தார். பெற்றோர்களின் அறியாமைக் காரியங்களுக்காக மக்கள் கஷ்டப்படக் கூடாதென்று பிரசாரம் செய்கிறார்.

பால்ய விவாகம் மாண்டொழிக!
கலப்புமணம் தழைத்தோங்குக!!
விதவையர் துயரொழிக!!!

———:o:———



# ஸ்ரீமதி துர்காபாய்

"கண்ணன்"

ஆந்திர தேச பக்த சிகாமணிகளில் சிறந்து விளங்குபவர் ஸ்ரீமதி ஜீ. துர்காபாய் அம்மாள் அவர்கள். துர்காபாய் தன் பெயருக்கேற்ப குணத்திலும் வீரம், தீரம், தேசபக்தி முதலிய செறிந்து விளங்கினர். இந்தியாவின் சுதந்திரப்போராட்டத்தில் துர்காபாய் ஒரு சிறந்த யுத்த தளகர்த்தராய் விளங்கியது சென்னை மாகாணவாசிகள் யாவர்க்கும் நன்கு தெரிந்த விஷயமே.

ஸ்ரீமதி துர்காபாய் 1909ம் வருஷம் ஜூலை மாதம் 10உ பிறந்தவர். "விளையும் பயிர் முளையிலே" என்பதற்கிணங்க துர்காபாய் இளஞ் சிறுமியாக இருக்கும் போதே வெகு புத்தி தீட்சண்ய மிருந்தவளாக இருந்தாள். அவளது குண விசேஷத்தைக் கண்டு தாய் தந்தையர் மட்டுமின்றி இதரர்களும் பெரிதும் வியந்தார்கள். குழந்தை துர்காவுக்கு இளவயதிலேயே கல்வி அளித்தார்கள். அவளும் வெகு துரிதமாக சகல விஷயங்களையும் ஆர்வத்துடன் கற்றுக்கொண்டாள். பிராமண வழக்கப்படி துர்காவுக்கு பன்னிரண்டாவது வயதில் மணம் நடந்தது. கணவனும் தன் மனைவியின் போக்கையுணர்ந்து அவரது மனப்படியே நடக்க சுதந்திரம் அளித்து வந்தார்.

## ஹிந்தி சேவை

தனது பதின்மூன்றுவது வயதில் ஸ்ரீமதி துர்காபாய் ஹிந்தி கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். ஆறுமாதங்களில் ஹிந்தியில் நல்லபாண்டித்யம் பெற்றார். அவ்வளவு குறுகிய காலத்தில் அவர் ஹிந்தி பாஷையை நன்கு கற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. ஹிந்தி பலரும் மனமிருந்தால் வெகு எளிதில் கற்றுக்கொள்ளலாம் என்பதற்கு துர்காபாய் ஒரு வழிகாட்டியாக இருக்கிறார்.

இளம்பிராயத்திலிருந்தே துர்காவுக்கு பொதுஜன சேவையிலீடுபட வேண்டுமென்று மிகுந்த ஆவலிருந்து வந்தது. அதிலும் தன்சகோதரிகளுக்கு அறிவு வளரச் செய்யவேண்டுமென்று அதிகம் விரும்பினர். அந்த எண்ணத்துடன் ஒரு பள்ளிக்கூடத்தை காக்கினடாவில் தான் பதின்மூன்று வயதாக இருக்கும்போதே ஆரம்பித்து தானே ஹிந்தி கற்றுக் கொடுத்தார்.

1923-ம் வருஷம் காக்கினடாவில் அகில இந்திய காங்கிரஸ் மஹாசபை கூடிற்று. அச்சமயம் ஸ்ரீமதி துர்காபாயின் பள்ளிக்கூடத்தில் சுமார் நூறு மாணவிகள் கல்வி பயின்று வந்தனர். கல்விமுறை தேசீயத்தை வளரச் செய்யும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டு போதிக்கப்பட்டு வந்தது. அந்த வித்யாசாலையை நடத்தவேண்டிய செலவையெல்லாம் துர்காவே செய்து வந்தார். அவ்வருஷம் காங்கிரஸ் மஹாசபைக்கூட்டத்தை யொட்டி காக்கினடா வந்த பிரபல தலைவர்கள் துர்காவின் வித்யாசலைக்கு விஜயம் செய்து அவரது சேவையைப் புகழ்ந்து பாராட்டினார்கள். பதினன்கு வயதுக்குள் இவ்வளவு அரிய தொண்டு செய்யும் மங்கையர் மாணிக்

கத்தை யார்தான் புகழ்ந்து பேசாம லிருக்க முடியும்?

துர்காபாய்க்கு சோம்ப லென்றால் என்னவென்றுகூடத் தெரியாது. தன் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாக விருந்துவந்தாலும் வீட்டில் துர்கா ஆங்கிலம், தெலுங்கு, சங்கீதம் முதலியவைகளை வெகு சிரத்தையுடன் மாணவராக பயின்றுவந்தார். அவற்றிலும் போதிய ஞானம் பெற்றார்.

## தேசசேவை

இவரது பொது நல ஊழியத்தை கோதாவரி ஜில்லாவாசிகள் யாவரும் தெரிந்து கொண்டார்கள். இன்னொரு காரியமும் இவர் செய்தார். விசாகப் பட்டணத்திலும் ஒரு ஹிந்திப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி நடத்தி வந்தார்.

தேசசேவையில் அதிகமாக ஈடுபடும்படி செய்தது இவரது வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு முக்கிய சம்பவமாகும். உலகம் போற்றும் உத்தமர் மஹாத்மா காந்தியடிகள் மீது துர்காவுக்கு பரிபூரண விஸ்வாசமும் பக்தியும் உண்டு. அப்பெரியார் 1929-ம் வருஷம் சுமார் 25 நாட்கள் ஆந்திர தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அச்சமயம் ஸ்ரீமதி துர்காபாய் மஹாத்மாவுடன் கூட சுற்றுப்பிரயாணம் சென்றார். மஹாத்மாவின் தூயவாழ்க்கையையும், அஞ்சா நெஞ்சும், தீவிரதேசபக்தியும் இவர் அச்சமயம் நேருக்கு நேராக அறியநேரிட்டது. அவரை தனது அரசியல் குருவாக துர்கா மதிக்கத் தலைப்பட்டு அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தன்னாலான தேசசேவையை தானும் செய்வதென்று உறுதி செய்து கொண்டார்.

இவர் 1930-ம் வருஷ ஆரம்பத்தில் கீழ் கோதாவரி ஜில்லா போர்டுக்கு அங்கத்தினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். ஆனால் இந்த ஸ்தாபன ஊழியத்தில் அவர் அதிகம் வேலைசெய்யப் பின்னர் ஏற்பட்ட சம்பவங்கள் இடம் கொடுக்கவில்லை. அவரது கணவருக்கு உடம்பு அசௌகர்யமாய்ப்போய் விட்டபடியால் 1930-ல் துர்கா சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

## சட்டமறுப்பு இயக்கம்

இந்திய சரித்திரத்திலேயே 1930-ம் வருஷம் ஒரு முக்கியமான வருஷம் என்பதை யாரும் மறக்கவும் முடியாது, மறுக்கவும் இயலாது. அவ்வருஷமே மகாத்மா காந்தியடிகள் தனது தூய சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். பிரிட்டிஷ் சர்க்காருக்கும் வைஸ்ராய் பிரபுவுக்கும் சில கடிதங்கள் எழுதினார். தேச நன்மைக்கான சில காரியங்களைச் சர்க்கார் உடனே செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார். ஆனால் "மயிலே! மயிலே!! இறகு போடு" என்று மஹாத்மா கேட்டால் ஆயுத பலம் கொண்ட சர்க்கார் இணங்கி விடுவார்களா? உப்புவரியை உடைத்தெறிவதற்கு அறிகுறியாக மஹாத்மா உப்புக் காய்ச்சுவதற்காக தனது சபர்மதி ஆசிரமத்தைவிட்டு தனது உண்மை சிஷ்யர்களுடன் கால் நடையாக டாண்டிக்கு யாத்திரை புறப்பட்டார். நாடெங்கும் ஒரு பெரிய உத்வேகம் தோன்றியது. தேசியச் சுடர் எங்கும் கொழுந்து விட்டெரிந்தது. நாடெங்கும் சட்டமறுப்பியக்கம் காட்டுத் தீபோல் பரவியது.





## சென்னையை தட்டியெழுப்பினார்

ஆனால் சென்னை நகர் மட்டும் வெகு நன்றாய் உறங்கியது. அதைக் கண்டு இதர மக்கள் எள்ளி நகையாடிக் கொண்டிருந்தனர். தலை நகரமாகிய சென்னையில் 'பிரபல தலைவர்கள்' 'வாய்வீச்சு வீசியவர்கள்' சோதனைகாலம் வந்தபோது ஓடி ஒழிந்து மறைந்தனரோ வென்று இதர ஜில்லாவாசிகள் ஐயுற்றனர். அச்சமயம் சென்னையின் மானத்தைக் காப்பாற்ற ஸ்ரீமதி துர்காபாயும், ஸ்ரீயுத டி. பிரகாசமும் சென்னைக்கு வந்து சேர்ந்தனர். சென்னைக் கடற்கரையில் உப்புச் சட்டத்தை மீறி உப்புக்காய்ச்ச வேண்டிப் பிரசாரம் செய்தனர். சென்னை நகரிலும் ஒரு உணர்ச்சியை உண்டு பண்ணிவிட்டனர். சென்னையும் தன் மரியாதையையும், கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள முன் வந்தது. திரு. பிரகாசம் கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்த பின் ஸ்ரீமதி துர்காபாய் சென்னை நகரின் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார். அச்சமயம் போலீஸ் ஆட்சியின் அட்டூழியங்கள் எப்படி இருந்தது என்பதுபற்றி யான் அதிகம் சொல்லத் தேவையில்லை. "தடியடி தாண்டவம்" ஆரம்பித்த சமயம். ஸ்ரீமதி துர்காபாய் உப்புச் சட்டத்தை மீறும்படி வெகு உக்கிரமான பிரசங்கங்கள் செய்தார். போலீஸ் அடக்குமுறைகளின் கொடுமைகளை அஞ்சா நெஞ்சுடன் ஏற்று வீரவெழுச்சியுடன் இவர் சண்டையிட்டதை சென்னை நகர் வாசிகள் மறக்கவே முடியாது. போலீஸ் லாத்திகள் (குண்டாந்தடிகள்) எவ்வளவு வேகமாக தன்னைத் தாக்க வந்தாலும், உத்தியோகஸ்தர்கள் தங்கள் குதிரைகளை என்ன கோரமான முறையில் இவர் பக்கமாக ஓட்டி வந்தாலும் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து வீழ்ந்து விட்டபோதிலும், பச்சையூனி எந்தவேல் படைகள் வந்த போதிலும்" என்றபடி கலங்கா நெஞ்சத்துடன் எதிர்த்து நின்றார். அச்சமயம் அவர் துர்கையின் அம்சமாகவே விளங்கினர் என்று சொல்லலாம். 1930-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25௳ தடியடியால் தாக்குண்டார். மேமீ 25௳ ஆர்க்காட்டில் கைது செய்யப்பட்டு பினல்கோட் 117-வது செக்ஷன் படியும், உப்புச்சட்டம் 74-வது பிரிவுப்படியும் குற்றம் சாட்டப்பட்டு முறையே ஒன்பது மாதமும், மூன்று மாதமும் கடுங் காவல் சிறைதண்டனை விதிக்கப்பட்டார்.

## சிறைவாழ்க்கை

வேலூர் சிறையில் தன் தண்டனையை அனுபவித்தார். அங்கும் சும்மா இருக்கவில்லை. வந்திருந்த இதர ஸ்திரீ அரசியல் கைதிகளுக்கு ஹிந்தி போதித்தார். தன் அரசியல் ஞானத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக பல புஸ்தகங்களைப் படித்து வந்தார். தினந்தோறும் தானும் நூல் நூற்று வந்தது மன்னியில் தன் சகோதரிகளையும் கைராட்டினத்தைச் சுழற்றும்படி தூண்டுவார். சிறைச் சாலையை தவச்சாலையாகக் கருதியிருந்தார். பிறகு மஹாத்மாவுக்கும் லார்ட் இர்வினுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக விடுதலை செய்யப்பட்டார். ஆனால் இந்த விடுதலை வெகுகாலம் நீடிக்கவில்லை. மஹாத்மா வட்டமேஜை மஹாநாட்டுக்குச் சென்று திரும்பிய பின் மறுபடியும் சட்[illegible]1932-ல் ஆரம்



1599K7

பித்த பொழுது காங்கிரஸின் கட்டளைப் படி ஸ்ரீமதி துர்கபாயும் சிறை சென்றார்.

இவர் தீவிரவாதியாகையால் சட்ட சபைப்பிரவேசத்தை அதிகமாய் விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்டளையை சிரமேற்கொண்டு அகில இந்திய சட்ட சபைக்கு தேர்தல் நடந்தபோது இவர் தீவிரப்பிரசாரம் செய்து அதனால் அனேக காலிகளின் ஹிம்சைக்கும் உட்பட்டார். 'சங்கு சுட்டாலும் வெண்மைதரும்' என்றபடியும், அனலிலிட்டு அடிக்க அடிக்க தங்கத்தின் மாற்று அதிகமாவது போலும் ஸ்ரீமதி துர்காபாய்க்கு இந்தக் கஷ்டங்கள் அவாது தேசபக்தியை மென்மேலும் வளரும்படியே செய்தன. ஸ்ரீமதி துர்காபாய் பின்னர் காசி ஹிந்து சர்வகலாசாலையில் சேர்ந்து இன்டர்மீடியேட் பாஸ் செய்து விட்டு தற்சமயம் வால்டேரில் ஆந்திர சர்வகலாசாலையில் பி. ஏ. ஹானர்ஸ் படித்துக் கொண்டிருக்கிறார். அன்னை பாரத மாதாவின் ஆணை பிறந்தால் இப்பவும் தேசீயப்போரில் இறங்க தயங்கமாட்டார். இவ்வளவு சிறந்த தேசசேவகியாகிய துர்காபாய்க்கு பராசக்தி நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் தந்து மென்மேலும் தேசசேவை செய்ய சந்தர்ப்பமளிப்பாளாக!

வந்தே மாதர மென்றுயிர் போம்வரை வாழ்த்துவோம்,
முடி தாழ்த்துவோம்,
எந்த மாருயிர் அன்னையைப் போற்றுதல் ஈனமோ
அவமானமோ?
சொந்த நாட்டிற் பரற்கடிமை செய்தே துஞ்சிடோம்,
இனி அஞ்சிடோம்,
எந்த நாட்டினும் இந்த அநீதிகள் ஏற்குமோ, தெய்வம்
பார்க்குமோ?
சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம் சாயுமோ,
ஜீவன் ஓயுமோ?
இதயத்துளே இலங்கும் மஹா பக்தி ஏகுமோ, நெஞ்சம்
வேகுமோ?

—சுப்ரமண்ய பாரதி.



# தனுர்மாச வைபவம்

## அல்லது

# பீமசேனரின் பக்தி

"ஜனககுமாரி"

"மமப்ராணாஹி பாண்டவா" என்றபடி ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பக்தசிரேஷ்டர்களான பாண்டவர்கள் ஐவரில் பீமசேனர் மகா முரடரென்றும், மிகுந்த பசியுள்ளவரென்றும், பெரிய சாப்பாட்டு ஆசாமி என்றும், அதனால் ஞானம், பக்தி, ஊக்கம் முதலியவை இல்லாதவரென்றும், சாமானியமாய் எல்லோருமே நினைப்பதுண்டு. பீமசேனர்தான் மிகவும் மேலான அந்தரங்க பக்தரென்பதை, உலகத்தாருக்கு அறிவிக்க ஒருசமயம் ஸ்ரீ கிருஷ்ண பகவான் செய்த ஓர் அற்புதமான காரியத்தை இங்கு எழுதுகிறேன்.

தனுர்மாசத்தில் அதாவது சூரியன் தனூர் ராசியை அடைந்தசமயம் விதிப்படி யுதிஷ்டிரர் பஞ்ச உஷக்காலத்தில் எழுந்திருந்து ஸ்நானம் செய்து, பகவானுக்கு பூஜாதிகளை நடத்தி, பொங்கலை நிவேதனம்செய்து, பகவத்பக்தர்களுக்கு சூரியோதயத்துக்கு முன்பு போஜனம் செய்வித்து தனது தம்பிமார்களுடனும் திரௌபதி முதலிய ஸ்திரீகளுடனும் போஜனம் செய்துவந்தார். இவ்வாறு தனுர்மாஸ வைபவம் யுதிஷ்டிரரின் வீட்டில் வெகு சிறப்பாய் நடந்துவந்தது. இப்படியிருக்க தர்மபுத்திரருக்கு சாக்ஷாத் த்வாரகாநாதனாய் விளங்கும் புராணபுருஷன், புருஷோத்தமன், பகவான் ஸ்ரீ கிருஷ்ணன், ஒரு நாளாவது தேவில் வந்து, இந்த பூஜையைப் பெற்று, உஷக்காலத்தில் போஜனம் செய்யவேண்டுமென்று விரும்பினார். இந்த தனது பிரார்த்தனையை அறிவித்து பகவானை அழைத்து வரும்படி சகாதேவனை துவாரகைக்கு அனுப்பினார். சகாதேவனும் அவ்வாறே சென்று பரமாத்மாவிடம் அறிவிக்க பகவான் தான் ஒரு அவசரகாரியமாய் வெளியே போகவேண்டி இருப்பதால் அங்கு வரமுடியாதிருப்பதை வருத்தத்துடன் அறிவிக்கவேண்டி யிருக்கிறதென்று பதில் சொல்லி சகாதேவனை திருப்பி விட்டார்.

இதைக் கேட்டு தருமராஜன் நகுலனிடம் நிர்ப்பந்தமாய் சொல்லியனுப்ப பகவானும் நகுலனுக்கு நல்ல வார்த்தை செல்லி அவனை திருப்பி அனுப்பிவிட்டார். இதைக்கேட்டு தருமராஜன் மிகவும் சோகிக்க அர்ஜுனன் எப்படியாவது ஸ்ரீ கிருஷ்ணரை தான் அழைத்து வருவதாய்ச் சொல்லி திவ்யமான ரதத்திலேறி துவாரகைக்கு வந்து சேர்ந்தான். பரமாத்மா அர்ஜுனனைக் கண்டதும் மிகவும் சந்தோஷமடைந்து குசலபிரச்னம் செய்து வந்தகாரியத்தை வினவ "பரந்தாமா! ஸர்வக்ஞனயினும் என்னை தாங்கள் இவ்வாறு சோதிக்கலாகாது. பக்த வத்ஸலா, எங்கள் அண்ணா தர்மபுத்திரர் தங்களை சாக்ஷாத்தாய் ஆராதிக்க விரும்புகிறார். தாங்கள் இந்த விருப்பத்தை பூர்த்திசெய்து கிருபை செய்ய வேண்டும். பரமாத்மாவே! நான் தங்களை அழைத்து வருவதாக சபதம் கூறிவிட்டேன் ஸ்வாமி!" என்றான் அர்ஜுனன்.

அப்போழுது கிருஷ்ணன் "ஹே! அர்ஜுனா! நான் உங்களுக்கு புதியவனல்லவே. எனக்கென்ன இவ்வளவு உபசாரம். நான் பக்தபராதீனன். கேவலம் பக்திக்குமட்டில்

கட்டுப்பட்டவன். யாரிடம் உண்மையான பக்தி இருக்கிறதோ அந்த இடத்திற்கு நான் வலுவில் ஓடுகிறவன். நான் ஒருவருக்கும் தூரத்திலில்லை. அவரவர்களின் ஹிருதய கமலத்திலேயே குடிகொண்டு சமீபத்திலேயே இருந்து வருகிறேன். ஆதலால் என்னை வசமாக்கிக்கொள்ளும் உபாயம் அவரவர்களின் ஆதீனத்திலேயே இருந்து வருகிறது. இதற்காக அர்ஜுனா! நீ ஏன் இவ்வளவுதூரம் வர வேண்டும். நீ ஊருக்குப் போகலாம், நான் அவஸரமாய் ஓர் பக்தனுக்காக போகவேண்டியிருக்கிறது. அவசியமானால் நானே வந்து சேருகிறேனென்று தர்மராஜனிடம் போய் சொல்" என்றார்.

இதைக்கேட்ட அர்ஜுனன் யாதொன்றும் பதில் சொல்லமாட்டாமல் இந்திரபிரஸ்தம் வந்து சேர்ந்தான். அர்ஜுனனும் தனியாய் ஸ்ரீ கிருஷ்ணனில்லாமல் வருவதைப் பார்த்துவிட்டு யுதிஷ்டிரர் சோகத்தில் மூழ்கி பலவாறு புலம்பத் தொடங்கினார். இதற்குள்ளாக த்ரௌபதி இந்த விருத்தாந்தத்தை அறிந்து யுதிஷ்டிரரிடம் ஓடிவந்து, "ஆர்யபுத்திரா ஏன் வருத்தப்படுகிறீர்! இதோ ஓர் நொடியில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை இங்கிருந்தபடிக்கே வரவழைக்கிறேன்," என்று சொல்லி ஓர் ஆஸனத்தில் துவாரகை இருக்கும் திசையை நோக்கிக்கொண்டு உட்கார்ந்தாள். ஸ்ரீகிருஷ்ண பகவானின் திவ்யமங்கள சொரூபத்தை தியானித்து பலவாறு துதித்தாள். என்ன செய்தும் பகவான் வந்து சேரவில்லை. தருமரின் கவலை அதிகரித்தது. பகவானுக்கு தான் ஏதோ அபசாரம் செய்து விட்டதாகவே நிச்சயம் கொண்டார். இனி அவரையன்றி உணவு உட்கொள்ளேன் என்று அடம்பிடித்தார். இதற்குள்ளாக போஜனகாலம் குறுக்கிட்டது. எல்லோருக்கும் போஜனபாத்திரங்கள் வைக்கப்பட்டன. சரியாய் அந்தசமயத்தில் போஜனத்திற்காகவென்று பீமசேனர் வந்து சேர்ந்தார். யுதிஷ்டிரர் ஏதோ மனக்கவலைகொண்டு சங்கடப்பட்டு வருவதை அறிந்தார். போஜனம் செய்ய மறுப்பதையும் கண்டுகொண்டார்.

உடனே பீமசேனர் கம்பீரமான ஸ்வரத்துடன் "அண்ணா! தங்களுக்கு வருத்த முண்டாக காரணம் என்ன? அது எதுவாயினும் நான் அதைப் பரிகாரஞ் செய்கிறேன்" என்று சொன்னார். தருமராஜன், "பீமா! ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை கூடவைத்துக் கொண்டு நான் போஜனம் செய்ய வேண்டுமென்று இச்சித்தேன். எவ்வளவு யத்தனங்களைச் செய்தும் பலிக்கவில்லை. அர்ஜுனனும் திரௌபதியும் கூப்பிட்டுங்கூட அவர் வரவில்லை. இப்படியிருக்க உன்னால் என்ன முடியும்?" என்றார். "இதுதானா பிரமாதமான காரியம்" என்று சொல்லி பீமசேனர் தடபுடலாய் எழுந்திருந்தார். தன்னுடைய பிரம்மாண்டமான கதையை தூக்கிக்கொண்டார். ஒருதரம் கர்ஜித்தார். உடனே யுதிஷ்டிரரின் அரண்மனை கலகலத்துப் போயிற்று. இதைக் கண்ட அர்ஜுனன் "என்ன அண்ணா? கிருஷ்ண பரமாத்மாவுடன் யுத்தமா செய்ய புறப்பட்டாய்" என்றான். த்ரௌபதி முதலியோர் சிரித்தனர். யுதிஷ்டிரர் "பீமா இதென்ன விபரீதம், வேண்டாம் உனக்கு இந்த தொல்லை. ஸ்ரீ கிருஷ்ணன் வந்தாலென்ன போனாலென்ன? உன் போஜனத்திற்கு எப்பவும் குறைவேண்டாம்; அதை ஒழுங்காய் நடத்திக்கொள்" என்றார்.

பீமசேனர் "அண்ணா! என்னை இவ்வளவு கேவலமாக எண்ணாதீர். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மகாத்மியத்தை நான் அறிந்த அவ்வளவு நீங்கள் அறியவில்லை என்பதே என் சித்தாந்தம். என் பக்திக்கு பகவான் வசமாகுவாரென்பது திண்ணம். நீங்கள் மட்டில் பார்தாமருக்கென்று தனியாய் போஜன பாத்திரங்களை வைக்கச் செய்யுங்கள். அதில் எல்லாம் பரிமாறப்படட்டும்," என்று சொல்லி ஓர் ஒதுப்புறமான அறைக்குள் சென்றார். அங்கு யோகா





ஸனத்தில் உட்கார்ந்து கொண்டு அஸம்பிரக்ஞாத சமாதியில் அமர்ந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் பகவான் ஸ்ரீவேணு கோபாலன் மந்தஹாஸயுக்த முகாரவிந்தத்துடன் அங்கு தோன்றி பீமசேனரை யோக நிலையிலிருந்து தட்டி எழுப்பினார். பீமசேனர் தடபுடலாய் எழுந்து, சாஷ்டாங்கம் நமஸ்கரித்து உரக்கத் துதிக்கவும் அறையின் வெளியில் நின்றிருந்த அர்ஜுனன், நகுலன், முதலியோர் உடனே ஓடி வந்து பகவானை நமஸ்கரித்தனர்.

தருமர் பரமானந்த மடைந்து பீமசேனரை வெகுவாய்ப் புகழ்ந்து ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை நமஸ்கரித்து "பகவான், நான் தன்யனானேன். என் அபராதங்களை எல்லாம் க்ஷமித்து என்னை அனுக்கிரகிக்க வேண்டும்" என்று சொல்லி போஜனசாலைக்கு அழைத்துப் போக பகவான் அன்று தருமருடன் போஜனம் செய்தார். அர்ஜுனனும், த்ரௌபதியும், பகவானுக்கு மிக்க பிரியர்களென்ற எண்ணம் மாறியதுமன்றி பீமசேனரின் பக்தி மிகவும் மேலானதென்ற நிச்சயமும் ஏற்பட்டது. ஆனால் தருமருக்குமட்டும் இதில் உறுதி உண்டாகவில்லை. பரமாத்மா மறுநாளிருந்து அதிகாலையில் நடத்தப் போகும் தனுர்மாஸ பூஜையைப் பெற்று போஜனம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார். துவாரகையிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணனே சாக்ஷாத்தாக வந்து பூஜையைப் பெற்று உஷக்காலத்தில் போஜனம் செய்யப் போகிறாரென்ற செய்தி ஊரில் எங்கும் பரவியது. மறுநாள் சூரியோதயத்தில் போஜனம் செய்ய எல்லோரும் வரவேண்டுமென்று தருமரும் செய்தி சொல்லி யனுப்பியிருந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் ஆராதிக்கப் படுவதைப் பார்த்து மகிழ பதினாயிரக் கணக்கான ஜனங்கள் அரண்மனையில் அதிகாலையிலேயே கூடிவிட்டனர். எங்கும் இலைகள் போடப்பட்டன. பகவானுக்காகவென்று வெகு விசித்திரமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த ஸ்தானத்தில் ஸ்வர்ணமயமான போஜன பாத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன. இரத்னகசிதமான ஆஸனம் போடப்பட்டு மணிமயஸ்தம்பங்களில் தீபங்கள் ஜ்வலித்து வந்தன. தருமர் தம்பிமார்களுடன் சித்தமாக இருந்து ஸ்ரீ கிருஷ்ணரை வெகு ஆவலாய் ஒவ்வொரு க்ஷணமும் எதிர்பார்த்திருந்தார். பகவானை, அழைத்துவர தம்பிமார்களை திரும்பிப் பார்க்கையில் பீமசேனர் மட்டில் இல்லாமலிருந்ததைக் கண்டு உடனே அவரை அழைத்து வரும்படி தூதனை அனுப்ப பீமசேனர் பல வகை தலையணைகளை வைத்துக்கொண்டு குறட்டை விட்டுக்கொண்டு சயனத்தில் வெகு சொகுசாய் தூங்கிக் கொண்டிருப்பதாய் தூதன் அறிவித்தான்.

இதைக் கேட்டு தருமர் துக்கத்தையும் அவமானத்தையுமடைந்து பீமசேனரை வெகுவாய் நிந்தித்தார். ஸ்ரீ கிருஷ்ணர் இன்னமும் வரவில்லையே என்ற சிந்தை அவருக்கு மேலிட்டது. தூதர்கள் பகவானை அழைத்துவர மூலைமூலைக் கோடினர். எங்கும் பகவான் அகப்படவில்லை. சூரியோதயமும் ஆகிவிட்டது. பலர் பலவாறு பேசத் தொடங்கினர். தருமரும் இனி என்ன செய்வதென்று தோன்றாமல் திகைத்து நின்றார். அச்சமயம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் திவ்ய பீதாம்பரமுடுத்து சிகப்பான சந்தனம் பூசிக்கொண்டு நெற்றியில் திலகமுள்ளவராய் வனமாலை பூஷிதராய் வாயிற் தாம்பூலம் தரித்தவராய் காதிற் கர்ணகுண்டலங்கள் துலங்க நீருண்ட மேகம் போலும் நீலோற்பல ஓடை போலும் திருமேனி யுடையவராய் கோடிமன்மத லாவண்ய சொரூபத்துடன் பக்தியுடன் தன்னை எதிர்பார்த்து பந்தியில் உட்கார்ந்திருந்த பக்த கோடிகளுக்கு திவ்யசேவையை சாதித்துக்கொண்டு மத்தகஜம் போல உல்லாஸமாய் நடந்து வந்தார்.

பகவானின் வரவைக் கேட்டதும் தருமர் வேகமாய் ஓடிவந்து பகவானைப் பார்க்கு மளவில் அவருடைய வதனத்தில் தாம்பூலமிருப்பதைக் கண்டு திகிலடைந்து "பரந்தாமா தங்

...ளுக்காகவென்று இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்தேனே! தாங்கள் எங்கு போஜனம் செய்து வந்தீர்" என்று கேட்டார். அதற்கு பகவான் "தருமராஜனே! உன்னுடைய தம்பி பீமசேனர் தனது கையாலேயே எனக்கு இன்று போஜனம் செய்து வைத்தார். நீர் ஸ்நானம் செய்ய எழுந்ததற்கு முன்பே எனக்கு போஜனமாகிவிட்டது. நீங்கள் கார்த்திருப்பதாய் கேட்டேன். நீங்களினி போஜனம் செய்யலாமென்று சொல்லிப்போக வந்தேன்" என்றார். இதைக் கேட்டதும் தருமர் ஆச்சரியத்துடன் "ஸ்வாமி! இதென்ன ஜாலம். எனது தம்பி விருகோதரன் இன்னமும் படுக்கையைவிட்டு எழுந்தபாடில்லை. அவன் போஜனம் செய்வித்ததாவது தாங்கள் போஜனம் செய்ததாவது. பகவான் கிருபை செய்யுங்கள்" என்றார்.

ஸ்ரீ கிருஷ்ணர் "தருமராஜனே! அவ்வாறு சொல்லாதீர். நீர் டம்பத்துக்காக இத்தனை ஆயிரம் ஜனங்களை கூட்டிவைத்து தடல்புடல் செய்கிறீர். என்னுடைய அந்தரங்க பக்தனான பீமசேனனோ மானஸீகமாய் பூஜையை சரியான காலத்தில் ஆனந்தமாய் நடத்திபோஜனம் செய்வித்தான். நான் மட்டில் வந்து உண்பது போதாதென்று எண்ணி என்பிரிய பத்னியாகிய ருக்மணியையும் வரவழைத்துக் கொண்டிருக்கிறான். இதன் உண்மை பீமசேனனின் அரண்மனைக்குள் சென்றால் தெரிய வரும்" என்று சொன்னார். உடனே யுதிஷ்டிராதிகள் அங்குபோய் பார்க்கவும் லோக ஜனனீயான ஸ்ரீருக்மணி தேவி சர்வாபரண பூஷிதளாய் வாயிற் தாம்பூலம் தரித்து அமூல்யமான ரத்ன ஊஞ்சலில் வீற்றிருந்து ஸ்ரீ கிருஷ்ணரின் லீலா வைபவங்களை கருதி சுகமாய் பாடிக்கொண்டிருப்பதைக் கண்டனர். அதன் சமீபத்தில் வெகுவாய் அலங்கரிக்கப் பட்டிருந்த ஸ்தானத்தில் உச்சிஷ்டமான இரண்டு போஜன பாத்திரங்களிருந்ததையும் கண்டனர். மகா ஆச்சர்யமடைந்தனர். எங்கும் பீமசேனரின் பக்திமகிமையே கொண்டாடப்பட்டது. பீமசேனர் மகாஞானியே என்றும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக்கு அவர்தான் எல்லோரையும் விட அத்யந்த பிரியரென்றும் யுதிஷ்டிராதிகள் எல்லோருமே நன்கு அறிந்து கொண்டனர். பகவானை மகிழச் செய்வது நிர்வியாஜ்யமான அந்தரங்க பக்தியே.





ஸ்ரீமதி அன்னசாண்டி எம்.ஏ., பி.எல்.



நெல்லூர் ஸ்திரீ சமாஜத்தின் ஏழாவது ஆண்டு விழாவின்போது எடுத்த படம்.




பாபட்லா தாலுகா மூன்றாவது ஸ்திரீகள் மஹாநாட்டின்போது எடுத்தபடம்.



# சில மஹாராஷ்டிர பக்ஷணங்கள்

ஸ்ரீமதி துவாரகாபாய்

## உருளைக்கிழங்கு சிவடா

இது ஒரு கார பக்ஷணம். இது செய்வதற்கு கீழ்கண்ட சாமான்களைச் சேகரித்துக் கொள்ளவேண்டும். ஒரு சேர் உருளைக்கிழங்கு; நன்ருக முத்திக்காய்ந்து சுத்திசெய்யப்பட்ட கொப்பரைத் தேங்காய்; கொஞ்சம் பச்சைமிளகாய்; கொத்தமல்லித்தழை, சீரகம், கடுகு, பெருங்காயம், மஞ்சள்பொடி, உப்பு; நன்ருக உறித்துத் தோல் நீக்கப்பட்ட வேற்கடலைப் பருப்புகள் கால்சேர்; கால்சேர் நன்கு தீட்டப்பட்ட நாட்டு உளுந்து; ஒரு கப் சுத்தமான வெண்ணை காய்ச்சின நெய்.

உருளைக்கிழங்குகளை ஜலத்தில் போட்டு நன்ருகக் கழுவிவிட்டு நல்ல துணியால் ஈரம் போகும்படி துடைத்துவிடு. பின்னர் அவைகளை சிறுசிறு துண்டங்களாக நறுக்கி ஒரு வெள்ளையான துணியில் பரப்பிப்போட்டுக் காய வைக்கவேண்டும். அரைமணி நேரம் உலர்ந்தால் அதிலுள்ள ஈரம் போய்விடும். நெய்யை இருப்புச் சட்டியில் போட்டு காய வைக்கவும். சரியானபடி காய்ந்தவுடன் உருளைக்கிழங்கு துண்டுகளை கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு பொன்நிறமாகும் வரை வறுத்து எடுத்துக்கொள்ளவும். ஒரேயடியாக அவ்வளவையும் போட்டுவிட்டால் கருகிவிடும். நெய் அதிகமாக காய்ந்துபோய் விடாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். பிறகு தனியாக வேற்கடலைப் பருப்புகளைக் கொட்டி பக்குவமாக வருக்கவும். தகுந்த அளவு கடுகு, ஜீரகம், மஞ்சள்பொடி, பெருங்காயம், நறுக்கிக்கொண்ட பச்சை மிளகாய், கொத்தமல்லி முதலியவற்றை ஒரு பாணலியில் போட்டு நெய்விட்டு நன்ருக வதக்கிக்கொள்ளவும். கொப்பரைத் தேங்காயை சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக்கொண்டு அவற்றையும், வறுத்து எடுத்து வைத்திருக்கும் உருளைக்கிழங்கு சீவல்களையும், வேற்கடலைப் பருப்பையும் பாணலியில் போட்டு வேண்டிய அளவு உப்பு (பொடிபண்ணினது) போடவேண்டியது. பின்னர் இளஞ் சூட்டில் கொஞ்ச நேரம் எல்லாவற்றையும் பிரட்டிக்கொண்டிருந்து இறக்கிவிடவும். அவாள் அவாளிஷ்டம்போல் ருசிக்கு ஒரு டீஸ்பூன் முதல் சர்க்கரை இத்துடன் சேர்த்துக்கொண்டால் அது ஒரு ருசியாக இருக்கும். சர்க்கரை சேர்க்காமலும் சாப்பிடலாம். இந்த உருளைக்கிழங்கு சிவடாவுடன் நல்ல காரம் டீயும் சாப்பிட்டால் வெகு ஜோராயிருக்கும். சரியாகத் தயார் செய்யப்பட்ட சிவடா குறைந்த பக்ஷம் நான்கு நாட்கள் கெட்டுப்போகாமலிருக்கும்.

## உருளைக்கிழங்கு அவல்

இதுவும் கார பதார்த்தம்தான்; செய்வதும் எளிது; செலவும் குறைவு; உண்பதற்கு வெகு ருசியாக இருக்கும். அவ

சியமான பொருள்கள்:—கால் சேர் நல்ல அவல்; நாலு பெரிய பங்களூர் உருளைக்கிழங்கு; அத்தனை பெரிய நாலு பெங்களூர் வெங்காயம்; ஒரு பிடி வேற்கடலைப்பருப்பு; கொஞ்சம் உளுத்தம்பருப்பு; பச்சைக்கொத்தமல்லி, பச்சைமிளகாய், கடுகு, சீரகம், மஞ்சள்பொடி, பெருங்காயம் இவை ஒவ்வொன்றிலும் கொஞ்சம்; ஒரு கப் நிறைய தேங்காய்த் துண்டுகள்; தேங்காய் எண்ணை அல்லது நெய்; கொஞ்சம் பொடி பண்ணின உப்பும், சர்க்கரையும்.

அவலை நன்றாக சுத்தஜலம் விட்டுக்கழுவி (இரண்டு மூன்றுதரம்) ஜலத்தை அடியோடு வடிகட்டி விடவேண்டும். நாலு உருளைக்கிழங்குகளையும் வேகவைத்து சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டியது. வெங்காயத்தையும் பச்சைமிளகாயையும் பொடியாக நறுக்கிக்கொள். ஒரு தகுந்த இருப்புச் சட்டியில் தேவையான கடுகு, சீரகம், மிளகாய், வேற்கடலைப்பருப்பு இவற்றைப் போட்டுஎடுத்து வைத்திருக்கும் தில எண்ணையில் வறுக்கவும். ரொம்பவும் சிவந்துபோய் விடக்கூடாது. பிறகு வெங்காயத் தூளையும் கொட்டவும். அதுவும் பொன்னிறமாகும் வரை வதக்கப்படவேண்டும். அதில் கழுவப்பட்ட அவல், தேங்காய் சீவல்கள், வேண்டிய அளவு உப்பு, சர்க்கரை போடவும். இவைகள் எல்லாம் கலந்ததை இளஞ் சூட்டில் சுமார் பதினைந்து நிமிஷங்கள் அடுப்பில் வைத்திருக்க வேண்டும். அது அடுப்பிலிருக்கும்போது கருகிப் போய் விடாமல் அதை மெள்ளப் பிரட்டிக் கொடுக்கவேண்டும். கிளறிக்கொண்டிருக்கும்போது அவலோ உருளைக்கிழங்குத்துண்டுகளோ உடைந்து தூளாகப் போகாமல் ஜாக்கிரதையாகக் கிண்டிவிட வேண்டும். ஆவி கிளம்ப ஆரம்பித்தவுடன் அதை அடுப்பினின்றும் இறக்கிவிட வேண்டும்.

இப்பொழுது உருளைக்கிழங்கு அவல் தின்பதற்கு தயார். இதைச் சாப்பிட்டு ஒரு கப் 'ஸ்ட்ராங்' காப்பி சாப்பிட்டால் வெகு உற்சாகமாக இருக்கும். பெரிய டீபார்ட்டிகளுக்கும் அதிகச்செலவு இல்லாமல் நிறையத் தயார் செய்யலாம். இத்துடன் முட்டைக்கோஸ், காலி ப்ளவர் கூட சேர்த்துக்கொண்டால் இன்னும் ருசியாக இருக்கும்.

## பாசிப்பருப்பு கீரை வடை

கால் சேர் பாசிப்பயர், கால் சேர் கீரை, பச்சைமிளகாய், கொத்தமல்லி, இளந் தேங்காய், ஜீரகம், பெருங்காயம், உப்பு, அவர் அவர்கள் சக்திக்குத் தக்கபடி நெய்யோ எண்ணையோ எடுத்துக்கொள்ள வேண்டியது.

முதல் நாள் இராத்திரியே பாசிப்பயரை ஜலத்தில் ஊறவைக்கவும். மறுநாள் காலையில் எடுத்து பாசிப்பயரை நன்றாகக் கழுவியெடுத்து ஆட்டுக்கல்லில் போட்டு நன்றாக வடைக்கு அறைப்பது போல் அறைக்கவும். கீரையை நன்றாகக் கழுவி சிறு துண்டுகளாக நறுக்கி மாவுடன் கலந்து பிசைந்துகொள். எண்ணையை அடுப்பில் காயவைத்து வடைகளாகச் செய்து எடுத்துவிடவேண்டியது. கீரைகளுக்கு பதிலாக வெங்காயம், முட்டைக்கோஸ், காலிப்ளவர், பச்சைப்பட்டாணி முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.





## காமாங் காக்கடி

இந்தக் கார பக்ஷணமும் உண்பதற்கு வெகு ருசியாக இருக்கும். வேண்டியவைகள்:—ஒரு பெரிய பிஞ்சு கக்கரிக்காய்; வறுத்த வேற்கடலைப்பருப்பு தூளாக்கப்பட்டது ஒரு கப்; எட்டு பச்சைமிளகாய்; பச்சைக்கொத்தமல்லி, ஒரு டீஸ்பூன் கடுகு, ஜீரகம், கொஞ்சம் மஞ்சள்பொடி, பெருங்காயம், இரண்டு தேக்கரண்டி தில எண்ணை; ஒரு பழுத்த எலுமிச்சம்பழம்; ஒரு தேங்காய் மூடியை பூவாகத் திருகிவைத்துக்கொள்ளவேண்டியது; ஒரு தேக்கரண்டி பொடிபண்ணின உப்பு, கொஞ்சம் சர்க்கரை.

கக்கரிக்காயை துண்டுகளாக நறுக்கிக் கொண்டு, பச்சைமிளகாயையும் நறுக்கி கொத்தமல்லி, தேங்காய் துருவல் இவற்றுடன் ஒரு சுத்தமான கைத்துப்போகாத பாத்திரத்தில் போட்டு உப்பும், மஞ்சள் தூளையும் போடவும். ஒரு எலுமிச்சம் பழத்தையும் அதில் பிழியவும். தனியாக ஒரு இரும்புச் சட்டியில் எடுத்துவைத்துக் கொண்டு ஜீரகம், கடுகு, பெருங்காயத்தை சற்று எண்ணைவிட்டு தாளிக்கவும். அதை எடுத்து கக்கரிக்காய் முதலியன இருக்கும் பாத்திரத்தில் கொட்டவும். அத்துடன் வேற்கடலைப்பருப்புத் தூளையும் சேர்க்கவும். அடுப்பில் இளஞ் சூட்டில் வைத்து கிண்டிவிட்டுக் கொண்டிருந்து எல்லாம் சரிவரச் சாடும்வரை வைத்து எடுத்துவிடவேண்டியது. இதுபோல் கக்கரிக்காய்க்குப் பதிலாக இதே திட்டத்தில் முட்டைக்கோஸ், முளைகிளம்பிய பாசிப் பயிறு, முள்ளங்கி முதலியவற்றைச் சேர்த்துச்செய்து சாப்பிடலாம். இந்த காமாங் காக்கடி ருசியாக இருப்பது மன்னியில் லகுவில் ஜீரணமுமாகக் கூடியது; டிபனுக்குகந்தது.

## வெஜிடபிள் கட்லெட்

ஆறு வெஜிடபிள் கட்லெட்கள்:—ஐந்து பலம் பச்சைப்பட்டாணி (உறித்தது), ஒரு பெரிய காரட்கிழங்கு, ஒரு பீட்ரூட் கிழங்கு, சின்ன முட்டைக்கோஸ் ஒன்று, மூன்று உருளைக்கிழங்குகள், ஒரு டேபிள்ஸ்பூன் மசாலாத்தூள், இரண்டு பெங்களூர் வெங்காயம், மரிக்கன் மாவு.

முதலில் மரிக்கன் மாவைத் திக்காக கரைத்து வைத்துக்கொள். உருளைக்கிழங்கு தவிர மற்றக் காய்கறிகளை தகுந்தபடி உப்புப்போட்டு வேகவை. அதற்கு முன்னால் அவற்றை சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள். வேகவைக்கும் போது தண்ணி அதிகம் கலக்காதே. உருளைக்கிழங்கை தனியாக வேகவைத்து எடுத்து மசித்துக்கொள். வேகவைத்த காய்கறிகளையும் உருளைக்கிழங்கு மசியலையும் கலந்துவிடு. வெங்காயத்தை நறுக்கி நெய்யில் வதக்கி எல்லாவற்றையும் பாணலியில் போட்டு மசாலா பவுடரையும் போட்டுப் பிரட்டு. கொஞ்சம் எலுமிச்சம்பழமும் பிளிந்துகொள். பின் அதை முட்டை வடிவமாக உருட்டி மரிக்கன் மாவில் நனைத்து நெய்யில் வறுத்து எடுத்துவிடவும். நன்றாயிருப்பதற்கு கேட்கவா வேண்டும்?

# வைத்தியப் பகுதி

ஸ்ரீமதி எஸ். கமலா

## ஆரோக்கிய குழந்தையும், வியாதிபட்ட சிசுவும்

சகோதரிகளே!

குழந்தைகள் தான் பெண்களுக்கு ஒப்பிலாச் செல்வம், ஈடில்லா மாணிக்கம்; இணையில்லா ரத்தினம். அவற்றை ஆரோக்கியமாக வளர்ப்பது தாய்மார்களின் முதற் கடமையாகும் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. பால்யத்தில் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டால் அக்குழந்தைகள் பின்னும் மிகவும் கஷ்டப்பட நேரிடும். ஒரு ஆரோக்கியமான குழந்தையை "நீ ஏன் அப்படி இருக்கிறாய்" என்று கேட்டால் அதனுடைய பதில் கீழ்கண்டவாறு இருக்கும்.

"என் தாயார் நல்ல சத்துள்ள ஆகாரங்கள் சாப்பிடுகிறாள். அவள் அதிகமாக பால், தயிர், நெய், ரொட்டி, பச்சைக் காய்கறிகள் சேர்த்துக் கொள்கிறாள். தாங்க முடியாத வேலைகள் செய்வதில்லை. நான் பிறக்கும்பொழுது அவள் நன்கு பயிற்சி பெற்ற மருத்துவச்சியினால் கவனிக்கப்பட்டாள். நான் சுத்தமானதும் காற்றோட்டமானதுமான வீட்டில் வசிக்கிறேன். எனக்கு ஒழுங்காக காலை ஆறு மணி, ஒன்பது மணி, மத்தியானம் பனிரண்டு மணி, மாலை மூன்று மணி, ஆறு மணி, இரவு பத்து மணிக்கு ஆகாரம் கொடுக்கப்படுகிறது. நான் என் தாய்ப்பாலையே சாப்பிட்டு வளருகிறேன். அது தான் நல்ல உணவு, சுத்தமானது, புதிது; எப்பவும் கிடைக்கும்; செலவுமில்லை. என் தாய்க்கு உடம்பு சௌக்கியமில்லா விட்டால் நான் தாய்பாலுக்கு பதிலாக சுத்தமான பசும்பால் அல்லது, ஆரஞ்சு அல்லது எலுமிச்சம்பள ரசம் சாப்பிடுகிறேன். பசும்பால் சாப்பிடும் சமயம் அது நன்றாக காய்ச்சப்பட்டு ஈ, கொசு முதலியனவும், தூசு தும்புகள் விழாதபடியும் சுத்தமான பாத்திரங்களில் வைக்கப்பட்டு உணவு கொடுக்கும் பாட்டில் (Feeding bottle) மூலம் எனக்குக் கொடுக்கப்படுகிறது. நான் தினசரி ஸ்நானம் செய்விக்கப்படுகிறேன். என் சர்மமும், ரோமக்கால்களும் சுத்தமாக இருக்கின்றன. தோய்த்த ஆடைகளை லூசாக அணிகிறேன். எனக்கு எதேஷ்டமாக சூரிய வெளிச்சமும், சுத்த ஆகாயமும் கிடைக்கிறது. எனக்குப் போதுமான ஓய்வும் தூக்கமும் இருக்கிறது. எனக்குப் பொய் முலைக்காம்புகள் (Pacifiers) கொடுத்ததே கிடையாது. என் தாய் எனக்கு நல்ல ஒழுக்கங்களை கற்பித்திருக்கிறாள். ஆகையால் நான் ஆரோக்கியமாயும், ஆனந்தமாயும் இருக்கிறேன்."

ஆரோக்கிய மற்ற குழந்தை கூறுவதாவது:— என் தாயார் காரமும், மசாலாக்களும் சேர்ந்த பதார்த்தங்களும், தித்திப்பு பண்டங்களும் அதிகம் சாப்பிடுகிறாள். சத்துள்ள பதார்த்தங்கள் சாப்பிடுவதில்லை. கடுமையான வேலைகள் செய்கிறாள். பிரசவசமயத்தில் அம்பட்ட மருத்துவச்சி கவனித்தாளாம். நான் குடியிருக்கும் வீடு காற்று, வெளிச்சமற்றது. எனக்கு ஆகாரம் கொடுப்பதற்கு நேரா நேரம் கிடையாது. அழுதபோதெல்லாம் உணவுதான். என் தாயாரும் எனக்குப் பால் கொடுப்பதில்லை; பசும்பாலும் எனக்குக் கொடுக்கப்படவில்லை. புட்டிப்பால், சாதம், இட்டலி தோசை முதலியன சிறு பிராயத்திலேயே கொடுக்கப்பட்டதால் நான் வயிற்றுக்கட்டியினால் வருந்துகிறேன். எனக்குக் கொடுக்கப்படும் ஆகாரங்கள் அசுத்தமான பாத்திரங்களில் கொடுக்கப்படுகின்றன. அவைகளில் ஈக்களும், கொசுக்களும் உட்காருவதன்னியில் தூசியும் படிகிறது. ஆகையால் எனக்கு வயிற்றுப் போக்கு உண்டாகிறது. என்னை தினசரி குளிப்பாட்டுவது கிடையாது. அதனால் சொறி சிறங்கு உடம்பு பூராவும் இருக்கிறது. தலையில் பொடுகு இருக்கிறது. என் ஆடைகளும் அழுக்கடைந்தவைகள். சிறங்கு வருகிறது. போதிய சூரிய வெளிச்சமும், தூயகாற்றும் கிடைக்காததால் நான் கண நோய், பாலக்கிரஹம் (Rickets) முதலியவற்றுக்குட்பட்டு அவஸ்தைப்படுகிறேன். எனக்கு வேண்டிய அளவு ஓய்வும் தூக்கமுமில்லாததால் எப்பொழுதும் பலஹீனமாக இருக்கிறேன். என் தாயார் என்னை அழாமலிருக்கச் செய்ய ரப்பர் முலைக்காம்புகளை (Teats) என் வாயில் வைத்து விட்டுப் போவாள். அதனால் எனக்கு வயிற்றிழைச்சல் (Dysentry) ஏற்பட்டுக் கஷ்டப்படுவேன். நல்ல பழக்கவழக்கங்கள் எனக்கு போதிக்கப்படவில்லை. ஆகையால் நான் வியாதியுடனும், உற்சாகமின்றியும் இருந்து வருகிறேன்.

மேற்கண்ட சொற்களினின்று ஆரோக்கியமாக குழந்தைகளை வளர்க்க விரும்பும் தாய்மார்கள் என்ன என்ன செய்யவேண்டும் எது, எதைச் செய்யக்கூடாது என்பது தெரிகிறதல்லவா? நம் சகோதரிகள் இது விஷயங்களில் சற்று கவனம் செலுத்தினால் தங்கள் புத்திரபாக்கியங்களை இழக்காமல் போற்றி இன்புறுவார்கள்.



# செய்தித்திரட்டு

## யுனிவர்ஸிடி கோர்ட் ஸ்திரீ அங்கத்தினர்

டக்கா யுனிவர்ஸிடி கோர்ட்டுக்கு ஸ்ரீமதி ஹஸினா மூர்ஷெட், எம். எல். ஏ., அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த ஸ்தானத்தை வகிக்கும் முதல் வங்காள மகமதிய ஸ்திரீ இவர்தான்.

... ... ...

## சோவியத் பார்லிமெண்டு

சோவியத் ரஷ்யாவில் ஸ்திரீகள் எல்லா இலாகாகளிலும் இருக்கிறார்கள். சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் சட்ட நிரூபண சபைக்கு 184 ஸ்திரீகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மொத்த ஸ்தானங்கள் சுமார் 1100.

... ... ...

## சியாமகுமாரி-ஜமீல்கான் மணம்

பண்டித மோதிலால் நேருவின் உறவினரானவரும் அட்வகேட்டுமான சியாம் குமாரி, ஜமீல்கான் என்ற முகமதியரை டிசம்பர் 15௳ ராபெரிலியில் சிவில் விவாஹச் சட்டப்படி மணந்து கொண்டார். கல்யாணம் வெகு எளிய முறையில் நடந்தது. விவாஹ ரிஜிஸ்டரில் ராம்பூர் மந்திரி திரு ஜலில்கான், கேப்டன் ஏ. கே. நேரு, மஞ்துஸபர் மூவரும் சாட்சிகளாகக் கையெழுத்திட்டனர். இருவரும் தங்கள் மதத்தை கைவிட்டதாகச் சொன்னார்கள். ஜலீல்கான் போலீஸ் டெபுடி சூப்பரிண்டெண்டாக வேலை பார்க்கிறார்.

... ... ...

## 115 வயது வாழ்ந்தவர்

சூரத்தில் 115 வயதான அப்துல் கபூர் மஹமத்பாய் என்றவர் சமீபத்தில் இறந்து போனார். அவர் தளர்ந்தவரானாலும் சென்ற தேர்தலில் ஓட்டுப்போட போலிங் ஸ்டேஷனுக்குச் சென்றாராம். 1857-ல் நடந்த சிப்பாய் கலகம் இவருக்கு நன்றாய் ஞாபகமிருந்ததாம். அந்த ஜில்லாவிலேயே அவர்தான் மிகுந்த வயதானவர்.

... ... ...

## ஸ்திரீகளுக்கு கட்டாய ராணுவ பயிற்சி

துருக்கி குடியரசின் 14-வது ஆண்டு விழாவின் போது 2000 ஸ்திரீகள் ராணுவ உடையில் கெமால்பாஷாவை வணங்கினர். இவர்கள் குடியரசு நிலை நாட்ட போராடியவர்கள். ஆகாயப்படையிலும் ஸ்திரீகள் இருக்கிறார்கள். கூடிய விரைவில் ஸ்திரீகள் யாவரும் கட்டாய ராணுவப்பயிற்சி பெறவேண்டுமென்ற உத்தரவை கெமால் பாஷா பிறப்பிப்பார் என்று சொல்லப்படுகிறது.

... ... ...

## 50 வருஷம் ஆண்வேடம்

லூஸி என்ற பிரஞ்சுமாது சுமார் 50 வருஷங்கள் பாரிஸ், லண்டன் முதலிய



நகரங்களில் ஆண்வேடம் தரித்துக் கொண்டு "சாமர்த்தியமான பட்லர்" என்று பெயர் எடுத்தாள். அவள் ஆல்ப்ர்ட் க்ருவார்ட் என்ற மாறுபெயர் வைத்துக் கொண்டாள். நோய்வாய்ப் பட்டவுடன் வைத்தியம் செய்து கொள்ள முதலாளி சொன்னார். பட்லர் மறுத்து விட்டு பிரக்ஞை தவறிக்கிடந்த சமயம் டாக்டர் வந்து பார்த்து "அவளா"யிருப்பதைக் கண்டு பிடித்தார். ஆனால் லூஸி இறந்து விட்டாள்.

... ... ...

## மலடுக்கு மருந்து

சிகாகோ நகரைச் சேர்ந்த டாக்டர் மாரிஸ் எ. டேவிஸ் என்பவர் ஒரு புது மருந்து கண்டு பிடித்திருக்கிறார். அது சூல்கொண்டுள்ள குதிரையினின்றும் எடுக்கப்படும் ஒருவித திரவம். அதைக் கொண்டு ஒரு "இஞ்செக்ஷன்" செய்தாலே எப்பேர்பட்ட மலடியும் மலடு நீங்கிக் கருத்தரிக்கிறாள் என்று அவர் ஆராய்ச்சி அனுபவமூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். மலடுமட்டும் நீங்குவதன்னியில் அம்மருந்தால் இரு குழந்தைகள்கூட ஜனிக்கச் செய்யலாம் என்று அவர் கூறுகிறார்.

... ... ...

## "குழந்தை பெறமாட்டோம்"

நியூயார்க் நகரத்தில் ஏழைகள் வசிக்கும் பாகத்தில் குடியிருக்கும் ஸ்திரீகள் ஒரு நூதன 'வேலை நிறுத்தம்' செய்யப் போவதாக நகர அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்கள். தங்களுக்கு குடியிருக்க வசதியான இல்லங்கள் முனிசிபாலிட்டியார் கட்டித்தரும் வரையில் கர்ப்பத்தடை அனுஷ்டிக்கப் போகிறார்களாம். "எங்கள் வீட்டுத் தொட்டில்கள் சும்மாகிடக்கட்டும். குழந்தைகளைப் பெற்றுக் கஷ்டப் படவிட்டு தவிக்கவும் திருடவும் ஏன் விடவேண்டும்" என்று அவர்கள் கேட்கிறார்கள்.

... ... ...

## போஸ்டேஜ் ஸ்டாம்புகள்

இந்தியாவில் முதல் முதல் தபால் தலைகள் தோன்றியது 1852-ம் வருஷம் ஜுலைமீ 1௳. அது சர் பார்ட்டில் பரெரி என்ற சிந்து கமிஷனரால் ½ அணா மதிப்பில் வெளியிடப்பட்டது. இதுவே ஆசியாக் கண்டத்தில் முதல் தபால் தலை. பின் 1854-ம் வருஷம் ஏப்ரல்மீ கிழக்கிந்தியக் கம்பெனியார் பொதுவாக ½, 1, 2, 4, அணா ஸ்டாம்புகள் வெளியிட்டனர். இப்பொழுது அவைகள் நாசிக்கிலுள்ள செக்யூரிட்டி ப்ரிண்டிங் அச்சுக்கூடத்தில் தயார் செய்யப்படுகின்றன.

... ... ...

## 'காதல் பாட்டு வேண்டாம்.'

ஜப்பானிய சர்க்கார் பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கெல்லாம் ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். அதன்படி பாலர்கட்கு காதல் பாட்டுகள் சொல்லிக் கொடுக்கக் கூடாதென்றும், யுத்த பேரிகை கீதங்கள்தான் சொல்லிவைக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

... ... ...

## மணிக்கு 230 மைல்!

எர்னஸ்ட் ஹென்ரி என்ற ஜெர்மனியர் தன் நூதன மோட்டார் சைக்கிளில் மணிக்கு 230 மைல் வீதம் போனார். வாயுவேகம், மனோவேகம்!

# கதம்பம்

## வட்டிக்குப் பதில் பெண்கள்?

கெய்க்வாரைச் சேர்ந்த சையத்பூர் என்ற ஊரில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள் அநியாய வட்டி வசூலிக்கின்றனராம். சில கடன்காரர்களால் வட்டியே கொடுக்க முடியாமலிருப்பதால் தங்களுடைய பெண்களை அந்தப் பணக்கார லேவாதேவிக்காரர்களிடம் வட்டிப் பணத்துக்காக விற்று விடுகின்றனர். இது வரை நூற்றுக்கணக்கான பெற்றோர்கள் இவ்வண்ணம் தங்கள் பெண்களை விற்றிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

... ... ...

## கிழவன், கிழவி மணம்

95 வயதான மிஸ்டர் ஜார்ஜ் ஸேம்ஸன் என்ற மானுமி 66 வயதான மிஸ் எலினர் விதாம் என்ற மாதை எஸ்ஸெக்ஸில் செயின்ட் ஆண்ட்ரூஸ் மாதாகோவிலில் மணம் புரிந்து கொண்டார். சாம்ஸனின் 60 வயதுக்குமாரன்தான் மாப்பிள்ளைத் தோழனாக இருந்தானாம். மணத்துக்குப் பின் இருவரும் குதூகலமாயிருந்தார்களாம். ஆசை நரைக்கவில்லை!

... ... ...

## முத்தத்துக்கு தண்டனை

மிஸ் ஜூலியா க்ளார்க் என்ற மங்கை அயர்லாந்து டண்டாக் ஜில்லா கோர்ட்டு நீதிபதியால் ஒரு மாதாகோவில் வெளியில் தன் காதலனை முத்தமிட்டதற்காக ஒரு சட்டப்படி குற்றஞ் சாட்டப்பட்டு ஒரு மாதசிறை தண்டனை விதிக்கப்பட்டாள். இக்குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டவள் இவளே முதல். ஆனால் க்ளார்க் அயர்லாந்தை விட்டு தப்பியோடி விட்டாள். சினிமா நடிகர்களே உஷார்!

... ... ...

## கூலிக்கு ஒப்பாரி!

போலந்தில் வார்ஸாவில் ஒருவன் தன்னை 'இறந்தவர்களின் அரசன்' என்று சொல்லிக்கொள்கிறான். அவன் குழி தோண்டும் தொழிலாளி. இதுவரையில் அவன் 68000 பேர்களுக்குக் குழி தோண்டியிருக்கிறானாம். கூலிக்கு ஒப்பாரி வைக்க சில ஸ்திரீகளையும் அவன் வேலைக் கமர்த்தியிருந்தானாம். இந்த வேலைக்கு சில பெண்கள் வாரத்துக்கு 4 பவுன்களுக்கு மேல் கூலி பெற்றார்களாம். நல்ல உத்தியோகம்! நல்ல யஜமான்!!

... ... ...

## 'காதலர்கள் ஜாக்கிரதை' மணி

அமெரிக்காவில் சில தேசங்களில் இன்டெர்வலுக்கு முன்னும், காட்சி முடிந்து விளக்குகள் போடப்படு முன்னும் "காதலர்கள் ஜாக்கிரதை" மணி அடிக்கப்படுகிறதாம். ஹவானா நகரில் ஒரு காட்சி சாலையில் அந்த மணி அடிக்காமல் லைட் போட்ட குற்றத்துக்காக, ஒரு பெரிய மனுஷர் ரொம்பவும் நகைப்புக்கிடமான நிலைமையில் இருக்க நேரிட்டதால், லைசென்ஸ் ரத்துசெய்யப்பட்டதாம். நம் நாட்டிலும் அந்த விதி இருந்தால் நல்லது தானே!

... ... ...

## நல்ல கடியாரமா?

ஜெர்மனியில் போர்ஷீம் என்ற ஊரைச் சேர்ந்த ஒரு கடிகார உற்பத்தி செய்வோன் தான் செய்த கடியாரங்கள் உறுதியுள்ளவைகளா என்று பரீட்சிக்கும் பொருட்டு ஒரு ஆகாயக் கப்பலில் சுமார் 1000 அடி உயரம் பறந்து மூன்று கடியாரங்களைக் கீழே போட்டான். பின்னர் அவைகளைப் பொறுக்கிப் பார்த்தால் நன்றாக ஓடிக்கொண்டிருந்தனவாம். நம்ப முடியவில்லையா?

... ... ...

## தலைவலி யோகம்

லண்டனில் சில டாக்டர்கள் 'மைக்ரேன்' என்ற தலைவலியைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக தலைவலியை வரவழைத்துக் கொள்ளத் தயாரான பையன் வேண்டுமென்று விளம்பரம் செய்திருந்தார்கள். 100 பேர்கள் மனுச் செய்திருந்தார்கள். அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவனுக்கு இன்று மாதம் பத்து பவுன் சம்பளம், உடை, உணவு, இருப்பிடம் முதலியன அளிக்கப்படுகிறது. ஆராய்ச்சிகளும் நடக்கிறது. பணம் பத்தும் செய்யும்!

... ... ...

## 'திட்டும்' தொழில்

விருந்தினர்கள் வந்தால் அவர்களைத் திட்டுவதற்காக மிஸ்டர் பர்ன்ஸ் என்பவர் நியூயார்க் நகர விருந்துக் கச்சேரிகளில் நியமிக்கப்படுகிறார். இது ஒரு வேடிக்கை. விருந்து நடக்குமிடத்தின் வாசலில் நின்று கொண்டு பர்ன்ஸ் நுழைபவரை ஏதாவது திட்டுவார். அவர்கள் கோபம் வந்து அடிக்கப்போகும் சமயத்தில் பக்கத்தில் முன் திட்டுப்பட்டவர்களெல்லாம் கைகொட்டிச் சிரித்து 'விளையாட்டுத் திட்டு' என்று கூறுவார்களாம். நல்ல நவ நாகரிகம்!





## 263 வருஷம் கடன் வாய்தா

லண்டனில் ஒருவன் தனக்கு மற்றொருவன் 13 பவுன் கடன் கொடுக்க வேண்டுமென்று வெஸ்ட் மினிஸ்டர் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தான். பிரதிவாதி, வாதிக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு பென்னி வீதம் கடனை 263 வருஷங்களுக்குள் செலுத்திவிட வேண்டுமென்று டிக்ரி ஆயிருக்கிறது. நம் நாட்டிலும் அப்படிப்பட்ட ஜட்ஜ்கள் இருந்தால்?

... ... ...

## அழைத்தால் மரணம்!

ஒக்லஹாமாவிலுள்ள ஆடாவிலிருக்கும் கீழ் மத்திய கல்வி சங்கத்தார் (East Central Educational Association) தங்கள் சபைக்கூட்டங்களில் பேச ஆள் கூப்பிடவே சங்கோசப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் ஜோஸப் ராபின்சன், செனட்டர், டாக்டர் செர்ரி, மிஸ் அமீலியா இயர்ஹார்ட் போன்ற ஐந்து பிரபலஸ்தர்களை தங்கள் சபையில் பேசும்படி அழைத்தார்கள். அவர்களும் சம்மதித்தார்கள். ஆனால் அவர்கள் பேசும் நாட்களுக்குமுன் இறந்து போனார்கள். ஆகையால் யாரும் அச்சபையில் பேச ஒத்துக் கொள்ள பயப்படுகிறார்கள். என்ன சாபமோ!

... ... ...

## 8 வயது நடனராணி

பரத்பூரைச் சேர்ந்த குமாரி புஷ்பலதா பத்ரா என்ற எட்டுவயதுச் சிறுமி பரத நாட்டியத்தின் நுட்பங்களை உணர்ந்து வெகு திறமையாக நடனம் செய்கிறாளாம். அயோத்தியா மாஹாணத்தில் பலராமபுரியில் நடைபெற்ற சங்கீதமஹாநாட்டில் நடனத்துக்காக 17 பரிசுகள் குமாரி புஷ்பலதாவுக்கு வழங்கப்பட்டனவாம். பாலகந்தர்வ குமாரியோ?

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

## கொல்பவனுக்கு 3 பவுன்

புடாபெஸ்ட் நகரில் மேரியா மோல்னர் என்ற மங்கைக்கு வாழ்க்கையில் வெறுப் பேற்பட்டுவிட்டது. தற்கொலை செய்து கொள்ளவும் பயம். தன் நண்பனுக்கு மூன்று பவுன் பரிசுகொடுத்து தன்னைக் கொலை செய்யச் செய்து உயிர் துறந்தாள்!

... ... ...

## கரடிகள் மீது வழக்கு

யூகோஸ்லோவியால் காட்டுமிருகங்களை லைசென்ஸில்லாமல் சுட்டால் அபராதமும் சிறை தண்டனையும் கிடைக்கும். தாப்ராவைச் சேர்ந்த பிலிப்போவிச் என்ற குடியானவன் ஒரு கரடிமீதும், அதன் இரு குட்டிகள் மீதும் தன் பயிர்களை அழித்ததற்காக நஷ்டஈடு தாவா தொடுத்திருக்கிறான். சர்க்கார் ஜவாப் சொல்ல வேண்டும்.

... ... ...

## மூவர்ண முட்டைகள்

சவுத் ஆப்ரிக்காவில் ரிவர்ஸ்டேல் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு குடியானவனுடைய வாத்து மூன்று மூட்டைகள் இட்டது. ஒன்று அட்டக்கரி நிறம், மற்றொன்று சிகப்பு, இன்னொன்று பச்சை.

... ... ...

## டெலிபோனில் உருவம்

கலிகால மாறுதல்கள் கணக்கற்றன. முன் காலத்தில் வீட்டுக்குள்ளேயே ஒருவருடன் ஒருவர் பேசவேண்டுமானால் நேரே இருந்தால் தான் முடியும். இப்பொழுதோ வெனில் சென்னையிலிருந்து உலகத்தின் எந்த பாகத்திலுமுள்ள எவருடனும் டெலிபோன் மூலம் பேசலாம். இன்னொரு விசேஷம் என்ன வென்றால் பேசுவது மட்டுமின்றி அந்தந்த மனிதர் ஒருவரை ஒருவர் போன் மூலம் பார்க்கவும் செய்யலாமாம். லண்டனில் சில போஸ்டாபீஸ்களில் இந்த மாதிரியான டெலிபோன் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியிலும் இம்மாதிரிக் கருவிகள் நிர்மாணிக்கப்படுகின்றன. "வெளியூருக்குப் போகாமலே நண்பர்களுடனும், உறவினருடனும் பார்த்துப் பேசலாமே" என்று தோன்றுகிறதா? நம்தேசத்திலும் வைக்கட்டும் பார்க்கலாம்!

... ... ...

## ராஜகுமாரன் சீர்திருத்த மணம்

ஜயப்பூர் மஹாராஜாவின் சகோதரர் ராஜகுமாரர் யஸ்வந்தசிங், கோஹினூர் இந்தியன் ரெஸ்டாரன்ட் (லண்டன்) ப்ரொப்ரைட்டர் கிருஷ்ணவீர் குமாரி, காஷ்மீரான் என்ற மங்கையை மணந்து கொண்டார். யஸ்வந்த் ராஜபுத்திரர்; குமாரி காஷ்மீரன் காயஸ்த வகுப்பைச் சேர்ந்தவர். இவர் அரசகுமாரர், அவள் ஹோட்டல் முதலாளியின் மகள். இந்த விவாஹத்துக்கு சர் ஷாடிலால், ஸ்ரீமதி ராமராவ் முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.



## 100 பவுண்டு எடை நாணயம்

கருங்கல்லால் செதுக்கப்பட்ட நாணயங்கள் யாப் தீவிலிருந்ததாகத் தெரிகிறது. இந்தத் தீவு பஸிபிக்மஹா சமுத்திரத்தில் இருக்கிறது. ஜப்பானியருக்குச் சொந்தம். இந்த நாணயங்கள் உருண்டை வடிவமாக நடுவில் ஒரு சிறு துவாரத்துடனிருக்கின்றன. அவைகள் 5 பவுண்டு எடை முதல் 15 டன் நிறைவரை பலவிதங்களிருக்கின்றன. அவைகள் யாப் தீவிலிருந்து ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன் நகரத்தின் தேசிய மியூஸியத்துக்கு கப்பலில்கொண்டு போகப்படுகின்றன. இவைகள் பழங்காலத்துக் குடிகளால் உபயோகப் படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. இவைகள் குடிசைகளுக்கு முன்புறங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவாம். திருடர் கொண்டுபோக முடியாதல்லவா?

... ... ...

## திருந்திய திருடன்

இங்கிலாந்தில் ப்ராட்போர்ட் என்ற
_த்தில் மிஸ்டர். ஜி. இ. ஸ்மித் என்ற
,டைய வீட்டில் 1921-ம் வருஷம் ஒரு
,டன் புகுந்து கொஞ்சம் பணம் திரு
சென்று விட்டான். தற்சமயம்
'த், ஷிப்லி என்ற இடத்தில் வசிக்கி
. சில நாட்களுக்கு முன் அவருடைய
'ல் பெட்டியில் ஒரு கவர் கிடந்தது.
,த எடுத்துப்பார்த்த பொழுது அதில்
பவுன் நோட்டும், ஒரு குறிப்பும்
ந்தது. அந்தக் குறிப்பில் "1921-ம் வருஷம் தங்களிடமிருந்து எடுத்துக் கொண்டு போன பணம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்டிருந்தது. ஸ்மித் உழைத்துச் சம்பாதித்த பணம்!

... ... ...

## "பெண்ணாகமாட்டேன்"

துருக்கியில் இஸ்தான்பூல் கோர்ட்டில் ஒரு விசித்திர வழக்கு நடந்தது. அதில் மேலக் என்ற 24 வயது யுவதி ஆண் வேடம் தரித்துக்கொண்டு ஸ்மிர்னாவைச் சேர்ந்த ஒரு பணக்கார பதினாறு வயது மங்கையைத் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாள். அவள் சிறு வயதிலிருந்தே ஆண் வேடத்திலேயே வளர்க்கப்பட்டு வந்தாள். பள்ளிக்கூடத்திலும் பையன் போலவே படித்து சட்டக் கல்லூரியிலும் பெண் என்று அறியாதபடி சேர்த்துக்கொள்ளப்பட்டாள். பள்ளிக்கூடத்திலும், காலேஜிலும் அவள் இதர மாணவர்களுடன் விளையாட்டுகளில் கலந்து கொள்வாள். குறிப்பாக கால் பந்து (Foot ball) விளையாட்டில் அவள் பிரதம விளையாட்டுக் காரனாயிருந்தாளாம். குஸ்தியும் போடுவாளாம். கோர்ட்டுக்கு வந்தபோதும் ஆண் உடையில் தான் நல்ல ட்வீட் சூட்போட்டுக்கொண்டு வந்தாள். கோர்ட்டார் அவளை நன்னடத்தைக்காக ஜாமீன் தரும்படி உத்தரவிட்ட பொழுது அவள் "நான் பெண்ணாக மாட்டேன். நான் ஆடவன்தான்" என்று கூச்சலிட்டாளாம்.

# சினிமா செய்திகள்

## பூகைலாஸ்

அடையார் சுந்தரம் சவுண்டு ஸ்டூடியோஸார் "மண்டோதரி பரிணயம் அல்லது பூகைலாஸ்" என்ற படத்தை தயாரித்து வருகின்றனர். ஹம்சதமயந்தி, சந்தானம் முதலியவர்கள் நடிக்கிறார்கள்.

## நந்தகுமார்

இப்படம் பெங்களூர் பிரகதி பிக்சர்ஸ் லிமிடெடால் பிடிக்கப்பட்டு பூர்த்தியடைந்துவிட்டது. கூடிய விரைவில் வெள்ளித்திரையில் வெளிவரும். மாஸ்டர் மஹாலிங்கம், ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி முதலியவர்கள் நடிக்கிறார்கள். படம் வெகு சிறந்ததாக இருக்குமென்று தெரிகிறது.

## ரம்பையின் காதல்

கோயம்புத்தூர் சென்ட்ரல் ஸ்டூடியோஸார் "ரம்பையின் காதல்" என்ற படத்தை வெகு திறமையுடன் தயாரித்து வருகின்றனர். சிறந்த நடிகர்கள் நடிப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களின் "துக்காராம்" முடிவடைந்து தயாராய் விட்டது.

## ராணி சம்யுக்தை

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் "ராணி சம்யுக்தை அல்லது பிரதிவிராஜ்" என்ற படத்தையும் "திருஞான சம்பந்தர்" என்ற படத்தையும் பிடிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். இவர்களின் 'பாலன்' என்ற முதல் மலையாளப்படம் தயாராய்விட்டது.

## இன்பசாகரன்

சென்னை மஹாலக்ஷ்மி ஸ்டூடியோஸார் "இன்பசாகரன்" என்ற தேசிய நாடகத்தை சினிமாபடமாக தமிழில் எடுக்கப் போகிறார்கள். திரு. கே. சுப்ரமண்யம் படத்தை டைரக்ட் செய்வார்.

## பக்த மீரா

சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட் "பக்த மீரா" படம் பிடிக்க ஆரம்பித்து சில காட்சிகள் எடுக்கப்பட்டுவிட்டன. திரு. ஒய். வி. ராவ் படத்தை சிறந்த முறையில் தயாரிக்க தீவிர பிரயாசை எடுத்து வருகிறார்.

## ஸ்ரீவிஷ்ணு லீலா

ஆர்ஸ் டாக்கீஸ் லிமிடெட் "விஷ்ணு லீலா" அனேகமாக பூர்த்தியாகிவிட்டது. கூடிய விரைவில் பல ஊர்களிலும் வெளிவரும்.

## முட்டாள் மருமகன்

கோயம்புத்தூர் ப்ரீமியர் ஸினிடோன் கம்பெனியார் "என் காதல்" "முட்டாள் மருமகன்" என்ற இரு சமூகக் கதைகளை தமிழ் படமாகத் தயாரித்திருக்கின்றனர். அவைகள் புது வருஷ விருந்து என்று சொல்லக் கூடியவைகளாம்!

# ஆசிரியர் குறிப்புகள்

## வரதக்ஷிணைத் தடைமசோதா

வரதட்சிணைப்பேய் வருடா வருடம் அநேக பெண்மணிகளை விழுங்குகிறது. அனேக யுவதிகள் வரதட்சிணை கொடுக்க சக்தியின்றி வெகுகாலம்வரை மணம் செய்யப்படாமல் வைக்கப் படுகின்றனர். தாய் தந்தையர் தங்கள் குமாரிகளின் நிலையைக்கண்டு ஏங்கித் தவிக்கின்றனர். புத்திரிகள் தங்களால் கவலைவாய்ப்பட்டு கண்ணீர் வடிக்கும் பெற்றோர்களைக்கண்டு கலங்கியழுவது மன்னியில் காலாகாலத்தில் ஒத்தகணவனை அடைந்து இன்ப வாழ்வு நுகரவழியில்லையே என்று வாடி நிற்கின்றனர். அனேக இளம்பெண்கள் இவ்விதமாக இருதலைக்கொள்ளி எறும்புபோல் இருந்து கஷ்டப்படுவதைவிட இறப்பதேமேல் என்று கருதி தற்கொலை புரிந்துகொள்ளும் செய்திகளை நாம் அடிக்கடி பத்திரிகைகளில் வாசிக்கின்றோம். இந்த தீய 'கல்யாணவரி' ஹிந்து சமூகத்தில் பெருங்கேட்டை விளைத்து வருகிறது. நாகரிகமுள்ள எந்த யுவனும் தன்னைப் பணத்துக்காக பெண்ணுக்கு (பெண்வீட்டார்க்கு) விற்றுக்கொள்ளச் சம்மதிக்க மாட்டான். தர்மநியாயம் சிறிது கவனிப்பவரும் இந்த கட்டாய 'மாப்பிள்ளை விலை' முறையை ஆதரிக்க மாட்டார்கள். இதன் கொடுமையை ஒவ்வொருவரும் உணர்ந்திருந்தபோதிலும் கிரியாம்சையில் படித்தவர் எல்லோரும் அம்முறையை அடியோடு கைவிட சற்றுத் தயங்கித்தானிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயம். வெறும் பிரசாரம் பயனளிக்காத விஷயங்களில் இது ஒன்று. எனவே இந்த அநீதியான பழக்கத்தை ஒழிக்க இனி சட்டமியற்ற வேண்டியதுதான் என்று சிந்து மாகாண சட்டசபை ஹிந்து அங்கத்தினர் ஒருவர் துணிந்து முன்வந்துள்ளார். 'வரதட்சிணை ஒழிப்புமசோதா' என்று ஒருமசோதாவை சட்டசபையில் கொண்டுவரப்போவதாக அவர் அறிவித்திருக்கிறார். அம்மசோதாவின் நோக்கம் வரதட்சிணை வாங்குவதோ, கொடுப்பதோ, அல்லது தானாக இஷ்டப்பட்டு பெண் வீட்டார் கொடுப்பதோ சட்டப்படி தண்டனைக்குட்படும் குற்றங்களாக்கப்பட வேண்டுமென்பதே. இம்மசோதா வெகு தீவிரமானதாக இருக்குமென்று மாதர்கள் எதிர்பார்க்கிறார்கள். சாரதாசட்டம்போலில்லாமல் இன்னும் கடுமையாக இச்சட்டம் இருக்குமானால் யாவரும் மகிழ்ச்சியடைவார்கள். இதுபோன்ற சட்டங்கள் நம்மாகாணத்திலும் கொண்டுவர வேண்டுமென்று நாம் கருதுகிறோம். எவ்வளவோ சொல்லியும், எழுதியும் வரதட்சிணைப் பேய் நாட்டைவிட்டு அகலமாட்டேனென்கிறது. அதை ஆதரித்து நிற்பவர்கள் பெரும்பாலும் படித்தவர்களென்பதும் உண்மை. தானாகச் செய்ய முன் வரவில்லையென்றால் எப்படி கட்குடியை சட்டபூர்வமாக ஒழிக்க சர்க்கார் முன்வந்தனரோ அதைப்போல் இதுபோன்ற சமூக ஊழல்களையும் ஒழிக்க சட்டம் செய்யவேண்டியதுதான். சிந்து மாகாண அங்கத்தினரின் வழியைப் பின்பற்றி இது போன்ற விஷயங்களில் சீர்திருத்தத்தைச் செய்ய சட்டரீதியாய் முயற்சியெடுக்க நம் ஸ்திரீ பிரதிநிதிகள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

## ஆலய நிர்வாஹமும், ஸ்திரீகளும்

நம் ஹிந்துமதத்துக்குத் தூண்போன்றவர்கள் ஸ்திரீசமூகம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. தற்சமயம் மதத்தின் பலமாக இருந்துவருபவர்கள் ஸ்திரீகளே. ஆடவர்கள் ஆலயவழிபாடு முதலியவற்றில் சற்று அசட்டையாகவே இருக்கிறார்கள். ஆனால் நம் பெண்மணிகள் அவற்றின்பெருமையை நிலைநிறுத்தி வருகின்றனர். ஆலயவழிபாடு முதலியவற்றில் நம்பிக்கையற்ற ஆடவர்கள்கூட தங்கள் மனைவி, தாயார், சகோதரிகளின் வற்புறுத்தலுக்கு இணங்கி அவைகளை அனுஷ்டித்துவருகிறார்கள்.

உண்மை இவ்வாறிருக்க தேவஸ்தான நிர்வாஹத்தில் மாதருக்கு யாதொரு பிரதிநிதித்துவமும், உரிமையும் இல்லாதிருப்பது மிகவும் வருந்தத்தக்கவிஷயம். எந்த தெய்வத்துக்கும் அம்மனில்லாமலில்லை. ஆண்டவனே தேவியின் சகாயத்துடன் உலகக்ஷேமத்தை கவனித்துவருகிறான் என்றால் தேவாலய நிர்வாஹஸ்தாபனங்களுக்கு ஏன் ஸ்திரீகள் நியமனம் செய்யப்படக்கூடாதென்பதற்கு ஒருவிதநியாயமுமில்லை. சட்டசபைகள், ஜில்லாபோர்டுகள், முனிசிபாலிட்டிகள், பஞ்சாயத்துகள், கல்வி கவுன்சில்கள் முதலியவற்றில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கும்போது இந்த ஸ்தாபனங்களில் அவர்களுக்கு ஏன் இடமில்லை? இதுவிஷயத்தைப்பற்றி போதியஅளவு கிளர்ச்சி இல்லாதது ஒரு காரணம் என்று நமக்குத் தோன்றுகிறது. தேவஸ்தானக் கமிட்டிகள், தர்மகர்த்தா தேர்தல்கள் முதலியவற்றுக்கு ஸ்திரீகளுக்கும் ஓட்டுரிமை வழங்கப்படவேண்டும். இதற்குத் தடையாக தற்சமயம் ஏதாவது சட்டங்களிருப்பினும் சரி, ஸ்கீம்கள் (Schemes of temples) இருந்தாலும் அவைகள் மாற்றப்படவேண்டும். இவர்களுக்கு பிரதிநிதித்துவமும், உரிமைகளும் வழங்குவதால் கோயில்களின் நிர்வாஹம் செம்மையுறுமே தவிர தாழ்மை யடையமாட்டாது என்று உறுதிகூறுகிறோம். நம்மதத்தின் தத்துவங்களைக் காப்பாற்ற ஆண்மக்களைவிட ஸ்திரீகள் அதிக ஆவல் கொண்டவர்களே.

இதுவிஷயத்தில் தூத்துக்குடி சர்க்கிள் தேவஸ்தான கமிட்டியார் செய்திருக்கும் காரியம் மாதர்களால் போற்றற்பாலது. குலசேகர நல்லூர் ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமி கோவில் தர்மகர்த்தரின் ஸ்தானம் காலி விழுந்தது. அந்த ஸ்தானத்துக்கு மேற்படி கமிட்டியார் ஸ்ரீமதி சொர்ணத்தம்மாளை தர்மகர்த்தாவாகத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்திருக்கிறார்கள். இந்த முற்போக்கான செய்கைக்காக மேற்படி கமிட்டியங்கத்தினர்களுக்கும், அதன் தலைவருக்கும் எங்கள் நன்றியையும் வந்தனத்தையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதுபோல் இன்னும் பல ஸ்தானங்களையும் மாதர்களுக்கு அவர்கள் அளிப்பார்களாக. தர்மகர்த்தாவாக ஆகியிருக்கும் ஸ்ரீமதி சொர்ணத்தம்மாளுக்கும் நமது மனப்பூர்வமான மகிழ்ச்சியையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதர தேவஸ்தானக் கமிட்டிகளும் தூத்துக்குடியை பின்பற்றுமா?

ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008 159947



## பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1938௵ ஜனவரி௴ ஈசுவர௵ மார்கழி-தை. திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | மார்கழி 18 | சனி | ● 44-38, மூல 21-33, தி 17-3, ரா 20-17, அமாவாசை. |
| 2 | 19 | ஞாய | பிர 50-21, பூரா 28-37, ரா 22-38, புஷ்யம், சாக்கியர். |
| 3 | 20 | திங் | துவி 55-18, உரா 34-56, ரா 17-46. |
| 4 | 21 | செவ் | திரி 59-12, ஸ்ரீவ 40-23, ரா 23-1. [விரதம். |
| 5 | 22 | புத | சது 60-0, அவி 44-54, திருதினஸ்பிருக், தூர்வா கணபதி |
| 6 | 23 | வியா | சது 1-41, சத 48-17, தி 3-55. |
| 7 | 24 | வெ | பஞ் 3-8, பூட் 50-29, தி 4-52, மஹாவியதீபாதம். |
| 8 | 25 | சனி | ஷஷ் 4-29, உட் 51-22, தி 12-50. |
| 9 | 26 | ஞாய | ஸப் 3-33, ரே 50-44, தி 21-4, வாயிலார். [அவமா. |
| 10 | 27 | திங் | அஷ் 1-5, உப 56-7, அசு 48-46, ரா 10-55, கூடாரவல்லி, |
| 11 | 28 | செவ் | தச 51-52, பர 45-21, தி 11-17. [திருத்திகை. |
| 12 | 29 | புத | ஏகா 45-20, *கிரு 40-41, தி 13-1, வைகுண்ட ஏகாதசி, |
| 13 | 30 | வியா | துவா 37-44, ரோ 34-56, தி 16-51, ரா 19-10, மகர ரேவி 35-51, போகி. [கல் பிரதோஷம், கரிநாள். |
| ஜனவரி 14 | தை 1 | வெ | திர 29-23, மிரு 28-25, ரா 18-43, உத்தராயனம், பொங் |
| 15 | 2 | சனி | சசி 20-34, ஆரு 21-28, ரா 19-56, மாட்டுப்பொங்கல். கரிநாள், திதிதுவயம். |
| 16 | 3 | ஞாய | ○11-52, புந 14-38, ரா 4-5, கரிநாள், எம்பார், தைபூசம். |
| 17 | 4 | திங் | பிர 3-18, உப 52-45, பூச 7-54, ரா 8-47, அவமா. |
| 18 | 5 | செவ் | திரி 50-22, ஆயி 2-39, உப 56-12, ரா 2-25, திருமழிசை |
| 19 | 6 | புத | சது 46-2, பூர 56-32, தி 18-4. [யாழ்வார். |
| 20 | 7 | வியா | பஞ் 43-46, உத் 56-16, தி 14-27, கும்பாயனம் 39-31. |
| 21 | 8 | வெ | ஷஷ் 43-41, ஹஸ் 58-7, தி 17-55, கூரத்தாழ்வார். |
| 22 | 9 | சனி | ஸப் 45-48, சித் 60-0, தி 19-25, நரஹரி. |
| 23 | 10 | ஞாய | அஷ் 49-54, சித் 2-1, தி 17-21. |
| 24 | 11 | திங் | நவ 55-30, ஸ்வா 7-43, தி 23-21, கரிநாள். |
| 25 | 12 | செவ் | தச 60-0, விசா 14-43, தி 26-1, திருதினஸ்பிருக், குரு |
| 26 | 13 | புத | தச 2-6, அநு 22-31, ரா 9-52. [காவலப்பன். |
| 27 | 14 | வியா | ஏகா 9-1, கேட் 30-28, ரா 24-29, ஸர்வைகாதசி. |
| 28 | 15 | வெ | துவா 15-47, மூல 38-4, ரா 5-2, பிரதோஷம். |
| 29 | 16 | சனி | திர 21-50, பூரா 44-54, தி 4-48, சிவராத்திரி. |
| 30 | 17 | ஞாய | சசி 27-0, உரா 50-48, தி 11-16, கரிநாள். |
| 31 | 18 | திங் | ● 31-2, ஸ்ரீவ 55-41, தி 12-26, சோம தை அமாவாசை. |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரி௴ 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்௴ 8௳ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. S. Seshagiri Rao, at the Lodhra Press, Royapettah, Madras.





போலிகளைக் கண்டு உஷார்!!!

## அமிர்தாஞ்சனம்

கேவலம் "கிரஹலக்ஷ்மி"

சகல வலிகளையும் போக்கும்

**அமிர்தாஞ்சனம் லிமிடெட்,**

பம்பாய், மதருஸ், கல்கத்தா.

## கர்ப்ப ஸ்திரீகளுக்கு

ஸ்திரீகள் கர்ப்பந்தரித்த பிறகு அவர்களுடைய சரீராரோக்கியத்தை முக்கியமாய் கவனித்தல் வேண்டும். கர்ப்பம் தரித்தபின் சரீராரோக்கியத்தை உடையவர்கள் நல்ல புத்திர, புத்திரிகா ரத்னங்களைப் பெற்று தீர்க்காயுளுடையவர்களாய் இருப்பார்கள். ஸ்திரீகள் பலஹீன மாயிருப்பதால் கர்ப்பம் தரித்தபின் அநேக வியாதிகளுக்காளாகிறார்கள். முக்கியமாய் இவர்கள் கர்ப்ப ஸ்ராவம், அகால பிரசவம், அடிக்கடி வயிற்றுவலி, ரத்தக்ஷீணம், சரீரத்தில் நீரேற்றம் பலஹீனம், ஆயாசம், அஜீரணம், மலக்கட்டு முதலிய வியாதிகளுக்குட்படுகிறார்கள். இந்த "கர்ப்பரக்ஷக" என்கிற திவ்விய ஔஷதத்தை கர்ப்பம் தரித்தது முதல் சிலநாள் உபயோகித்தால் மேற்கூறிய வியாதிகளை அணுகவிடாமல் இருக்கச் செய்வதேயன்றி பிரசவ காலம் வரையில் சரீரத்தை நல்ல ஆரோக்கிய ஸ்திதியில் வைத்து பூர்ண மாதமான பிறகு சுகப்பிரசவம் சம்பவிக்கச் செய்யும். பிரவசமான பிறகு சாதாரணமாய் வரக்கூடிய கிரஹணி, சூதகவாயுவு முதலியவை சம்பவித்தல் நேரிடாது. இவ்வௌஷதத்தை உபயோகித்தவர்களுக்கு நல்ல சரீர காந்தியும், முகவசீகரமுடைய குழந்தைகள் உற்பத்தியாகும். விலை புட்டி 1-க்கு ரூ. 2.

**கர்ப்பரக்ஷக**

கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - சென்னை

**க்ஷீ ர ப லா**

**(101 தடவை பாகம் செய்யப்பட்டது)**

**பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி**

எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. தேசமெங்கும் புகழ்பெற்றது.

அவுன்ஸ் 1க்கு 3 8 0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ், 107, பிராட்வே, சென்னை.**



# Willingdon SOAP

சோப்புகளின் ராணி—லார்ட் வில்லிங்டன் தம்பதிகள் உபயோகித்து மகிழ்ந்தது. அவர்களின் அன்பான அனுமதியின் பேரிலேயேஇந்த பெயர் கொடுக்கப்பட்டது.




**GUARANTEED**

பரிசுத்தமானது—உத்தமமானது.

கேரளா சோப் இன்ஸ்டிடியூட்,
கள்ளிக்கோட்டை.



அழகான

# அச்சு வேலைகள்

மூவர்ணப் படங்கள்
வியாபார விளம்பரங்கள்
லெட்டர் பேப்பர்கள்
கேட்லாக்
புஸ்தகங்கள்
முதலிய

எல்லா விதமான கலர் அச்சு வேலைகளும், இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு அச்சு வேலைகளையும் உங்கள் அவஸரத்துக்கு தக்கபடி நாங்கள் நன்றாக செய்வோம் என்று உங்கள் அனுபவத்திலேயே தெரிந்து கொள்வீர்கள். ஒரு தடவை பரீக்ஷித்து பாருங்கள்.

விபரத்திற்கு எழுதவும்.

போன் நெ. 3486


# லோத்ரா பிரஸ்

சென்னை








**சுவை மிகுந்த உண்டிகள்—பானங்கள்.**

இணையற்ற ரகம்—வகையான உபசாரம்—
உல்லாசமான இடம்—நல்ல காற்றோட்டம்
முதல் தரமான வசதி.

# சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**




# டோங்ரேயின் பாலாமிருதம் என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கனச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்




ஏன் நீங்களும் இன்றிருந்தே
இதைக் கையாண்டு இதன் அபார
மான பலனை அடையக்கூடாது?

அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

# கேஸரியின் பற்பசை

சகல விதமான பல் வியாதிகளையும் அறவே நீக்கி, பற்களை
பளிங்குபோல் வெண்மைப் படுத்தி, அழகு செய்வது மன்னி
யில் பற்களுக்கு வசீகரத்தையும், பிரகாசத்தையும், மதுரத்தை
யும், அரிய பலத்தையும், தேகத்திற்கு சுகத்தையும், தருகிறது.

விலை டியூப் 1-க்கு அணா 8

QUEEN OF TONICS

